கம்பன் மணி மலர்

குரோதன 1986



கம்பன் புகழ்பாடிக்
கன்னித் தமிழ் வளர்ப்போம்

கம்பன் மணி மலர்

1986

குரோதன பங்குனி 10உ முதல் 13உ வரை
1986 மார்ச் 23 முதல் 26 வரை நிகழ்ந்த
48-ஆவது கம்பன் திருநாள் வெளியீடு

கம்பன் கழகம், கம்பன் மணி மண்டபம், காரைக்குடி-2.

உ

கம்பன் கழகம்

பாளையங்கோட்டை.

ஸ்ரீ ராம நாமத்தின் மகிமையையும், கம்பன் புகழையும் பரப்புவது எங்கள் நோக்கம்.

எங்கள் 9 ஆண்டு சேவையில், எங்கள் வெளியீடான
கீழ்க் கண்ட புத்தகங்களைப் படித்துப் பயன் பெறுங்கள்.

1. இலங்கையில் கம்பராமாயண அடிச்சுவடுகள்
ஆராய்ச்சிப் பயணக் கட்டுரை .. ... பயணக்குழு

2. வ. வே. சு. ஐயர் வாழ்க்கை வரலாறும்
கம்பராமாயணச் சிந்தனையும் .. ... டாக்டர். தி. வைத்த மாநிதி.

3. கம்பன் கலைக் கோயிலுக்கு
ஓர் கைவிளக்கு .. ... பி. ஸ்ரீ. ஆசாரியா.
டாக்டர். சரசுவதி ராமநாதன்.

4. நான் ரசித்த கம்பனும்
கம்பன் கழகங்களின் கடமையும் .. ... பி. ஸ்ரீ. ஆசாரியா.

5. கம்பன் காவியம்
அன்றும் - இன்றும் - என்றும் .. .. பி. ஸ்ரீ. ஆசாரியா.
டாக்டர். சரசுவதி ராமநாதன்.

6. 'கம்பராமாயணக் காவலர்'
சிறப்புக் கட்டுரைகள் .. .. அறிஞர்கள் கட்டுரை.

7. துளசி ராமாயணத்தில் சில நயங்கள் .. ... திரு T. அய்யாச்சாமி. B.A., B.L.,

8. இரா. இராதா கிருஷ்ணன் வரலாறு,
சிறப்புக் கட்டுரைகள். .. ... அறிஞர்கள் கட்டுரை.

9. காவிய மேடையில்
கம்ப தரிசனம் (அச்சில்) .. ... டாக்டர். சரசுவதி ராமநாதன்.

கிடைக்குமிடம்.
கம்பன் கழகம், பாளையங்கோட்டை.

உள்ளுரை

முன்னுரை:-

மேல் நாட்டுப் பிரமுகர் ஒருவர் சென்னை கம்பன் கழகத் தலைவர் திரு. மு.மு. இஸ்மேயில் அவர்களைப் பார்த்து, பழைய காலக் கவிஞனுக்கு மூன்றுநாள் விழா எடுப்பதா! என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அதற்கு இஸ்மேயில் அவர்கள், கம்பராமாயணத்தில் உள்ள ஒரு பாட்டை ஒரு நாள் முழுவதும் அலசி, அலசிப்பார்த்து அனுபவிப்போம். அதில் 12,000 பாடல்கள் உள்ளன வாகையால், பல வருஷங்களானாலும் நாங்கள் சளைக்காமல் கொண்டாடுவோம் என்று விளக்கினார். இந்த உண்மையை கவிச்சக்கரவர்த்தியின் கவிஇன்பத்தைச் சுவைத்த உங்களைப் போனறவர்களுக்குத் தான் தெரியும் மேல் நாட்டவர்கள் கதையை மாத்திரம் தான் தெரிந்து கொள்ள முடியும்; அதனுடைய சுவையை அனுபவிக்க முடியாது. டி. கே. சி. அவர்கள் மகாத்மா காந்தியை சந்தித்தபோது, கம்பராமாயணத்தை அனுபவிக்க வேண்டும் என்றால் தமிழ் நாட்டிலே பிறந்திருக்க வேண்டும் என்று சொன்னதை நினைவு கொள்ளவேண்டும்.

கவிச் சக்கரவர்த்தி கம்பன் வாழ்க்கை வரலாற்றைப்பற்றி நமக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அவரது தோற்றமோ, உருவச் சிலையோ ஒன்றுமே கிடையாது. அவனுடைய வடிவம் இப்படி இருக்கலாம் என்ற ஊகத்தினால் ஓர் ஓவியத்தை வரைந்து அதைக் கம்பன் எனறு ஏற்றுக் கொண்டிருக்கிறோம். கம்பராமாயணத்தின் மூல நூல் பனை ஓலைகளில் எழுதப்பட்டது. நூற்றுக் கணக்கான ஆண்டுகள் அதைப்பலபேர் பலதடவை ஓலைகளிலே எழுதி வைத்திருந்து கடைசியாக அச்சேறி இருக்க வேண்டும். இந்த நீண்ட இடைக்காலத்தில் அநேக இடைச் செருகல்களும் ஏற்பட்டிருக்கின்றன. பல ஆராய்ச்சியாளர்கள் இருந்து எல்லா பாடல்களையும் ஆராய்ந்து, தள்ள வேண்டியவற்றைத் தள்ளி, ஒரு மொத்தமாகப் புத்தகவடிவில் சென்னை கம்பன் கழகத்தார் கடைசியாகப் பிரசுரித்திருக்கிறார்கள்.

கவிச்சக்கரவர்த்தி இருந்த காலம், இறந்தகாலம், இந்த நூலை எழுதினகாலம் இவைகளை எல்லாம் நன்றாக ஆராய்ந்து ''கம்பன் ஒரு புதிய கண்ணோட்டம்'' என்ற நூலை அ. சா. ஞான சம்பந்தம் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதற்காக மத்திய சர்க்கார் அவரைப் பாராட்டிப் பரிசும் வழங்கி இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டை ஒரு 300 ஆண்டு காலம் எங்கோ இருந்து வந்து, கடற்கொள்ளைக் கூட்டத்தவர்களைப் போல நாட்டை ஆண்டுவந்தார்கள். சரித்திரத்தில் இது தமிழ்நாட்டின் ஓர் இருண்ட காலம். அந்தக் காலத்தில் என்ன நடந்தது, யார் எப்படி ஆண்டார்கள் என்ற விவரங்கள் இல்லை. ஆனால், சேர, சோழ, பாண்டியர்கள் ஓயாது சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். மதப்பூசல்களும் சண்டைகளும் மேல் ஓங்கி நின்றது. ஆட்சிமுறை செம்மையாக இல்லாததால் அராஜகமே இருந்தது. ஜனங்களிடையேயும் பெரும் குழப்பமாக இருந்திருக்க வேண்டும். இந்தக் குழப்ப காலத்தில்தான் ஆசாரியர்களும், ஆழ்வார்களும் தோன்றினார்கள்; ஓரளவிற்கு மக்களிடையே பக்தியையும், அமைதியையும் உண்டாக்கினார்கள்.

விஜயாலயன் என்ற சோழன் அக்கொள்ளைக் கூட்டத்தினரை வென்று சோழப்பேரரசை நிலைநாட்டினான். அவன் மகன் கோதண்டராமன் என்ற சோழன் (871-907 கி. பி.) ஆண்டான் கவிச்சக்கரவர்த்தி கம்பன் இவ்வரசனால் பெரிதும் பாராட்டப்பெற்றான் என்று தெரிகிறது.

சோழர்களுடைய ஆட்சி நிலைத்து நின்றதற்குப் பிற்பாடுதான் அநேக சமுக சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்தச் சீர்திருத்த முயற்சியில் கம்பனும் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று எண்ணப்படுகிறது. வால்மீகியால் எழுதப்பட்ட ராமாயணம் ஏற்கெனவே மக்கள் அறிந்த கதையாக இருந்தது. அது வடமொழியில் இருந்ததால் தமிழ் மக்களிடையே அதிகமாகப் பரவவில்லை. கவிச் சக்கரவர்த்தி அதை ராம அவதாரமாக மாற்றி, தெய்வ நம்பிக்கையையும், பக்தியையும் ஊட்டி, நேர்மையை வளர்த்திருக்க வேண்டும். சீரழிந்து போன சமுதாயத்தைச் சீர்படுத்துவதையே நோக்க மாகக் கொண்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் ராமனுக்கு நாடெங்கும் கோவில்கள் கட்டித் தெய்வமாக பூஜிக்கிறார்கள். கம்பன் ராமனின் கல்யாண குணங்களைக் காட்டுவதே நோக்கமாகவும் கொண்டு தமிழ் நாட்டின் பண்புகளை களங்க மில்லாமல் காத்து, தத்துவங்கள், வேறுபாடுகள், பூசல்கள் இவைகளுக்கு இடம் கொடுக்காமல் ஒரு ஒப்பற்ற காவியமாக நமக்குப் படைத்திருக்கிறான்.


மிகச் சிரமங்களுக்கிடையே, சிக்கல்களுக்கும், இடையூறுகளுக்கும் ஆட்பட்டு, இந்த நூல் வேண்டாவெறுப்பாக அரங்கேற்றப்பட்டது. அந்த நன்னாள் மட்டும் நமக்கு ஆதாரத்துடன் கிடைத்திருக்கிறது ''எண்ணிய சகாப்தம் 807ல'' என்ற பாட்டு ''அத்த'' நக்ஷத்திரத்தில் அரங் கேற்றப்பட்டது, என்பதை தெளிவாக்குகிறது. எனவே வருடம் தோரும் அந்த ''அத்த'' நக்ஷத்திரத் தையே கம்ப ராமாயணத்தின் பிறந்த நாளாகக் கொள்வது தகுதியும், நியாயமும்ஆகும். காலம் சென்ற கம்பன் அடிப்பொடி அவர்கள்அந்த நாளையே கம்பனுக்கு விழா எடுப்பதற்குரிய நாளாகக் கொண்டார்கள். அதன்படியே கடந்த 48 ஆண்டுகளாகக் காரைக்குடியில் தவறாமல் கம்பன்விழா நடந்து கொண்டு வருகிறது. காரைக்குடி கம்பன் கழகம் அதையே தொடர்ந்து நடத்திக்கொண்டு வரு கிறது. நாட்டரசன்கோட்டையில் உள்ள மக்கள் கம்பன் சமாதியை பாதுகாத்து வருகிறார்கள். கம்பன் அடிப்பொடி அவர்களால் தோற்றுவித்த இந்த கம்பன்விழா இவ்வாண்டும் காரைக்குடி கம்பன் கழகத் தால் நடத்தப்பெருகிறது. அந்த விழாவில் கம்பன் திருநாள் வெளியீடாக ஒரு மலரை வெளியிடுகிறார் கள்இம்மலர் அழகாக வெளிவருவதற்கு விளம்பரங்கள் அளித்தவர்கள், கருத்தாழமுள்ள கட்டுரைகள் வழங்கியவர்கள், மற்றும் துணைபுரிந்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இம்மலரை உரியகாலத்தில் வெளியிட உதவிய காரைக்குடி விஜயலெக்ஷ்மி அச்சகத்தாருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றி.

அன்பும் பணிவுமுள்ள,
ஜி. கே. சுந்தரம்
தலைவர் கம்பன் கழகம்

கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி-623 002.
23. 3. 86.

''முன்னமருட் கம்பனெனும் நாமம் கேட்டான்
முர்த்தியவன் இராமகாதை முழுதும் கேட்டான்
பின்னருள்ள சான்றோர்கள் பேசக் கேட்டான்
பேர்த்துமவன் சேவடிக்கே பிச்சன் ஆனான்
அன்னையுடன் அத்தனுமே கம்ப னென்றான்
அவன்பெயராய்த் தன்பெயரை ஆக்கிக் கொண்டான்
தன்னைமறந் திட்டான்தன் நாமம் கெட்டான்
தலைப்பட்டான் சேர்ந்திட்டான் தலைவன் தானே.''

கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம்



"நின்னாவார் பிறரன்றி நீயே ஆனாய்;
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்."

"Who can say more than this rich praise that
you alone are you ?"

त्वमेव माता च पिता त्वमेव,
त्वमेव बन्धुश्च सखा त्वमेव,
त्वमेव विद्या द्रविणं त्वमेव,
त्वमेव सर्वं मम देव देव ॥

"நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் இதுஅல்லால்
என்னை அடியோம் செயற்பால?"

கை தொழுவோம்; -
கை நெகிழோம்.

"தொட்டுப் பொட்டுப் போடலாம் போலிருந்தது அவருடைய ஸ்யாமள வண்ணம்; தும்பைப்பூ போன்ற வெண்ணிறக் கதர் வேட்டி; மடிப்புக் கலையாமல் தோள்பட்டையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த பழுப்பு வண்ண மேல் வேட்டி; தங்கச் சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடி; முகில் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு வந்து நிற்கும் முழுநிலாவையொத்த சந்தனப் பொட்டு; சட்டை போட்டு மறைக்க முடியாத ஓர் எளிமை; எளிமைக்குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் அசைக்க முடியாத ஓர் உறுதி; முகத்திலிருந்து வீசும் களங்கமற்ற, ஆனால் கவர்ச்சி நிறைந்த ஓர் ஒளி; கிட்ட நெருங்கிப் பழக அழைக்கும் ஒரு தோழமை, ஆனாலும் அந்தத் தோழமைக்குள்ளிருந்து திடீர் திடீரென்று கொப்புளிக்கும் ஒரு பயங்கரக் கண்டிப்பு," - இப்படியாக அமரர் கம்பன் அடிப்பொடியைச் சந்தித்தபோது உண்டான உணர்ச்சிகளைத் தமக்கே உரிய கம்பீரமான மகராஜத் தமிழில் அமரர் நீதிபதி எஸ். மகராஜன் அவர்கள் அழகாகச் சொல்லுவார்கள்!

இப்படிப்பட்ட 'சாவன்னா, காவன்னா' வோடு பல்காலும் நெருங்கிப் பழகிக் களித்ததோடு அவ்வப்போது 'குஸ்தியும்' போட்டுக் கொண்ட அவர்தம் அன்பர்களின் நல்லாதரவினால் கம்பன் திருநாள், அதையொட்டிய கம்பன் மணிமலர் வெளியீடு - இவை மூன்றாண்டு காலமாக மிகச் செவ்வனே நடைபெற்று வருகிறது. திருவருளும், கம்பன் என்ற குரு அருளும் சாதித்த அற்புதங்கள் இவை; இவற்றை சாதித்துக் கொண்டிருக்கின்ற பூரிப்பில் நாங்கள் முற்றிலும் திளைத்திருக்க இயலாது, எங்களை நெஞ்சில் வருடிக் கொண்டே இருக்கின்றது ஓர் எண்ணம் அவர்கள் நடத்திவந்து கொண்டிருந்த விழா இனிதே தொடர்ந்து நடந்தாலும், அவர்கள் ஆரம்பித்த தமிழ்த்தாய் கோயில், கம்பன் மணிமண்டபத் திருப்பணி - இவை இன்னும் முற்றுப் பெறாமல் இருக்கின்றது. உங்களையெல்லாம் நெஞ்சுருக நாங்கள் வேண்டிக் கொள்வது எல்லாம் ஒன்றே ஒன்றுதான்; 'மண்ணில் வாராது வந்த மாமணி' யைப் போல் புகழோடு தோன்றிப் பொலிவோடு வாழ்ந்து அமரரான கணேசனாரோடு பழகிய அன்பர்களுள் யாரேனும் ஒரு சிலராவது முன்வந்து இந்த விட்டகுறை தொட்டகுறையைப் பூர்த்தி செய்யக் கூடாதா? ஒருவேளை அதற்கும் ஒருவேளை வர வேண்டுமோ! நன்றுடையானைத், தீயதில்லானை நாளும் போற்றித் தொழுபவர்க்கு நாளும், கோளும் கூட உண்டா, என்ன?

1983-ம் ஆண்டு விழாவின் போது எழுதினோம்: ''நேருவிற்குப் பிறகு யார்? என்ற ஆயிரம் பொன் கேள்வியைப் போல, சா. க. வுக்குப் பிறகு கம்பன் திருநாள் என்னுகும் என்ற வர்கள் வியப்படையும் வண்ணம் கம்பன் அறநிலை அறங்காவலர்களும் அன்பர்களும் முன்வந்து முயற்சியில் ஈடுபட்டார்கள்.'' 1985-ல் எழுதினோம்: ''அடிப்பொடி அவர்கள் இருந்திருந்தால் எப்படியெல்லாம் எண்ணி எண்ணித் திட்டம் போட்டு, நிமிஷம் பிசகாமல் செய்திருப்பார்களோ அதற்கு எவ்வித பங்கமும் வராது சிறப்பித்து விட்டார்கள்.'' 1985-ல் எழுதினோம்: ''கம்பன் அடியார்கள், கணேசன் அன்பர்கள், கம்பன் கழகங்கள், கொடைஞர்கள், அறவோர்கள், ஆளும் அரசினர் இவர்களை எல்லாம் சிரந் தாழ்த்தி, கரங்கூப்பி, நிலந்தோய்ந்து வேண்டுகிறோம் - கம்பன் அடிப்பொடியின் கனவு நனவாகச் செய்யுங்கள்; கன்னித் தமிழ்த்தாய் கோயிலை எடுத்த பெருமையைப் பெற்று உய்ந்து மகிழுங்கள்.'' ஆனால் என்னே எங்கள் நிலை? 1986-ல், 84-ல் எழுதியதைப் போல மன நிறைவாய், மகிழ்ச்சியாய் எழுத முடியாமல் போய்விட்டதே!1987-ல் நிச்சயம் நாங்கள் எடுத்த காரியத்தை முடித்த பெருமிதத்தோடு எழுத இறையருளை நம்பிக்கை தொழுவோம்; கைதான் நெகிழ விடோம்!. நம்பிய கையை நெகிழவிடாத அவனருள் நம் எல்லோருக்கும் கிட்டுமாக!

கம்பன் பணியில் உங்கள்

மு மெ முத்துராமன்
பழ பழனியப்பன்
செயலாளர்

கம்பன் கழகம்
கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி.
23, மார்ச், 1986

கம்பன் கழகத்தின் நடப்பு ஆண்டு உறுப்பினர்கள்;

தலைவர் :

திரு. ஜி. கே. சுந்தரம்.

உபதலைவர் :

திரு. க. கு. கோதண்டராமன்

செயலாளர்கள் :

திருவாளர்

மு. மெ. முத்துராமன், பழ. பழநியப்பன்

உதவிச்செயலாளர் :

திரு ச. கம்பராமன்

பொருளாளர் :

திரு. அள. திருநாவுக்கரசு

உறுப்பினர்கள் :

திருவாளர்கள்

1. மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி
2. சா. நா. அ. சொ அ. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி.
3. என். ஏ. மாரிமுத்து பிள்ளை, காரைக்குடி
4. ராம. கண்ணப்பன், நாட்டரசன் கோட்டை
5. மு. சிதம்பரம், காரைக்குடி
6. எம். எஸ். சுந்தரம் பிள்ளை, பாளையங்கோட்டை
7. ந கோவிந்தசாமி, புதுவை.
8. ஆர். கே. சுப்பிரமணியன், காரைக்குடி
9. பெ. மு. சுப்பையா செட்டியார். ஆத்தங்குடி.
10. பழ. சண்முகம், காரைக்குடி.
11. நா. மெய்யப்பன், காரைக்குடி
12. அரு. நாகப்பன், ஒ. சிறுவயல்
13. அள. சுப்பையா, காரைக்குடி.
14. அள. வீரப்பன், காரைக்குடி
15. ராம. தெ. முருகப்பன், காரைக்குடி
16. ப. மு. சித. பழநியப்பன். காரைக்குடி
17. எஸ். ஏகப்பன், நாட்டரசன்கோட்டை
18. ராம. சொக்கலிங்கம், காரைக்குடி
19. ப. சு. ராம. அண்ணாமலை செட்டியார் காரைக்குடி
20. அரு. ராம. முத்துராமன், காரைக்குடி
21. ராம. மீனாட்சிசுந்தரம், காரைக்குடி
22. சுப. சித. சுப்பிரமணியன், காரைக்குடி
23. ஆ. ம. ஸ்ரீதரன், இரெகுநாதபுரம்
24. சா. நா. நாராயணன், காரைக்குடி
25. பழ. முத்தையா, காரைக்குடி
26. வெ. பழநியப்பன், காரைக்குடி
27. எஸ். முனுசாமி, காரைக்குடி
28. அரு. லெட்சுமணன், காரைக்குடி
29. நா. பழனியப்பன், காரைக்குடி
30. லெ. கணேசன், காரைக்குடி
31. கலைமகள் ராமநாதன், கோவை
32. மெ. காந்தி, காரைக்குடி
33. சரசுவதி இராமநாதன், பள்ளத்தூர்
34. அ. கிருஷ்ணசாமி, கோவை
35. வை. கண்ணுச்சாமி, தஞ்சை
36. சித. ஆதப்பன், வடலூர்
37. பி. முக்கையா ஆசாரி, காரைக்குடி

கம்பன் கழகங்கள் - முகவரியுடன்

1. கம்பன் கழகம்,
கம்பன் மணி மண்டபம்
காரைக்குடி- 623 002
தொலைபேசி: 2600

2. கம்பன் கழகம்,
கம்பன் அருட்கோயில்,
நாட்டரசன்கோட்டை
623 556.

3 கம்பன் கழகம்,
கீழ வீதி,
தேரழுந்தூர்-609 808
மாயூரம் வழி

4 கம்பன் கழகம்,
சிராம விண்ணகரம்,
கள்ளிப்பட்டி-638 505
தொலைபேசி: 44 (கோபி)

5. கம்பன் கழகம்,
நாமக்கல்-637 001.
சேலம் மாவட்டம்.

6. கம்பன் கழகம்,
சீதா கல்யாண மண்டபம்,
கோபிச்செட்டிப்பாளையம்-638 452.
தொலைபேசி எண் : 84

7. கம்பன் கழகம்,
116, முத்துமாரியம்மன் கோவில் தெரு,
புதுச்சேரி-605 001.
தொலைபேசி : 509

8. கம்பன கழகம்,
10, பெரிய அக்ரகாரம்,
ராசிபுரம்-637 408
சேலம் மாவட்டம்.

9. கம்பன் கழகம்,
மணி பீடர் பள்ளி,
கோயம்புத்தூர்-641 037
தொலைபேசி: 35851

10. கம்பன் கழகம்,
4-பி, சாலை ரோடு,
சேலம்-636 001
தொலைபேசி: 3501.

11. கம்பன் கழகம்,
கற்பகச்சோலை,
1 வெள்ளையன் செட்டியார் சாலை,
கோட்டூர்புரம்,
சென்னை-600 085
தொலைபேசி: 411 110

12. கம்பன் கழகம்,
சித்ரா ஜவுளி ஸ்டோர்ஸ்,
புதுக்கோட்டை-622 001.
தொலைபேசி: 560

13. நெல்லை மாவட்டக் கம்பன் கழகம்.
கம்பராமாயண மண்டபம்,
1,பெருமாள் தெற்கு மாட வீதி
பாளையங்கோட்டை-627 002.

14. மலேசியா கம்பன் கழகம்,
64, Jalan Hang Jebot
Malacca.
(Malaysia)
Phone: 23206

15. கம்பன் கழகம்,
120, காந்தி சாலை
திருவாரூர்-610 108

16. கம்பன் கழகம்,
அன்பு நிலையம்,
பெரிய தெரு.
பட்டுக்கோட்டை-614 601
தொலைபேசி: 102.

17. கம்பன் கழகம்,
62. காமராஜ் சாலை,
திருப்பத்தூர்-635 601,
வடஆர்காடு மாவட்டம்,
தொலை பேசி: 29026

18. கம்பன் கழகம்,
1, மாணிக்கம் பிள்ளை தெரு
சிவகெங்கை-623 560.

19. கம்பன் கழகம்,
2/370 அய்யாத்துரை தெரு
பரமக்குடி-623 707.

20. கம்பன் கழகம்,
13, இ பி. காலனி,
காந்தி நகர்,
வேலூர்-632 006.
வடஆர்காடு மாவட்டம்

21. கம்பன் கழகம்,
8, சிங்கார முதலி தெரு,
நல்லியக்கோடன் நகர்
திண்டிவனம்-604 002.

22. கம்பன் கழகம்,
22, ஞானதிக்கம் பிள்ளை தெரு
கல்லுக்குழி,
திருச்சி-620 020

23. கம்பன் கழகம்,
பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி கட்டிடம்
காஞ்சிபுரம்-631 501.
தொலைபேசி: 2487.

24. கம்பன் கழகம்,
தியாசாபிகல் சொஸைட்டி,
தஞ்சாவூர்-613 001.

25. கம்பன் கழகம்,
98, அறிஞர் அண்ணா நகர்
மதுரை-625 020.
தொலைபேசி : 32872

26. சம்பன் கழகம்,
அவிநாசி- 638 654

27. கம்பன் கழகம்,
C/o. நியு சீதாராம விலாஸ்
கடை வீதி,
கவுந்தப்பாடி-638 455
வழி ஈரோடு R M S.

28. கம்பன் கழகம்,
23, காமராஜர் ரோடு,
பொள்ளாச்சி-642 002

29. கம்பன் கழகம்,
24, 24, அன்னதான விநாயகர்
கோவில் தெரு,
பேட்டை,
திருநெல்வேலி -627 004.

30. கம்பன் கழகம்,
5, சந்நிதித் தெரு,
தென்திருப்பேரை-623 623
திருநெல்வேலி மாவட்டம்.

31. கம்பன் கழகம்,
வாழியூர்-623 315,
ஒண்ணுபுரம் வழி,
வடஆர்க்காடு மாவட்டம்.

32. கம்பன் கழகம்,
திண்ணப்பா திரையரங்கம்,
சேலம் சாலை,
கரூர்-639 002.
தொலைபேசி: 747

33. கம்பன் கழகம்,
4-A Dr. Sarat Banerjee Rd
Calcutta-700 029

34. கம்பன் கழகம்,
68, இராசாராம் தெரு,
சவகர் நகர்,
திருமங்கலம்-626 706.

35. கம்பன் கழகம்
6, பேராசிரியர் குடியிருப்பு
கிழக்கு தாம்பரம்-600 059.
தொலைபேசி: 48581

36. கம்பன் கழகம்,
57, பஜார் தெரு
பெரம்பலூர்- 621 212.

37. கம்பன் கழகம்
மேலரத வீதி
நாட்டரசன்கோட்டை-623 556

38. கம்பன் கழகம்,
10, கர்ண கொல்லை அக்ரஹாரம்,
கும்பகோணம்-612 001.

39. கம்பன் கழகம்,
ஆலடிப்பட்டி நல்லூர்-627 853,
தென்காசி வட்டம்,
நெல்லை மாவட்டம்,

40. கம்பன் கழகம்,
9, வர்த்தகர் தெரு,
ராமேஸ்வரம்-623 526.
தொலைபேசி: 24.

41. கம்பன் கழகம்
"சோலை"
6, தாண்டல் கந்தசாமி தெரு,
ராஜபாளையம்-626 117.

42. கம்பன் கழகம்,
கலா தனிப்பயிற்சிக் கல்லூரி
சேரிங் கிராஸ்,
உதகமண்டலம்-643 001.

43. அகில இலங்கைக் கம்பன் கழகம்,
108, அரசரடி ரோடு,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம். Srilanka

44 கம்பன் கழகம்
பி, 11, சந்தன மர வீதி,
வட்டம்-9,
நெய்வேலி-607 801

45. கம்பன் கழகம்,
வையப்ப மலை,
திருச்செங்கோடு வட்டம்,
சேலம் மாவட்டம்-637 410

46. கம்பன் கழகம்,
90, மருத்துவமனைத் தெரு,
திருத்துறைப்பூண்டி-614 713
தஞ்சை மாவட்டம்,

47. கம்பன் கழகம்,
7, சி. எச். பி. காலனி 5 வது தெரு.
திருச்செங்கோடு-637 211.
சேலம் மாவட்டம்.

48. கம்பன் கழகம்,
கற்பகம் உணவு விடுதி மேல் மாடி,
பெங்களூர் சாலை.
கிருட்டிணகிரி-635 001

49. கன்னியாகுமரி மாவட்டக் கம்பன் கழகம்,
9, ஏ, ஆசாரிமார் வடக்குத் தெரு
நாகர் கோவில்-629 001

தமிழ்த்தாய்க்கன்னி

அமரர் — கம்பன் அடிப்பொடி

கம்பன் பணிசெய்யக் கைகாட்டி விட்டுவிட்டாய்
இன்ப நிலைபெற்றேன் எங்கள் தமிழ்த்தாயே!

கம்பன் கவியமுதைக் காசினியெல் லாம்பரப்பும்
செம்பொற் பணியாற் றிகழ்வேன் தமிழ்த்தாயே!

வள்ளுவனைப் போற்றிநிதம் வாழும் நெறிமுறையால்
தெள்ளு தமிழ்செழிக்கச் செய்வேன் தமிழ்த்தாயே!

கள்ளோடு பொய்சூதைக் கட்டறுத்து இவ்வுலகில்
வள்ளுவத்தை முற்கொண்டு வாழ்வேன் தமிழ்த்தாயே!

கத்தர்த் துணியுடுத்துக் காந்திவழி வாழ்ந்திடவே
நித்தம் முயன்றிடுவேன் நேயத் தமிழ்த்தாயே!

ஊரெல்லாம் நம்மூர் உலகவரெல் லாம்உற்றார்
யாரும் பகையில்லை என்பேன் தமிழ்த்தாயே!

வேரும் சமயமெலாம் மேலோங்கி நிற்குமந்த
மாருப் பொருள்வணங்கி வாழ்வென் தமிழ்த்தாயே!

கீழென்றும் மேலென்றும் கேடாய் முளைத்தபெரும்
பாழான புன்னெறியைப் பாரேன் தமிழ்த்தாயே!

எல்லோரும் இன்புற் றிருப்பதற்காய் எஞ்ஞான்றும்
நல்லோர்கள் கூட்டம் நயப்பேன் தமிழ்த்தாயே!

அன்போ டறம்பேணி ஆன்றோர் அடிபரவி
இன்போ டிருப்பேன் எழிலார் தமிழ்த்தாயே!

தெய்வந் தனைநம்பிச் செந்நெறியில் நின்றுதினம்
மெய்வருந்தி வாழ்ந்திடுவேன் மேன்மைத் தமிழ்த்தாயே!

ஆழ்துயர்சூழ்ந் தாலும் அறத்திற் பிறழாமல்
வாழ்வாங்கு வையகத்தில் வாழ்வம் தமிழ்த்தாயே!

மெய்த்திருவே வந்தாலும் வெந்துயரே நேர்ந்தாலும்
ஒத்திருக்கும் உள்ளம் உதவாய் தமிழ்த்தாயே!

சித்தம் கலங்காமல் செம்மைநெறி நீங்காமல்
பத்தியுடன் வாழ்ந்திருக்கப் பாராய் தமிழ்த்தாயே!

உன்னைப் பணிந்தேத்தி உன்பணிக்கே ஆட்பட்டேன்
என்ன குறையுமிலேன் இன்பத் தமிழ்த்தாயே!

முன்னை மொழிக்கெல்லாம் மூத்தவளே! ஆனாலும்
கன்னிநிலை மாறாய் கடவுள் தமிழ்த்தாயே!

கல்முளைத்த காலத்தே காற்றோ டுடன்பிறந்த
தொல்லை மொழியாய்ச் சுடர்வாய் தமிழ்த்தாயே!

பனித்தமலை தோன்றுமுனம் பாருலகில் தோன்றி
இனித்தமொழி என்னும்பேர் ஏற்றாய் தமிழ்த்தாயே!

பன்னுமொழி பற்பலவை பாரில் படைத்துநீ
முன்னைப் பரம்பொருள்போல் மூவாய் தமிழ்த்தாயே!

பாருலகில் உள்ள பழைய மொழிக்கெல்லாம்
வேறெனவே நிற்பாய் விளங்கும் தமிழ்த்தாயே!

எத்தனை யான்பிறவி எய்திடினும் எப்பிறப்பும்
முத்தமிழ்தேர் பேறருள்வாய் மொய்ம்பார் தமிழ்த்தாயே!

யாரும் பகையிலை என்றிடில் இவ்வுலகில்
போரிலை என்றும் புனிதத் தமிழ்த்தாயே!

காசினியில் ஒப்பிலாக் காந்திஎனும் மாபெரியோன்
பேசுபுகழ் மாட்சிதனைப் பெற்றாய் தமிழ்த்தாயே!

ஒலியாய் வரியாய் மொழியாய் உயர்வாய்
கலையாய் மணமாய்க் கனிவாய் தமிழ்த்தாயே!

எண்ணாய் எழுத்தாய் இலக்கம் அவற்றுடன்
பண்ணாய் நடமாய்ப் படர்வாய் தமிழ்த்தாயே!

தென்றல்விளை யாடுமலை தென்பொதியம் தந்தமொழி
கன்றுபல ஈன்றவள்தான் கன்னித் தமிழ்மொழியே!

மூன்றுகவ டாக முளைத்தெழுந்து பூவுலகில்
தேன்றுளிர்க்கும் பாமலர்க்தும் தெய்வத் தமிழ்த்தாயே!

ஆதிமுதல் ஆசான் அகத்தியனும் காதலுடன்
ஓதியுயர் கீர்த்தியினால் ஓங்கும் தமிழ்த்தாயே!

ஆதிக்கும் மூத்த அநாதிஎன ஆனாலும்
ஓதுகன்னி யாக ஒளிர்வாய் தமிழ்த்தாயே!

எண்ணுவது நின்புகழை ஏத்துவது நின்கழலை
பண்ணுவது நின்பூசை பண்ணார் தமிழ்த்தாயே!

மானே, குயிலே மயிலே, மலைதந்த
தேனே, தெளிபாகே செய்ய தமிழ்த்தாயே!

பாட்டும் தொகையும் பதினெட்டாய் ஆனவற்றைக்
கேட்டுச் சுவைத்துக் கிளர்வேன் தமிழ்த்தாயே!

சேரஇளங் கோசெய் சிலப்பதி காரமெனும்
சாரமிகு நூலால் தழைத்தாய் தமிழ்த்தாயே!

ஆழ்வார்கள் வார்த்த அருமைத் தமிழாலே
ஊழிதோ றூழி உலவாய் தமிழ்த்தாயே!

மூவர் திருமுறையால் முக்காலும் இவ்வுகில்
தேவர் மொழியாய்த் திகழ்வாய் தமிழ்த்தாயே!

வேண்டாத சிலநூலை வேண்டாமென் றேயொதுக்கிப்
பூண்டோடே போக்கினையோ பொன்னூர் தமிழ்த்தாயே!

எந்தைபிரான் கம்பன் எழிற்காப் பியமென்னும்
சிந்தைகவர் நன்முடியார் தேவி தமிழ்த்தாயே!

முக்கோண நன்னிலத்தில் முற்று இளமையுடன்
திக்கோடி முட்டுபுகழ்த் தெய்வம் தமிழ்த்தாயே!

எல்லாரும் வாழ்ந்திங் கிருப்பீர் எனவாழ்த்தும்
நல்லாளாய் ஓங்குபுகழ் நங்கை தமிழ்த்தாயே!

அறம்பொருள் இன்பம்வீ டடைதலே நூலால்
உறும்பயன் என்னும் ஒருத்தி தமிழ்த்தாயே!

எத்திக்கும் கீர்த்தி எழில்மணக்க வீற்றிருக்கும்
தித்திக்கும் பேரின்பத் தேனே தமிழ்த்தாயே!

பார்க்குமிடம் எங்கும் பரந்து புகழ்மணக்கும்
சீர்த்திமிகும் தொன்மொழிநீ தெய்வத் தமிழ்த்தாயே!

ஒப்பேது மில்லா துயர்ந்துவளர் நின்புகழைச்
செப்ப வழியறியேன், சேயேன், தமிழ்த்தாயே!

சொல்லில் அடங்காச் சுவையமுதைத் துய்ப்பதுவே
அல்லால்உன் சீரளக்க ஆற்றேன் தமிழ்த்தாயே!

என்னை யறிந்தும் எனதுபணி தானறிந்தும்
இன்னும் அருளாத தேனோ தமிழ்த்தாயே!

சிந்தையறி வாய்என் திருப்பணியும் நன்கறிவாய்
இந்தவிதம் யானேங்கல் ஏனோ தமிழ்த்தாயே!

பாடிப் பரவியுனைப் பாராட்டி வாழ்வதற்கே
தேடிச் சரணடைந்தேன் செய்ய தமிழ்த்தாயே!

எவ்வெவரும் நம்மவரென் றெண்ணி மகிழ்ந்துலகில்
உய்வதற்கு நீயருள்வாய் ஓங்கு தமிழ்த்தாயே!

நாயேன் எனக்கிங்கே நற்றுணைவே றில்லைஎனத்
தாயே, சரணென்று தாழ்ந்தேன் தமிழ்த்தாயே!

அன்பால் நிறையும் அறிவிலேன் என்றாலும்
நின்பால் அடைக்கலமாய் நின்றேன் தமிழ்த்தாயே!

கல்விநல மில்லேன் கணக்கறியேன் ஆனாலும்
செல்விநின்தாள் பற்றுமொரு சேயன் தமிழ்த்தாயே!

சேயன், அணியன்; திருத்தாள் முடிசூடி
நேயன் உனதடிக்கீழ் நிற்பென் தமிழ்த்தாயே!

மால்காட்டி என்னை மயங்கிவிழச் செய்யாதுன்
கால்காட்டி வாழ்விப்பாய் கன்னித் தமிழ்த்தாயே!

உம்பெருமை தன்னை உலகறிய என்செய்கேன்
கம்பன் அடிப்பொடியேன் கன்னித் தமிழ்த்தாயே!

தேன்காண மாட்டாத தீஞ்சுவையை நின்னிடத்தே
யான்காண மாட்டுவனோ எங்கள் தமிழ்த்தாயே!

நின்னைத்தொழுது நினதருளுக் கேங்கிநிற்கும்
என்னைக் கடைத்தேற்றாய் இன்பத் தமிழ்த்தாயே!

பொன்னார் மணிக்கமலப் பூப்போலுன் சேவடிக்கே
என்னையா ளாக்கி இருந்தேன் தமிழ்த்தாயே!

நின்னை முழுதறியேன் நின்பெருமை தானறியேன்
என்னில் எனிற்கடையன் யாரோ தமிழ்த்தாயே!

உன்னை யறிந்தே உனக்கடியர் ஆனவர்கள்
என்னையாட் கொள்ள இருப்பேன் தமிழ்த்தாயே!

மடிமை யதனை மறந்துவிட் டென்னை
அடிமை கொளல்நிற் கரிதோ தமிழ்த்தாயே!

ஒலியில் நடந்து, வரியில் இருந்தாய்,
மலையில் பிறந்த மயிலே தமிழ்த்தாயே!

எத்தனையான் குற்றம் இயற்றிடினும் எண்ணாமல்
அத்தனையும் நீபொறுத் தாள்வாய் தமிழ்த்தாயே!

எங்கெங்கே நோக்கிடினும் எத்துறையை ஆய்ந்திடினும்
அங்கெங்கே நின்னருமை ஆகும் தமிழ்த்தாயே!

என்னதான் குற்றம் எளியனேன் செய்திடினும்,
அன்னவை தாம்பொறுப்பாய் ஆத்தா தமிழ்த்தாயே!

அல்லும் பகலும் அனவரத முந்துதிப்பேன்
எல்லையிலா நின்புகழை எம்மோய் தமிழ்த்தாயே!

தன்னை யறியேன்; தமிழறியேன் என்றாலும்
என்னையறி யாயோ, இனித்த தமிழ்த்தாயே!

ஒன்ருய், ஒருமுன்ருய், ஒதுகலை பற்பலவாய்,
நின்ருய் நிலையாய்; நிமிரும் தமிழ்த்தாயே!

எண்கொண்ட நற்கீர்த்தி எட்டுத் திசைபரவும்
கண்கண்ட தெய்வம் கவினுர் தமிழ்த்தாயே!

தெய்வம் தனையுணர்த்திச் சிந்தை தெளிவிக்கும்
தெய்வம் மொழியரசாம் தேவி தமிழ்த்தாயே!

எந்தம் மனத்தின் இருளகல இன்பஒளி
வந்து சுரந்தாய்நீ வாழி தமிழ்த்தாயே!

எத்துணைதான் துன்பம் எனக்குவந் துற்ருலும்,
அத்துணையும் நீக்கி அருள்வாய் தமிழ்த்தாயே!

ஆடுவதும் ஆனந்த மாக நினதுபுகழ்
பாடுவதும் என்றன் பணியாம் தமிழ்த்தாயே!

கைகேசியின் மனமாற்றம்

திரு கே. பட்சிராஜன்.

மிதில நகரத்திலே திருமணம் முடிந்ததும் தன் தாய்மாரை வணங்கச் செல்லும் ராமன் முதல் முதலாகக் கைகேசியின் பாதங்களிலே வணங்குகிருன். அவனைத் தொடர்ந்து சீதையும் அவளையே முதலில் வணங்குகிருள். அயோத்தியிலே தான் பிரியத்துடன் வளர்த்து வந்த அழகிய கிளியைக் கையிலேந்தி அன்புததும்பும் முகத்தோடு''என் கிளிக்கு யார் பெயரை இடுவது?'' என்று சீதை கொஞ்சி வினவ, ராமன் ''கைகயன் மர்து; என் அன்னைதன் பெயர் ஆகுக,'' என்று கைகேசியின் பெயரையே இடச் சொல்கிருன். கைகேசி ராமனைப் பெற்ற தாயா? பின் ஏன் அவளுக்கு இவ்வளவு மரியாதை, அவளிடம் இவ்வளவு ப்ரேமை? பெற்ற தாயினும் பன்மடங்கு அதிகமாக அவள் ராமனிடம் அன்பாய் நடந்ததே அதன் காரணம். ரர்மன் இவ்விதம் அவளிடம் காட்டிய பக்தி ஒரு போதும் மாறியதில்லை. அவன் அவளைத் தாயாக மட்டுமா கருதினுன்? தெய்வமாக வழிபட்டான். ராவணவதம் முடிந்தபிறகு தேவர்களுடன் தன்னை வாழ்த்த வந்த தந்தையிடம் வரம் வேண்டும் போது கைகேசியைக் குறித்து ''தீயவள் என்று நீ துறந்த என் தெய்வமும்'' என்று ராமன் கூறுவதைக் காண்கிரேம்.

இவ்வளவு அன்பும் பக்தியும் தன்பால் கொண்ட ராமனிடம், கைகேசிக்கும் அளவிறந்த அன்பும் கருணையும் இருந்திருக்கவே வேண்டும். அவ்வாறு இருந்ததாகவே பல விடங்களிலும் காண்கிரேம். ஆனுல் ராமன் காடு செல்வானேன்; அதற்கு அவளன்ரே காரணம்; கைகேசி ஏன் அவ்வன்பைத் துறந்தாள். எவ்வாறு எப்போது துறந்தாள். அவள் ராமனிடம் காட்டிய கொடுமை அதன்பின் அவளுடன் என்றுமே நிலைத்திருந்ததா? இல்லையானுல் அவள் மனம் கொடுமையிலிருந்து மறுபடி அன்பு நிலையை எப்போது அடைந்தது? என்றெல்லாம் பலவிதமான கேள்விகள் எழுகின்றன.

அயோத்தியிலே மந்திரிப் பிரதானிகள் நிறைந்த சபை முன்னே, தசரதன் ராமனுக்கு முடிசூட்டத் தீர்மானிக்கிருன். அந்த நற்செய்தி நகரமெங்கும் முரசறைவிக்கப்படுகிறது. ஜனங்களிடையே தோன்றிய குதூகலம் அளவிட முடியுமா? ஒவ்வொருவரும் தாமே முடிசூடப் போவதாக எண்ணி, களிக்கின்றனர். நகரமெங்குமே மகிழ்ச்சி நிறைகிறது.

மனிதனுடைய வாழ்க்கையில் கேடு என்பது கேட்டுக்கொண்டா வருகிறது? எதிர்பாராமல் தோன்றி, திகைப்பும் சோகமும் விளைப்பது தானே அதன் இயற்கை? அயோத்தி மக்களுக்கு- இல்லை இவ்வுலகுக்கே - ஒரு பெரிய கேடு வருகிறது.

எங்கிருந்தோ ''தோன்றினள் கூனியும்'' ''யதோ ஜாயதே'' என்கிருர் வான்மீகி முனிவரும். எவ்விதமாக அவள் அங்கு தோன்றினுள் என்று கேட்பதற்கில்லை. கோபமும் பொருமையும் உள்ளேகிடந்து பொங்க, தீமையே போல வருகிருள். ராவணன் செய்த தீமையே கூனியாக உருவெடுத்தது என்கிருர் கவிஞர்.

ராமனுக்கு ராஜ்யாபிஷேகம் என்றதும் கூனியின் இருண்ட மனசிலே பழைய காட்சிகள் பளிச்சென்று தோன்றுகின்றன. உள்ளே புழுங்கிய வஞ்ச உணர்ச்சி சீறி எழுகிறது 'ராமனுடைய பாலியம் கையில் வில்லெடுத்து, சிறு மண்ணுருண்டைகளை வில்லில் கோத்து எறிகிருன் ராமன். தெருவோடு கெந்திச்செல்லும் கூனியின் வளைந்த முதுகு அவனுடைய உண்டைக்கு இலக்காகிறது. சிறுவனுக்கு விளையாட்டு; ஆனுல் கூனிக்கோ கொதிப்பு. சக்சரவர்த்தி மகன், என்ன சொல்வது?' என்று வருந்திய

மனதோடு போகிருள். அதே சிறுவன் இப்போது சக்கரவர்த்தியாகப் போகிருன் எனத் தெரிந்த அவள் நெஞ்சம் வேதனையில் துடிக்கிறது. தன் பழியைத் தீர்த்துக் கொள்ள இதுவே தருணம் என்று துணிகிருள். கைகேசியின் கோயிலை நோக்கி விரைவாகப் போகிருள். கவிஞரின் கற்பனை பின் தொடர்கிறது.

திருப்பாற்கடல்; அலைநடுவே ஒரு பவளக் கொடி படர்ந்திருக்கிறது; ஒளி வீசும் ரத்னங்களையும் அழகு மலரும் தாமரைகளையும் பூத்திருக்கின்றது. அக்காட்சியைக் காண்கிருர் கம்பர். என்ன அபூத வர்ணனை என்று வியக்கிரேம். ஆனல் கூனியோடு சென்ற கம்பர், அந்தப்புரத்திலே, நுரை போன்ற வெள்ளிய பாயலின் மீது துயிலும் கைகேசியைக் கண்டதும் தாம் அறிந்த உண்மையையே கூறினர். அவள் உறங்குகிருள். எனினும் அவள் காருண்யம் மூடிய இமைகளையும் கடந்து பொங்கித் ததும்புவதைக் கவிஞர் காண்கிருர்.

அரசியாயிற்றே, உறங்குகிருளே என்று கூனி தயங்குகிருளா? கூசாமற்போய் கைகேசி பாதங்களைத் தொடுகிருள். கைகேசியை ஒரு கால சர்ப்பம் தீண்டியதாகவே கம்பருக்குப் படுகிறது.

கைகேசி எழுகிருள். தூக்கக் கலக்கம் இன்னும் நீங்கவில்லை. கூனி பேசுகிருள்: உன்னைப் பெருங்கேடு சூழ்கிறது. ஆனல் நீயோ உணர்ச்சியின்றி உறங்குகிருய்.'' தீங்கு என்பது உண்டு என்று கூட கைகேசி இதுவரை கருதியதில்லை. 'உலகிலே வேதம் நிலவுமானல் தீமை இருக்க முடியுமா? ராமனை மகனகப் பெற்ற என்னை எந்தத் தீங்கு அணுக முடியும்? என்று கேட்கிருள் அவள். ராமனிடம்தான் அவளுக்கு என்ன அன்பு! அதில் எத்தனை அழுத்தம்! அவனை மகன் என்று சொல்லிக் கொள்வதில் எத்தனை பெருமிதம்!

ஆனல் கூனியா விடுபவள்? கைகேசியின் அன்புக் கோட்டையைத் தகர்க்க வேறு வழி தேடுகிருள். பெண்களுக்குக் கோபமூட்ட அவள் சககளத்தியைப் பற்றி உயர்த்திக் கூறுவதைத் தவிர வேறு நிச்சயமான வழியுண்டோ? அதையே கூனியும் பின்பற்றுகிருள். ''உன் மாற்ருள் கோசலை பெருவாழ்வு பெற்றுவிட்டாள். உனக்கு உறக்கம்தான் கண்டபலன்'' என்கிருள்.

கூனியின் கொக்கரிப்பு கைகேசியின் தற்பெருமையில் தைக்கிறது. தான் தனது என்ற அகங்கார எண்ணம் மேலிடுகிறது. முன் ராமனைப் பெற்ற எனக்கு என்ன குறை என்றவள் ''சக்கரவர்த்தி என் கணவன்; மகனே புகழ் பெற்ற பரதன்; இதைவிட அவளுக்கு வந்த வாழ்வு என்னடி? என்று கேட்கிருள்.

கூனிக்கு அவள், 'பரதன் என் மகன்' என்று சொன்னதில் சற்று திருப்தி. இனி மெதுவாக ராமனைப் பற்றிக் கூறலாம் என்று தைரியம் கொள்கிருள். ராமபட்டாபிஷேகச் செய்தியை அவளுடைய கோணல் மனம் விபரீதமாகச் சித்திரிக்கிறது.

''புருஷோத்தமனுன ராமனைக்கண்டு நகைக்கிருர்களாம் உலகில் உள்ள ஆடவர்கள் எல்லோரும். உலகில் ஆண்மையே வெட்கித் தலை குனிந்ததாம். ஏன்? ராமன் தாடகையை வதை செய்தானல்லவா? வேறு என்ன வேண்டும் இழிவு?'' பயங்கர ரூபம்; நெருப்புக் கண்கள்; குகை போன்ற வாய்; ஊன் தொங்கிய விகாரமான கோரப் பற்கள்; ஒரு கையில் மலையும், ஒரு கையில் சூலமும் ஏந்தியவளாய், மலைகளைத் தூளாக மிதித்து, இடியும் அஞ்ச ஆரவாரம் செய்து ராமன் முன் தோன்றிய தாடகை கூனியின் வக்ர த்ருஷ்டியில் பெண் நலன் எல்லாம் உடைய ''தையல்'' ஆகிவிடுகிருள். ''அத்தகைய உத்தமமான ஒரு நங்கையைக் கொல்ல ராமன் வில்லையா வளைத்தான்; ஆண்மையின் நேர்மையை அல்லவா வளைத்து விட்டான்? இந்தப் பெண் கொல்லி வீரன் தொன்று தொட்டு புகழோங்கி விளங்கிய இக்ஷ்வாகு வம்ச கிரீடத்தை நாளைச் சூடப்போகிருன். ஆண்மையையும் வீரத்தையும் ஸ்த்ரீஹத்தி செய்து பழிக்க வல்லவன் சக்கரவர்த்தியானல் வேறு விபரீதம் என்ன வேண்டும்? இதைவிட உன் மாற்ருளுக்கு வேறு என்ன செல்வம் வேண்டும்?'' என்று அடுக்குகிருள் கூனி.

ஆனால் ராமன்பால் இயற்கையில் தான் கொண்ட அன்புதான் கைகேயிடம் இன்னமும் தோன்றுகிறது. ராமபட்டாபிஷேகமாகிய சந்தோஷச் செய்தியை கொணர்ந்ததற்காக அவள் ஓர் உயர்ந்த ரத்னமாலையைக் கூனிக்குப் பரிசாக அளிக்கிறாள்.

கூனியோ சீற்றத்தோடு மாலையைப் பிடிங்கி எறிகிறாள். கைகேசி சேடியின் செயலைக் கண்டு ஸ்தம்பித்துப் போறாள். தன்னை இவ்வாறு அவமதித்த தாதியை அவள் கோபிக்கிறாளா? கூனி மேலும் பேசுகிறாள். ''உனக்கு என்ன உவகை வேண்டியிருக்கிறது? வெறும் பகட்டுக்காரியான: சீதையும், விகாரமாகக் கறுத்த மேனியையுடைய ராமனும் — என்ன ஜோடி! — இவர்கள் கோப்புடைய சீரிய சிங்காதனத்தில் வீற்றிருக்க நீ பெற்ற மகனை பரதன் அவந்தனாய், வெறுந் தரையில் கைகட்டி நின்று, சேவகம் செய்யப் போவதைக் காண்போம் என்ற உவகையா? உன் மாற்றாள், தன் மகனுடைய நல்வாழ்வில் கருத்துள்ளவளாய், காலமறிந்து, செய்வன செய்து பெருஞ்செல்வத்தைப் பெற்றுவிட்டாள். உன் வயிற்றிலே வந்து பிறந்த தோஷம், எல்லாச் செல்வங்களையும் அடையத் தகுதியுள்ள பரதன், இனி இறந்தவர்களோடு வைத்து எண்ணவேண்டியவனாகிவிட்டான். ஆம்! இப்போது தெரிந்தது தசரதன் வெகு பரிவோடு பரதனைக் கேகய நாட்டுக்கு அனுப்பியதன் உண்மைக் காரணம். என்ன ஜாலம்! அவளுடைய பேதித்த மனசிலே ஒவ்வொரு சாதாரண நிகழ்ச்சிக்கும் ஒரு விபரீத காரணம் கற்பிதமாகின்றது. பரதனிடம், தசரதனையும் கைகேசியையும் விட, அவளுக்குத் தான் அன்பாம்! ''தந்தை வஞ்சகமாக உன்னை நாடு கடத்தினான்; மாற்றவள் மகன் செல்வம் கண்டும் தாய் மனம் மகிழ்கிறாள். இத்தகைய கொடிய தந்தையையும் தீய தாயையும் உடைய பரதனே, உனக்கு இனி தெய்வம்தான் துணை'' என்று சாமர்த்தியமாக ஒரு கபட நாடகம் நடிக்கிறாள்.

படுக்கையிலேயே கூனியாகிய காலசர்ப்பம் அவளைத் தீண்டியதல்லவா. அதன் விஷம் கைகேசியின் மனத்துள்ளே பரவத் தொடங்குகிறது. தரும சிந்தை தலையெடுத்துப் பேச வழியில்லை. எனினும் இயல்பான அவள் நீதியுள்ளம் பேச முயற்சி செய்கிறது. ஆனால் என்ன தோல்வி! தன் தாதியைச் சினந்து கூறி வெளியனுப்ப அவளுக்குத் தைரியம் இல்லாது போய்விடுகிறது. ''நீ எனக்கும் பரதனுக்கும் நன்மை செய்பவளா. நான் பொறுத்தேன். இதைப் பிறர் அறிந்தால் என்ன நினைப்பார்கள்? போடி அறிவிலி'' இவ்வளவே அவளால் கூற முடிகிறது.

கூனி தன்னுள்ளே மகிழ்ச்சி கொள்கிறாள். வெற்றி தன்னதே என்று அவளுக்குத் தைரியம் பிறக்கின்றது. கைகேசியின் மனம் சலனமடைந்து விட்டது என்று உணர்ந்துகொள்கிறாள். நீதி தருமம், ராமன்பால் அன்பு, வஞ்சகம். பொறாமை, பரதன்பால் மோகம், என்னும் இப் பல்வேறு உணர்ச்சி ஜ்வாலைகளால் உருகி உருவற்ற நிலையிலுள்ள கைகேசியின் மனத்தைத் தன் பழியாகிய வார்ப்பிலே வடித்து உருவக்கி விடலாம் என்ற நிச்சயம் பிறக்கிறது கூனிக்கு. தன் பேச்சில் முழு வேகத்தையும் கொட்டுகிறாள்; வார்த்தைகள் அடிபோல் பளீரென்று விழுகின்றன. தான் தாதி, அவள் அரசி என்ற நினைவே போய்விடுகிறது. மனோதிடமிழந்து அவளுக்குச் செவி கொடுக்கும் கைகேசி செயலற்று ஸ்வதந்தரத்தையே பறிகொடுத்து விடுகிறாள்.

ராமனை நீ தர்மிஷ்டன் என்று மயங்குகிறாய். ஞானியாயினும் பெறுதற்கரிய செல்வம் பெற்றால், அவன் சிந்தனை பிறிதாவது நிச்சயம். பழமையை உன்னி உனக்கு ஒரு கேடும் வேண்டுமென்று ராமன் செய்யமாட்டான் என்றே கொள்வோம். ஆனால், அவன் செல்வச்செருக்கால் செய்யும் எத்தனையோ செயல்கள், உன்னுடைய, உன் அருமை மகனுடைய, ஏழ்மையைப் பளிச்சென்று எடுத்துரைக்குமே. ராமன் அரசனானால் கோசலை ராஜமாதா. அவள் மனம் உவந்து கொடுப்பதைத் தவிர உன்னது என்று நீ ஸ்வதந்தரம் பாராட்ட ஒரு பொருள் உண்டா? யாவும் அவளுடையதானால் உன் உடைமைகள் யாவும் பிச்சையேற்ற பொருள்கள்தானே? உன்னை ஒரு ராஜமகிஷி என்று பலர் வந்து எப்போதும்போல்

யாசிப்பார்களே அவர்களுக்கு நீ உன் மார்றவளிடம் யாசித்துப் பெற்றுக் கொடுப்பாயோ ,வந்தவர்க்கு இல்லை என்று சொல்ல வெட்கி உயிர் விடுவாயோ, அல்லது உயிரை இன்னும் மருந்தாக எண்ணி என்னிடம் கொடுப்பதற்கு யாதொன்றுமில்லை', என்று ஈகை மறுத்து வெட்கமின்றி உயிர் வாழ்வையோ? உன் தாய் வீட்டார் இங்கு வந்தால் அவர்கள் யார் செல்வத்தைக் காண்பார்கள். அவர்க்கு ஒரு உதவி வேணடுமானல் உன் மாற்றுள் தயவையா நம்பி இருக்கவேண்டும்?'' என்று பொழிகிறாள் கூனி.

என்ன துடுக்கு! ஒவ்வொரு மொழியும் கூரிய பாணம் போல் கைகேசியின் பேதித்த மனசிலே தைக்கிறது. நஞ்சம் கலந்த அந்த மொழிகள் அவளுடைய தூய மனத்தை முற்றிலுமே மாற்றி விடுகின்றன. இயல்பாக உள்ள கருணை, அன்பு, தருமம், நீதி இவை அந்த நச்சுப் பெருக்கிலே மாய்கின்றன. கைகேசி கூனியின் போதனை மயக்கிலே ஆழ்ந்து விடுகிறாள்.

அந்தப்புரத்திலே கைகேசியைக் காணேம். பாற்கடலில் படர்ந்த பவளக்கொடியாகக் காட்சியளித்த அதே கைகேசி வஞ்சனையும் தீமையும் வடிவெங்கும் கொழுந்துவிடும் மூதேவியாகக் கவிஞர் கண்களில் தோன்றுகிறாள். கூனியின் போதனை கைகேசியின் மனத்தை மட்டுமல்ல- வடிவத்தையே அழித்து மாற்றி விடுகின்றது.

உலகத்திலே 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்பதல்லவா உண்மை. இங்கு அதற்கு மாறான நிலமை உண்டாகிவிட்டதே என்று நாம் பதறுகிறோம். ''இராமனைப் பயந்தஎற்கு இடர் உண்டோ'' என்று கூறிய கைகேசி இப்போது அவனைக் காட்டுக்கு அனுப்பத் தீர்மானிக்கிறாளே. எதனுல் அவள் மனம் மாறியது? கூனியின் சாகஸம்தானு? ''அதுமட்டும் இல்லை. கைகேசி ராமன் மீது வைத்த அன்பு கூனியின் போதனையால் மட்டும் மறைந்து விடக்கூடிய அவ்வளவு அற்பமானதல்ல. வேறு தடுக்கமுடியாத காரணங்களும் உண்டு என்கிறார் கவி.

அரக்கர் மகள் இதுவரை செய்துவந்த பாவம் முற்றி அழியும் காலம் வந்து விட்டது. ராவணன் தீமை, கூனியின் உருவெடுத்தது; அப்பலனை அளித்தது. இது ஒன்ரு? தேவர்களும் மற்ற சாதுக்களும் இயற்றிய தவங்களும் பலனளிக்காமல் போகுமா? தருமத்தின் வெற்றிக்காகச் சூழ்ச்சி செய்தனர் தேவர்கள். தீமையே தீமையை அழிக்கும் கருவியாக அமைந்தது. ''இமையோர்கள் வல்ல விரகு யார் வல்லார்?'' 'பரதன் என் மகன்' என்றும் அவன் ராஜ்யமாள்வதைக் காண வேண்டுமென்றும், ஒரு ஆசையைக் கைகேசியின் மனசிலே தோற்றுவித்தனர் கூனி மூலமாக. கைகேசியின் ''தூய சிந்தையும் திரிந்தது.'' ராமன் வனம் புகுகிருன். ராவண வதம் ஸங்கல்ப உலகிலே நிறைவேறி விடுகிறது.

இவ்வாறு அவள்மனம் திரிதலும், இயல்பிலேயே கைகேசியின் மனசில் உள்ள காருண்யம் தவிக்கின்றது. கைகேசியை விட அதற்கு மனமில்லை. ஆனுல் இமையோர் சூழ்ச்சி அவளை நோக்கி 'விரட்டு அதை' என்று உத்தரவிடுகிறது. அச்சூழ்ச்சிச் சுழலில் அகப்பட்டுக் கலங்கும் கைகேசி அருளைத் துறக்கிருள், உலகை வெறுக்கும் ஒரு சந்நியாசியைப்போல.

''சீரை சுற்றித் திருமகள் பின்செல, மூரி விற்கை இளையவன் முன் செல,'' காரை ஒத்த திருமேனியை உடைய ராமன் நகரத்து மாந்தரும் மகளிரும் ''ஆ! விதியே! ஓ!'' என்று புலம்ப ''வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள் தாழ்வினையது வர,'' மரவுரி தரித்துச் சடைமுடிதாங்கி, அயோத்தி நகரின் தெருவிலே போவதைக் கண்டும் கைகேசியின் மனம் இளகவில்லை. ராமன் பிரிந்தமைக்கு ஆற்றுதவனுய் அவன் வனம் போனுன் என்ற சொல் கேட்ட போதே ஆவி போன தசரதனைக் குறித்தும் அவள் துக்கிக்கவில்லை. தெய்வ சங்கல்பம் அவள் மனசைக் கல்லினும் கடிதாக்கிவிட்டது.

மற்ருெரு காட்சி:- சித்திரக்கூட பர்வதம். ராமலக்ஷ்மண சீதை மூவரும் பர்ணசாலையிலிருக்கின்ருர்கள். பரதன் தன் சேனையோடும், நகர மக்களோடும், தன் தாய்மார் மூவரோடும் அங்கு வந்து சேருகிருன். 'தந்தை வலியனே' என்று கேட்ட ராமனுக்கு உன் பிரிவாற்ருமல் அவன்

உயிர்துறந்தான் என்ற பதில் கிடைக்கிறது. ராமன் புலம்பி ஏங்குகிறான். தன் தாயரைக் கண்டதும் ''எந்தையாண்டையான் இயம்புவீர்'' என்று கதருகிறான். கவிஞர் சொல்கிறார்: தாயர் மூவரும் [கைகேசியுள்பட] தம்முள் வேற்றுமை யின்றி ராமனிடம் இரக்கம் கொண்டு அரற்றி னார்கள் என்று. அம்மூவரையும் ''ஒய்வில் அன்பினர்'' என்று அவர் குறிக்கின்றார். கோசலை, சுமித்திரை இவர்களைப் பற்றியவரை இவ்வார்த்தைகள் சரி. கைகேசியைப் பற்றி எவ் விதம் அவர் இவ்வார்த்தைகள் கூறலாகும்? மேலே கைகேசியின் கொடுமை வெளியாகவில் லையா? அக்கொடுமை தேவர் மாயையால் விளைந்ததேனும் அம்மாயை அவளை விட்டு எப் போது நீங்கிற்று என்பதாவது தெரிய வேண்டு மல்லவா?

தசரதன் உயிர் நீத்தபோது தேவிமார் புலம் பியதாகக் கூறுமிடத்து, ''ஆழிவேந்தன் பெருந் தேவி அன்ன பன்னி அழுது அரற்றத் தோழி அன்ன சுமித்திரையும் துளங்கி ஏங்கி உயிர் சோர,'' என்றும், ''கோதில் குணத்துக் கோச லையும் இளைய மாதும் குழைந்து ஏங்க'' என்றும், அழுத தேவியரை வசிஷ்டன் தேற்றுவதாகக் கூறுமிடத்து ''அரிவைமார்கள் இருவரையும் தா இல் கோயில் தலை இருத்தி'' என்றும் கவிஞர் கோசலையையும், சுமித்திரையையும் குறித்துக் காட்டி கைகேசியை விடுத்து ஒழிக்கின்றார். அவ் வாறு மற்றத் தேவிமார் இருவரோடும் உணர்ச்சி ஒற்றுமை இல்லாத கைகேசியை விடுத்துக் கூறும் முறையைக் கையாளும் கவி இங்கு அவ் வாறின்றி அவர்களோடு கைகேசியையும் ஒன் றாக வைத்தே கூறுவானேன்? கைகேசியின் நேர் மையான மனம் விதியின் வலிமையால் ஒரு பொழுது சற்று வளைவுற்றது. அக்கோணல் பின் னால் நிமிர்ந்தது என்பதே கம்பரது கொள்கையா யிருக்கவேண்டும். இல்லாவிடில் கைகேசியை யும் ஒய்வில் அன்பினால் என்று அவர் கூற வேண்டியதில்லை. கைகேசியின் மனசிலே தோன் றிய கூனியின் கோணல் எப்போது நிமிர்ந்தது என்று பார்ப்போம்.

ராமன் கானகம் சென்றதும், தசரதன் உயிர் துறந்ததும் தன் சூழ்ச்சியின் விளைவுகளே என்று கைகேசி பரதனிடம் சொல்லவும், அவன் அவளைப் பலவாருகப்பழித்து, கடைசியாக ''நான் ராஜ்யம் ஆளவேண்டும் என்ற ஆசையல்லவா உன்னை இவ்வளவும் செய்யத் தூண்டியது. அந்த எண்ணம் சிதைய உன் பாழ்த்த வயிற்றில் நான் கருவாய் இருந்த பாவம்தீர, என் அண்ணன் மேற் கொண்ட தவத்தை நானும் மேற்கொள்கிறேன்'' என்று சபதம் செய்கிறான். கைகேசி மனம் சலிக்க வில்லை. ''சிறுபிள்ளை. திடீரென்று நடந்த வர லாறுகளைக் கேட்டதும் மனம் பதற்றமடைந் திருக்கிறது. தன்னடைவிலே சாந்தமுறும். ராஜ்யம் அரசனில்லாதிருக்க வசிஷ்டன் உடன் படான். வேண்டா வெறுப்பாக வேனும் பரதன் முடிசூடியே தீருவான்'' என்று அவள் மனம் கனவு காண்கிறது. தன்மகன் நிவந்த ஆசனத் திருப்பக் கண்டு களிக்க வேண்டும் என்று அவள் கொண்ட ஆசை, ராமன்பால் உள்ள கருணையை விரட்டி அவள் மனசை முற்றிலும் வியாபித்த ஆசை, பரதன் செய்த சபதத்தோடு அழியாததாய் பகற்கனவொன்றை இழையாகப் பற்றிக் கொண்டு நிற்கிறது.

சக்கரவர்த்தி கிரியைகள் முடிவடைந்து விட்டன. கைகேசி தன் அந்தப்புரத்திலே இருக் கிறாள். வள்ளுவன் ''பரதன் ராமனை மீண்டும் கொணரக் கானகம் செல்கிறான். யாவரும் எழுக'' என்று தெருவிலே முரசறைகிறான். அயோத்தி மக்கள் மனம் பூரிக்கின்றனர். சேனைகளும் எழுகின்றன. களிப்புமிகுதியால் வெளியே கடல் முழக்கம் போன்று ஆரவாரம் எழுகிறது. வள்ளுவன் மொழியும், மக்கள் ஆரவாரமும், கைகேசியின் மனக்கோட்டை யிலே இடிபோல் விழுகின்றன. அவள் ஆசை பற்றிநின்ற இழை அற்றுப்போகின்றது. அவள் மனசில் அன்புக்கு இடமின்றித் தடையாய் நின்ற அந்த ஆசைஅணை உடைந்து சிதறுகிறது. புண்ணிய மூர்த்தியாகிய பரதனுடைய மகத் தான த்யாகம் என்னும் ஜோதி மாயையால் இருண்ட அவள் மனசிலே ஒளிவீசுகின்றது. அத்திவ்ய தேஜஸ்ஸின் முன்னே, மாயைஇருள் ஓட்டமெடுக்கின்றது. அவள்மனம் முனைய

தூய்மை நிலையைப் பெறுகின்றது. அவள் மன சிலே இடம் பெருமல் தவித்துநின்ற காருண்ய மும், ராமன்பால் அன்பும் பெருக்கெடுக்கின் றன. அவ்வன்பு தூண்டுகோலாக அவனுக்குத் தன்னுல் நேர்ந்த கேட்டிற்கு மனத்துயரும் கழி விரக்கமும் அவள் மனத்திலே பாய்ந்து பெருகு கின்றன.

இவ்வாறு கைகேசியின் மனம் முன்னைய நிலைமையை அடைந்தது என்னும் உண்மையை

''எழுந்தது பெருமப்டை. ஏழு வேலையும்
மொழிந்த பேருழியின் முழங்கி முந்தெழ
அழிந்தது கேகயன் மடந்தை ஆசை; போய்க்
கழிந்தது துயர், நெடுங் காதல் தூண்டவே''

என்ற பாடலால் கூறினுர்.

இதனுலேயே அவளும் ராமனை அழைக்கச் செல்வாரோடு உடன் செல்கிருள், ராமனைக் கண்டு கதறுகிருள்; கம்பரும் அவளை ''ஒய்வில் அன்பினுள்'' என்று கோசலை, சுமித்திரையோடு ஒன்ருகவைத்துக் கூறுகிருர். ராமன் வனவாசம் முடிந்து திரும்பவருகிருன் என்று செய்தி கேட் டுக்களிக்கும் பரதன் ''வஞ்சனை இயற்றிய மாயக் கைகயார், துஞ்சுவர் இனி எனத் தோளைக் கொட்டும்'' தன்தாய் செய்த தீமையை இவ் வளவு காலமும் உன்னிக்கொண்டே இருக்கும் பரதன், அவள்தன் செயலுக்கு வருந்துகிருள் என்பது சற்ருவது தெரிந்திருந்தாலொழிய. ராமனை அழைக்கச் செல்லும் புனிதமான பிரயாணத்தில் அவளை உடன்வர அநுமதித்தி ருக்கவே முடியாது.

தேவர் மாயையால், தன்மகன் ராஜ்யமாள வேண்டும் என்ற ஆசைதோன்ற, அதன்வலி யால் வளைந்த அவள் நேர்மை பரதன் ராமனை அழைக்கப்புறப்படுமட்டும் வளைவுற்று, அவன் புறப்படலும், அவன் த்யாக ஒளியில் மாயை இருள்மறைய, அதன் விளைவால் தோன்றித் தன்னை நெளிவித்த ஆசை அற்றுப் போதலும், முன்னைய நிலைமையை அடைந்து நிமிர்கிறது. கைகேசியின் மனம் மறுபடி மாறுகிறது. முன்னுல் விளைந்த மாறுதல் கொடுமைச் சுழலில் அவளை அழுத்தியது; இப்போது கரையேற்றி அன்பு நெறியில் செலுத்துகிறது கைகேசி ராமனுடைய மனசிலே பெற்றிருந்த தெய்வஸ் தானத்துக்குத் தகுதி பெறுகிருள்.

"கம்பர் உவமை நயம்"

பண்டிட் T. இராமாநுஜன் ("செட்டிநாடு" 27-5-1941 இதழ்)

காவிய உலகில் இன்று காறும் நின்று நிலவும் பெரும்புகழ் படைத்துச் சென்ற புலவர் பெருமக்களுள் தலைசிறந்தவர் நம் கவிச்சக்கர வர்த்தி - கம்பநாட்டாழ்வார் என்பது ஒருதலை. இவர், கவிநயங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற உத்தமக் கவிஞர். தான் பிறந்த தொரு தகவினால், தமிழ் உலகிற்கும் "உயர் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என மேலவர் புகழும் வண்ணம் பெயரிட்டுச் சென்ற பெருமகன். காத்தற் கடவுளாம் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானிடத்துக் கொண்ட அளவிறந்த பக்திப் பெருக்கால் தான் கண்ட இன்பம் தரா தலமும் பெற எண்ணி அவ்விராமகாதையைத் தமிழில் முறைப்படுத்துரைத்த தண்ணளியாளர்.

இப்புலவர் பெருந்தகையை அறியாதார் தமிழ்நாட்டில் இன்னும் இரார். 'கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' "கல்வியிற் பெரிய வர் கம்பர்" என்றின்னோரன்ன முதுமொழிகள் அடுக்கிய மூவுலகும் கேட்கும் ஆற்றலுடையன. ஆயின், இவரது சரித்திரத்தை உள்ளது உள்ள படி உணரமாட்டாத நிலையில், தமிழ் நாட்டின ராகிய நாம் இன்று இருக்கிறோம் என்று நம் மனம் பெரிதும் புண்படுகின்றது. எனினும், இவரியற்றிய இராமகாதையாவது நம்மிடையே நின்று உலவுவது நாம் முன்னைச் செய்த நல்வினைப் பயனேயாம்.

இவ்விராமகாதையை முன்னர்த் தேவ பாடையிற் செய்தவர் "வாங்கரும்பாதம் நான்கும் வகுத்த வான்மீகி" என்பார். "கற்பார் இராம பிரானை அல்லால் மற்றுங் கற்பரோ" என்று பெரியார் பணித்தருளியபடியே, தன்குணம், செயல், அழகு முதலியவற்றால், கண்டவர்தம் மனம் வாங்கும் தன்மை உடையவனாய இராம பிரானது கதையினைக் கேட்கும் பான்மை ஒன்றுமே, அறமுதல் பொருள்கள் அனைத்தையும் பயக்க வல்லது என்பது பல்லான்ற கேள்விப் பயன் உணர்ந்த பழம் பெரும் மக்கள் துணிவு.

இவ்வாறு ஒப்புயர்வற்றதொரு திவ்விய கதையைச் செந்தமிழ்ப் பாவினால் பரிந்து உரைத்த கம்பநாடரது இராமகாதையோ அவ் வாரணக் கவிதையாம் வான்மீகத்தினும் பல்லாற்றாலும் பெருமை படைத்தது எனப் பாவலர் பலரும் போற்றுமாறுள்ளது. நம் கவிச் சக்கரவர்த்தி அதனையே முதல் நூலாகக் கொண்டு வழிநூல் இயற்றினாரேனும், கால தேசங்கட்கு ஏற்பச் சிற்சில இடங்களில் மாற்றி யும், திருத்தியும் பதுக்கிச் செய்யத் தலைப்பட் டனர். மற்றும், இதன் கண் உள்ள சொற் பொருள் நயங்கள், கவியமைப்பு, கற்பனைத்திறன், காவிய அமைதி, கொடை நயம், சந்த இன்பம் குறிப்புப் பொருள். இலக்கண விசேடம். சொல் லணி, பொருளணி ஆகிய இன்னோரன்ன சிறப் பியல்புகள் எல்லாம் புலம் மிக்கவரால் பெரிதும் பாராட்டற்கு உரியன. இது கருதியே 'கம்ப நாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயங் களியாதே' என அபியுக்தர் வாக்கு வழங்கி வருவதூஉம் என்க. பலவாய்ப் பரந்து விரிந்து கிடந்த இலக்கியங்களை எல்லாம் கற்று அவ்வ வற்றின் கண் ஒவ்வோர் சுவைநலம் கண்ட கலைவாணர் யாவரும், எல்லா நயங்களும் ஒருங்கு அமையப் பெற்றிருத்தலின் இஃதொன் றனிடத்தே அன்பு செலுத்திப் பயின்று. இன்பம் எய்திவந்தனர் என்பது இதன்கண் பொதிந்த புதை பொருளாகும். அவற்றை எல்லாம் எடுத்து விரித்துரைப்பது ஈண்டைக்கு ஏலா மையின் கம்பர் கையாண்ட உவமையின் நயத்தை மட்டும் சிறிது விரித்துக் கூறி விடை பெறுகின் றேன்.

உவமை என்பது அணிவகைகளுள் ஒன்று. அணியாவது அழகுதருவது என்னும் பொருட் டாய்ச் செய்யுட்கு இன்றியமையாது வேண்டப் படுவது. 'உணர்வினின் வல்லோர் அணிபெறச் செய்வது செய்யுள்' என்பது செய்யுளியல். அணி கலம் அணிந்த நங்கை யாங்ஙனம் பார்த்தோர்

பலரானும் விரும்பப்படுகின்றனளோ, அம் முறையே அணியொடு புணைந்த கவியும் கண்டோ ரான் விரும்பப்படும்.

நிற்க, உவமை அணியாவது இருவேறு பொருள்களிடத்து உள்ளதொரு ஒப்புமையை விளங்கக் கூறுதல், புலி அறியாதான் ஒருவனுக் குப் பூனை ஒன்றனைச் சுட்டிக்காட்டி 'இது போல்வது புலி' எனத் தெரிவிப்பது இவ்வணி யின் பாற்படும். கண்டுங் கேட்டும் இராமையான் புலன்கட்குப் போதமாகாததொரு பொருளைக் கண்டதுபோல் மனதிற் பதியச் செய்து விளங்க வைத்தல் இது கொண்டு யாம் அடையும் பெரும் பயனாகும். பிறிதொன்றற்கும் இலதாய்த் தனி வகையான் இதற்கு மட்டுமுள்ள இத்தன்மைத் தாய அரியபயன் கருதியே, அணிவகைகளைப் பெரிதும் வேண்டாத ஒரு சார் பண்டைத் தமிழாசிரியர்களும் இஃதொன்றனையே முனைந்து வேண்டினர். உதாரணமாகக் கடவுளியல் அறியாதான் ஒருவனுக்கு அஃதறிந்தான் பிறி தொருவன் ''கடவுள் விளக்கினை ஒத்து விளங்குபவர்'' என உவமை முகத்தாற் கூறின், அவ்வறியாதான் உடனே கடவுளைப் பற்றி, விளக்கினைப் போன்ற ஒளி உள்ளவர்; அறியாமையாகிய இருள்பற்ற ஒண்ணுதவர், உயிர்களது அகவிருளைப் போக்கடிக்கும் ஆற்ற லுள்ளவர்; பிறவி இருளால் வருந்தும் யாவராலும் விரும்பப்படுகின்றவர்' எனறிப்படி எல்லாம் போதமுண்டாகப் பெற்று விரித்துணருகிறுன்.

எனினும், இதன் மூலம் இவ்வாறு அறிந்து கொள்ளுதற்குமுன் கடவுளைப் பற்றி அவன் கொண்டிருந்த உயர்தர எண்ணமும் சிறிது குலைய இடம் ஏற்படும். 'கற்பனை கடந்துநின்று, மனமொழி மெய்கட்கு எட்டாது நிற்பவர் கடவுள்' என இவ்வாறு அறிதற்கு முன்னமே மனதில் ஊறிக்கிடந்த ஒரு பழங்கொள்கை சிறிது அசைவுற்று 'உலகில் தோன்றும் விளக் கினை ஒத்த எளிய காட்சியையும் உடையவர்' என்ற கொள்கைக்கும் உடன் இடன்தருதல் மன இயற்கையேயாகும். ஆகையால் இப்படிப்பட்ட சிறிய குறைபாட்டையும் உண்டாக்காத வண்ணம் உவமைகூறி முடித்தலே உத்தமக் கவிகட்டு இயற்கை. இதனை நம் கவிச்சக்கர வர்த்தி பால் இயற்கையொடு இயைந்த பெருங் குணம் என்பதை நாம் தொட்ட தொட்ட இடந் தோறும் மலையிலக்கென இலங்கக் காணலாம். மற்று, நடுத்தரம் உடைய கவிகளோ எனில், உவமை கூறுங்கால் இக்குற்றமும் உளதாதலை அறிந்து, பின் அதனை நீக்கும் பொருட்டு, அறையாத மிகுபெருங் காற்று அடித்தாலும் அசையாதே அவியாதே விளங்குகின்ற சோதி மணி விளக்கு''- 'கோடாத மணிவிளக்கு' -என இவ்வண்ணம் எல்லாம் சில அடைமொழிகளைக் கூட்டி வேற்றுமை காட்டி, 'உலக விளக்கினும் கடவுளாம் விளக்கு வேறுபட்டுயர்ந்தது' என விளக்கிச்செல்வர். ஆனல் கருவிலே திருவுடைய கவிஞர் இஃதொப்பது புரிவதிலர். உவமை தொடுக்கும் காலத்திலேயே இத்தகைய தாழ்ச்சி யுணர்வு பிறக்க ஒண்ணுதபடி மேன்மேலும் உயர்த்திக்கொண்டே போவர். இதன் உண்மை யினைக் கம்பர் கூறியுள்ள உவமைகளுள் யாதேனும் ஒன்றிரண்டினை ஆயும் முகத்தானே நாம் நன்கு அறிதல் கூடும்.

கம்பராமாயணத்து இராமலக்குமணரது பாலப்பருவ நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் பாலகாண்டப் பெரும்பகுதியுள், 'கையடைப் படலம்' என்ற தலைப்பெயருள்ளதொரு சிறு பாகம் உண்டு. இஃது அவ்விராமலக்குமணரைத் தயரதன் கோசிக முனிவரிடத்து அடைக்கலமாக ஒப்புவித்ததைப் பற்றிக் கூறும். இப்படல அமைப்பைப் பற்றிக் கம்பர் கையாண்ட முறை யினைச் சிறிது கூர்ந்து நோக்கின், அவர் அதனைத் தயரதன் கொலுவிருக்கை, கோசிகன் வருகை யும் வேண்டுகோளும், கையடையாக ஒப்புவித் தல் என முச்சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு கதை நடத்திச் செல்லுகின்ருர் என்பது நன்கு விளங்கக் கூடும்.

அதனுள் தயரதன் கொலுவிருத்தற் சிறப்புப் பற்றி நான்கு கவிகள் புனைந்து உள்ளார். அது பற்றி எழுந்ததே நம் ஆராய்ச்சி. தயரதனே அறுபதினாயிரம்ஆண்டுகள் உலகுமுழுவதும் உறு பகையின்றி ஓம்பினேன்; சக்கரவர்த்தி; வள்ளல்; பொருள், போகம், அதிகாரம் என்றிவற்றால் தன்னேர் ஒப்பார் இம்பர் இல்லை என்னும் வண்ணம் நிமிர்கீர்த்தியுடையோன். இத்தகைய பேரரசனது இருக்கையைக் கவி நமக்கு அறி விக்க நினைக்கிறார். நினைத்தகவி உடனே நாம் அறியாத இதனை அறிந்ததொரு உவமை காட்டித் தெளிவுறுத்துவான் வேண்டினார். இவ் வளவு ஏற்றமும் பெருமையும் உடையானுக்கு உலகத்துள்ள சாமானியப் பொருள்களை உவமை கூறின், அது விலங்கினினும் மிக்கது விண்ண வர் தரு, என உவமை கூறலின் வேறு அன்று. ஆகையால், பொருள், போகம் அதிகாரம் என்ற இவற்றான் மிக்கவனாகக் கருதப்படும் இந்திரனை உவமைகூறி முடிக்கிறார். இவ்வாறு கூறுங் காலத்து முற்கண்டபடி இந்திரனுக்குரிய குற்றங் குறைகளும் உடன் சார்தல் கூடும். அன்றியும் இந்திரனை ஒத்தவன் தயரதன் எனக்கூறின், 'தயரதனும் இந்திரனும் ஒப்பானவர்' எனக் கற்போருக்குக் கருத்துண்டாகி, 'இந்திரனினும் சிறந்தவன் தயரதன்' எனக் காவியமுறைக் கேற்ப எடுத்த தலைவனுக்கு ஏற்றங்கூறும் பாவமும் குறைய நேரிடும். இவ்விதம் சிறிது தாழ்வுணர்ச்சி பிறத்தற்கு இடங்கொடுத்தலே இவ்வுவமையின்கண் உள்ள ஊறுபாடு என முன்னர்க் கண்டோம்.

ஆனால், நம் கவிச்சக்கரவர்த்தியாரோ இவ் விரு குறையும் ஒருங்கு நீங்குமாறு, முதன்மூன்று பாட்டுக்களின் நின்றே 'தயரதன் இந்திரனினும் உயர்ந்தவன்' என்ற எண்ணம் உடன்உடன் உதிக்குமாறு கவிகளை நன்கு நயம்படப் புணர்த்து இறுதியாகக் கோசிக முனிவனைத் தயரதன் வணங்கி யுபசரித்தான் எனக்கூற வேண்டிய இடத்து,

''கந்தமலரிற் கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக்கடி(து)தெழுந் தடிபணிந்தான்''

எனக் கொண்டு முடிப்பர். இப்படிக் காட்டிய உவமையுள் நாம் முற்கண்ட தாழ்ச்சி உணர்வு பிறவாமைப் பொருட்டு ''தயரதன் வீற்றிருந்த மண்டபம் சுதர்மையினும் மிக்கது; தயரதன் இந்திரனினும் மிக்கவன்; ஆங்கு வந்த கோசி கன் பிரமனினினும் உயர்வு பூண்டோன்'' என உபமேயமாகிய கோசிகதசரனது தோற்றமே அதனினும் சிறந்ததெனத் தோற்றுமாறு இப் படலத் தொடக்கச் செய்யுளின் நின்றே அடி கோலி அமைத்த ஆசிரியரது தன்மை ஆய்ந்து ஆய்ந்து மகிழுதற்கு உரியது.

''நனைவரு கற்பக நாட்டு நல்நகர்
அனைவரும் அணைதர அயிர்க்கும்; சிந்தையால்
நினையவும் அரியது; விசும்பின் நீண்டது; ஓர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தினான்.

என்பது இப்படல் முதற்செய்யுள். அரும்புகள் அலரப் பெற்ற கற்பக விருட்சத்தைத் தனக்குச் சிறப்புரிமையாகக் கொண்ட அமராவதிப் பட்ட ணத்தில் வசிக்கும் தேவரனைவரும், நம் இந் திரன் வீற்றிருக்கும் சுதர்மை இதுதானே என்று ஐயுறும் வண்ணம் அழகு வாய்ந்ததாயும்; மனத்தி னாலும் இன்ன வண்ணம் இருப்பது என நினைத்தற் கரியதாயும், ஆகாயத்தை அளாயதாயும், தனது வருகை நோக்கி மணி முதலிவற்றான் அழகு செய்யப்பட்டதாயும் உள்ளதொரு மண்டபத் தைத் தயரதன் அடைந்தான் என்பது இதன் தெளிவான பொருள். பின்னர் தயரதனை, இந் திரன் என உவமிக்கக் கருத்துக் கொண்ட கம்பர் இச்செய்யுளிலேயே தயரதன் மண்டபம் தேவேந்திரன் மண்டபத்தினும் பலவகையானும் சிறப்புற்று இலங்குவது என்பதனை, 'கற்பக நாட்டுநல்நகர் அனைவரும் அணைதர அயிர்க்கும் .... மண்டபம்' என்ற சொற்கிடக்கையால் பெறவைத்துள்ளார். அன்றியும் புண்ணியவினை மிகப்புரிந்து தேவரானமையான் அயிர்த்தற்குக் காரணமற்ற அறிவுமிக உடைய அவர்களனை வருமே ஒருசேர, தினந்தோறும் பழகிப்பயின்று அறிந்த மண்டபத்தின் இயலையும் மறந்ததோடு அன்றி, இதுதான் நம் மண்டபம் எனவும் துணிந்தனர் என்னில், அதனினும் மிக்கதொரு எழில்நலம் படைத்தது இது, என அதனால் நன்கு வெளியிட்டபடியாம். இவ்வாறு இம்

மண்டபம் சுதர்மையினும் அழகிற்று என்றனைக் குறிப்பாற் காட்டிய இவர்கூறும் அடுத்த கவி யின் அமைப்பையும் துருவி ஆராய்வாம்.

''தூயமெல் அரியணைப்
பொலிந்து தோன்றினன்;
சேயிரு விசும்பிடைத்
திரியும் சாரணர்
நாயகன் இவன்கொல்;
என்று அயிர்த்து நாட்டம்ஓர்
ஆயிரம் இல்லைஎன்று
ஐயம் நீங்கவே''

மிகப்பெரிய வானத்து இயங்கும் தேவ தூதர் அனைவரும் நம் நாயகன் இந்திரன் இவன்தான் என்று சந்தேகித்துப் பின் ஆயிரம் கண் பெற்றிலாமையின் அல்லன் எனத் தேறித் தெளியும்படி ஆதனத்தமர்ந்தான் தயர தன் என்பது இதன் கருத்து. இதனுள்ளும் முன் மண்டபத்தைத் தேவமண்டபமாகிய சுதர்மைக்கு ஒப்பிட்டதற்கு ஏற்ப, தயரதனை இந்திரன் என ஒப்பிடுதலோடு, இந்திரனிலும் உயர்ந்தோன் தன் காப்பியத்தலைவனும், தயரதன் எனவும் ஏற்றம் தொனிக்குமாறு அமைத்திருத்தல் கற் றோர்க்குக் கழிபேரின்பம் விளைப்பது ஆகும் பிறிதும் பொதுவகையால் 'தேவர்கள்' அயிர்த் தனர் என்னாது, சாரணராகிய தேவதூதர்களை எடுத்தோதியதின் நயம் நாக்கொண்டு நவி லும் நடுத்தரம் உடையதன்று. தேவ ஒற்றரா வார் தம்தாய் நாட்டிற்கும் நாட்டினையாளும் அரசற்கும் யாதொரு வகையிலும் இடர்உருத வாறு நன்கு காத்து வரவேண்டி மாற்றாரது வேற்றுப்புலம் சென்று அடிக்கடி உளவறிந்து அப்பொழுதைக்கப்பொழுது அரசனைக் கண்டு வந்து சொல்லும் தன்மையர். உதாரணமாக. ஆண்டுகள் நாள் திங்களாய் உடன்மன்னி உறையும் தன் தகப்பனை உருவறியாது வயது முதிர்ந்தமைந்த மகன் வேறுஒருவனை மயங்கித் தன்தகப்பன் எனக் கண்டனன் எனில், தன் தகப்பனினும் அவ்வேற்றான் உருஒளிநலங் களான் மிக்கத் தோன்றியிருப்பன் என்பது மறுக்கமுடியாத உண்மை அன்றோ! அம்முறையே யாண்டும் எப்பொழுதும் பழகிப்பழகிப் பயின்ற றிந்த தேவதூதரும் மயக்குற்றார் எனில், தேவேந்திரனினும் தயரதன் உருஒளி நலங் களால் மிக்கு விளங்கினன் என்பது சொல்லா மலே போதரும். இம்மட்டுமோ! 'நாட்டம் ஓர் ஆயிரம் இல்லை என்று ஐயம் நீங்கினர்' என்பது அவர்கள் ஐயம் நீங்கித் தெளிதற்கு ஓர் ஏது வாய்பாடாக எடுத்துக் காட்டப்பட்டதாயினும், தொனிவகையானும், குறிப்பு வகையானும் இந்திரனுக்கு அகலிகை காரணமாக எய்திய சாபங்கருதி ஆயிரங்கண் ஏற்பட்டது; அது குறையுடைமை. ஆயின், தயரதன் அக்குறை ஒன்றுமின்றி இந்திரனினும் சிறந்தோன் எனத் தெரிவித்து நின்றமையும் நுதலிற்று. என்னே கம்பர் கவிப் பெருமை! கல்வியே கம்பரால் அன்றோ சிறப்பெய்தியது!

இனி இதனை அடுத்த கவி கோசிகன் வருகை யைக் குறிப்பது.

''மடங்கல்போல் மொய்ம்பினன்
முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறு
அமைத்துத் தேவரோடு
இடங்கொள் நான்முகனையும்
படைப்பன் ஈண்டுஎனத்
தொடங்கிய கோசிக
முனிவன் தோன்றினன்.

இக்கவியினுள் விசுவாமித்திர முனிவன் வந்தான் எனக் கூறவந்தவர், திரிசங்குவிற்காக உலகம் படைக்கப் புகுந்ததொரு வரலாறு குறிக்கும் அடைமொழியுட் சில புணர்த்துக் கூறுகின்றனர். இங்ஙனம் கொண்டதும் பிற்கூறப் புகும் உவமை யுள் யான் முற்கூறிய ஊறுபாடு உருமைப் பொருட்டே என்க. முன் இருகவியால் தேவேந் திரனிலும் தயரதன் பொலிவுற்று விளங்கினன் என்பதைத் தெரிவித்த கம்பநாடர் இங்கு தேவேந்திர சபைக்கு அடிக்கடி வரும் பிரமனை ஒப்ப, அவனினும் சிறந்த விசுவாமித்திரன் வந்து சேர்ந்தான் என்பார், ''மன்னுயிர் அடங்கலும் உலகும் வேறு அமைத்துத் தேவரோடு இடங் கொள் நான்முகனையும் படைப்பன் ஈண்டெனத் தொடங்கிய கோசிகமுனி தோன்றினன், என் றார். சத்திய லோகத்தில் உள்ள தேவகணங்களை

யும் பிரமனையும் ஒருசேர இவ்வுலகிலேயேஉண்டு பண்ணத் தொடங்கிய முனி எனவே பிரமனினும் முனியுயர்ந்த தன்மை துளக்கமுற விளக்கமாகும்.

இவ்வாருக, தேவலோகத்திலுள்ள சுதர்மை யினும் அழகுகொடு விளங்கிற்று தயரதனுடைய மண்டபம்; தேவேந்திரனைக் காட்டிலும் சிறந்து விளங்கினுன் தயரதன்; ஆங்குவரும் பிரமனினும் பெருமை படைத்திட்டான் ஈங்குப் போந்த கோசிகன், எனத் துவக்கமுதலே உவமையைத் திறம்பட எடுத்துக் காட்டி இறுதியில்.

'' வந்துமுனி எய்துதலும் மார்பிலணியாரம்
அந்தர நிலத்திரவி அஞ்ச ஒளி விஞ்ச
கந்தமலரிற் கடவுள் தன்வரவு காணும்
இந்திரன் எனக்கடிதெழுந்தடி பணிந்தான்''

எனக் கூறிப் போகும் நயம் நன்கு அமைந்த தொன்ரும்.

இப்படிக் கண்ட உவமையுள் யான் முற் கூறியபடி யாதொரு குற்றமும் இன்றி ஒழிய இடம் ஏற்படுவதோடு, காவிய முறைக்கேற்பத் தான் எடுத்து நாட்டிய தலைவனுக்கு ஏற்றமிட்ட நிலையும் நன்று விறிவிளங்குதல் கண்கூடு.

கம்பர் காவியத்தில் 'ஊழின் வலி'

திரு. பி. சி. சீதாபதி

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்''. (திரு. 380)

என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். அந்த தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே, தான் இராமாயண காவியம் பாடுவதாக அவையடக்கத்தில் எடுத்துரைத்தார் கவிச் சக்கரவர்த்தி, கம்பர்.

ஊழின் உறுதிப் பயனை வலியுறுத்துகின்றார், வள்ளுவப் பெருந்தகை. ஆயின், கம்பரோ ஊழி முதல்வனின் உறுதியையே எடுத்து விளக்குகின்றார்.

அரக்கர் கொடுமையினின்றும் தங்களைக் காக்க வேண்டும் என்று தம்மை நாடி வந்த தேவாதி தேவர்களிடம்,

''அலை கடல் நடுவண், ஓர் அனந்தன்மீமிசை,
மலை என விழி துயில்வளரும் மாமுகில்''
(33/6)

ஆகிய ஊழி முதல்வன் என்ன உரைத்தான்?

''கொலை தொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பென'' என்றான். இவ்வாறு அவன் கூறிய சொல்லைக் கவிச் சக்கரவர்த்தி

''வாய்மை'' எனக் குறிப்பிடுகின்றார்! ஏன்? ஆதி முதல்வன் கூற்றில் வாய்மை யின்மையும் புகுந்துவிடுமோ!

விதிக்கெல்லாம் விதியாய் இருக்கும் அந்த
மாலவனே, இளையவனிடம்,
''விதியின் பிழை; நீ இதற்கு என்னை
வெகுண்டது?'' (288 - 129)

என்று பேசி நின்றான்!

இதனால், செந்தாப் போதாரின் விதி பற்றிய வாய்மைச் சொல்லை வலியுறுத்துகின்றார் கம்பர், இராமன் வாயாலேயே! என்றாலும், இராமனாய் அவதரித்துள்ள திருமாலின் வாய்மைச் சொல்லை நிறைவேற்றவே விதி தன் வேலையைச் செய்தது என்பதையும் குறிப்பிடாமல் குறிப்பிடுகின்றார், அவர். விதி, இராமனுக்கு மகுடமின்றிச்செய்யாதிருந்தால் திருமால் தேவர்க்கு அளித்த வாக்குறுதியின் வண்ணம் அரக்கரை அழிக்கும் செயலே நடவாது போயிருக்கும் அல்லவா? அது நடந்தே தீரும் என்பதை வலியுறுத்தவே துவக்கத்தில் 'வாய்மை' எனக் கம்பர் குறிப்பிட்டுள்ளார் என்பதை உணர்கின்றோம்.

இராமனின் வாயிலாகப் பெருமை பெற்றுவிட்ட 'விதி' அந்த இராமனின் வளர்ப்புத் தாய் கைகேயியின் வழியில் விளையாடியதையும் காண்கின்றோம்.

''நல்லவை எல்லா-அம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு'' (திரு. 375)

என்ற பொய்யா மொழிக்கேற்ப விதி வினை செய்ததனைத் தெளிகின்றோம்.

முதலில் கூனியினிடம்,

'விராவ அரும் புவிக்கு எலாம் வேதமே அன
இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ?''
[250 - 55]

என்று கைகேயி கேட்டாள். அந்த அளவிற்கு மாற்றாள் மகனேயானாலும் இராமன் நல்லவனாய்த் தோன்றினான், கைகேயிக்கு. இராமனுக்குமறுநாள் மகுடம் சூட்டப் பெறப் போகின்றது என்றதனைக் கூனி சொல்ல அது அவட்கு நல்ல செய்தியாகப்பட்டது; கூனிக்கு,

''. . . . . . சுடர்க்கு எலாம்
நாயகம் அனையது ஓர் மாலை நல்கினாள்.
(251-60)

ஆனால், 'தீவினை' வடிவில் வந்த கூனியினால் கைகேயியின் நெஞ்சில் நஞ்சேறியது. மேற்குறிப்பிட்ட நல்லவனான இராமனும், நல்ல செய்கையாகிய இராமனின் மகுடாபிஷேகமும் அவளுக்குத் தீயவையாய்ப்போயின. அதன் விளைவாக, தான் வளர்த்த மகனை - தான் பயந்ததாகக் கூறிக்கொண்ட இராமனை - அவனுடைய பெயரைக் கூடக்கூறாமல், 'சீதைகேள்வன்' என்று கூறித் தயரதனிடம் வரம்வேண்டினாள்; அவனைக்

காட்டிற்கு அனுப்பக் கோரினுள். அது மட்டுமா! அவன் தலையில் ஏறவேண்டிய முடியைப் பரதனுக்கு ஏற்றுமாறும் வேண்டினுள்.

ஏன் இந்த மாற்றங்கள்?

கைகேயி அளித்த மாலையை உதறித் தள்ளினுள், கூனி; கைகேயியை நிந்தித்தாள்; இராமனும் சீதையும் அரசு வீற்றிருக்கத் தான் தாதியாய்ப் பணி செய்ய முடியாது என்ருள்; பரதன் நாட்டாட்சியைப் பெருமைக்காகப் பொருமினுள்; அரசுரிமை இல்லாத நிலையில் பரதனைக் காட்டிற்கு அனுப்பித் தவம் மேற்கொளச் செய்தல் நன்று என ஏளனம் செய்தாள்; ஏன் அவன் இறத்தலே நன்று என்ருள்; தாய் தந்தை இருவருமே பரதனுக்குக் கொடுமைக்காரராக இருக்கின்ருர்கள் என ஓலமிட்டாள்.

''கல்வியும், இளமையும், கணக்கு இல் ஆற்றலும்,
வில்வினை உரிமையும், அழகும், வீரமும்,
எல்லை இல் குணங்களும், பரதற்கு எய்திய;
புல்லிடை உகுத்த அமுது ஏயும்போல்'' என்ருள்.
(252-70)

இவ்வளவும் கைகேயிக்குத் தீயவையாய்த் தோன்றின.

''வாய் கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்,
காய் கனல்தலை நெய் சொரிந்தென, கதம் கனற்ற,
கேகயர்க்கு இறை திருமகள், கிளர் இளவரிகள்
தோய், கயல் கண்கள் சிவப்புற நோக்கினள்''
[252-71]

என்று நல்லெண்ண நங்கையைக் கம்பர் படம் பிடித்துக் காட்டுவார். அவள், மந்தரையைத் 'தீயோய்!' (252 / 72) என்று விளித்து,

''எனக்கு நல்லையும் அல்லை நீ; என் மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை; அத் தருமமே நோக்கின்,
உனக்கு நல்லையும் அல்லை; வந்து ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை - மதியிலா மனத்தோய்!
[252-73]

என்றெல்லாம் விதியின் விளைவு என ஏசினுள்.

ஆனல், சற்று நேரத்தில் தீயளான கூனியும், பரதனுக்கு முடி சூட்டுதல் என்ற முறையற்ற செய்கையும் கைகேயிக்கு நல்லவை ஆகிவிட்டனவே!

''. . . . கூனியை உவந்தனள், உயிர் உறத் தழுவி
நிரைத்த மாமணி ஆரமும் நிதியமும் நீட்டி,
'இரைத்த வேலைசூழ் உலகம் என் ஒரு மகற்கு ஈந்தாய்;
தரைக்கு நாயகன் தாய் இனி நீ' எனத் தணியா.''
[255-91]

நின்றதாகப் படம் பிடிக்கின்ருரே, கம்பர்! ஏன்? மந்தரை மீண்டும் தன் கருத்தினை வலியுறுத்தினுள்.

''புரியும் தன் மகன் அரசு எனின், பூதலம் எல்லாம்
விரியும் சிந்தனைக் கோசலைக்கு உடைமைஆம்; என்ருல்
பரியும் நின் குலப் புதல்வற்கும், நினக்கும் இப்பார் மேல்
உரியது என், அவள் உதவிய ஒரு பொருள் அல்லால்!'
[253-79]

என்றெல்லாம் வேற்றுமை காட்டிப் பேசினுள். இவ்வாறு,

''தீய மந்தரை இவ் வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது'' [254-85]

கைகேயிக்கும் செல்வத்தின் தேவை தோன்றி விட்டது. அதனைப் பெற்றுவிட மனம் கொண்டாள்.

அந்த மனே நிலை தோன்றியதும், அவளிடத்துத் திருவள்ளுவரின் பொய்யா மொழியாம் விதியைம் பார்க்கின்ருேம். இராமனுகிய நல்லவனும், அவனுக்கு நிகழவிருந்த முடிசூட்டுவிழாவும் தீயவை ஆகின; கூனியாகிய தீயளும், அவளுரைகளாகிய தீய சொற்களும் நல்லவை ஆகின! 'என்னே, விதியின் வலிமை! என்று அயிர்க்கின்ருேம.

விதியின் வலியை மனிதர்கள் மட்டுமா உணர்ந்தனர்? தங்கள் வலிமையில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த அரக்கரும் உணர்ந்திருந்தனர்.

உறங்கியிருந்த கும்பகர்ணனை எழுப்பிப் போர்க்கோலம் செய்வித்தனர். சீதையை விட்டிடாமல் இன்னமும் போர் நடந்து கொண்டிருக்கின்றது என அறிந்தான். தமையன் இராவணனுக்கு தர்மத்தை எடுத்துரைத்தான்; சீதையை விட்டிடும்படி அறிவுறுத்தினுன். அவனே இவனைச் சினந்தான்; அவனுடைய அறவுரை தேவையில்லை - போர்க்குச் செல்லவே அவனை அழைத்ததாக வெகுண்டான்.

தர்மத்திற்கு மாருக, செஞ்சோற்றுக் கடன் தீர்க்கக் கும்பகர்ணன் போர்க்குச் செல்ல முடிவு செய்தான். இந்தக் கட்டாயச் சூழ்நிலை தோன்றியதற்குக் காரணத்தை எண்ணிஞன். இராவணணிடம்,

''வென்று இவன் வருவென் என்று உரைக்கிலேன்; விதி நின்றது; பிடர் பிடித்து உந்த நின்றது;]1155-95

என்று விதியினுல் தான் தள்ளப்பட்டுச் செல்வதாகவே கூறுகின்ருன்!

இந்தக் காட்சியால் கவிச் சக்கரவர்த்தி,

''நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்;; திரு. 373]

என்ற மறைமொழியின் தத்துவத்தை மறைமுகமாக நமக்குப் புகட்டுகின்ருர் அன்ரே?

கும்பகர்ணனுவது கற்றறிந்தவன்; மாரீசனே ஒரு சாதாரண அரக்கன். ஈன்ற தாயின் மடமையும் முரட்டுத் தனமும்தான் அவன் பின்பற்றியவை. அத்தகையவனே இராவணனுக்கு ஆரம்பத்தில் அறிவுரை பகன்ருன்; இராவணனின் எண்ணம் அவனுடைய விதியின் சதியென்ருன்.

''மன்ன! நீஉன் வாழ்வை முடித்தாய்; மதி அற்ருய்;
உன்ஞல் அன்று ஈது; ஊழ்வினை என்றே
உணர்கின்றேன்'' [512-8]

என்ருன். அவன் 'விதியை உணர்ந்தேன்' என்றே உறுதியாகக் கூறுகின்ருன்!

அவனுடைய பேச்சுக்கு அசையாத இராவணனிடம் அவனுடைய செல்வங்களை, வரங்களைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறுகின்ருன், மாரீசன்.

''அற்ற கரத்தோடு; உன் தலை நீயே அனல் முன்னில்
பற்றினை உய்த்தாய்; பற்பல காலம் பசி கூர
உற்று, உயிர் உள்ளே தேய, உலந்தாய்;
பினை அன்ரே
பெற்றனை செல்வம்? பின் அது இகழ்ந்தால்
பெறல் ஆமோ?''
(512-9)

''திறத் திறனுலே செய் தவம் முற்றித் திரு உற்ருய்,
மறத் திறனுலா? சொல்லுதி - சொல் ஆய்
மறைவல்லோய்!
அறத் திறனுலே எய்தினை அன்ரே? அது, நீயும்
புறத் திறனாலே பின்னும் இழக்கப் புகுவாயோ?''
512-10)

என்றெல்லாம் மாரீசன் வாயிலாகக் கம்பர் பாடுகின்ருர்.

இத்துணையும் அவர் மனத்தில் அப்போழ்து

''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'' (திரு.377)

என்ற பொய்யா மொழியாரின் உரை இழையோடிக் கொண்டிருந்ததனுல்தான் எனத் தெளிகின்றோம்.

இவ்வாறாகப் பற்பல காட்சிகளில் கவிச் சக்கரவர்த்தி ஊழின் வலியை உணர்த்திச் செல்கின்றார் எனக் கண்டு வியக்கின்றோம்!

(குறிப்பு ; கம்பராமாயணப் பாடல்களின் எண்ணிக்கை, சென்னை கம்பன் கழக பதிப்பில் காணப்பெறும் பக்கமும் பாடல் எண்ணும் ஆகும்)

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை திருவண்ணாமலை ஆதீனம்

44-வது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி

ஆறுமுக தேசிக பரமாசாரிய சுவாமிகள் காரைக்குடிக் கம்பன் திருநாளில்

21—3—51

அருளிய

ஆசியுரை

வைய மீன்றதொல் மக்க ளுளத்தினைக்
கையி னுலுரை கால மிரிந்திடப்
பைய நாவை யசைத்த பசுந்தமிழ்
அடியவ ரருள்தே வார மணிந்து
மனமுருக் கும்மணி வாசகந் தோய்ந்து
சிந்தா மணியுஞ் சிலம்புஞ் சூடி
மணிமே கலையும் வளையா பதியும்
குண்டல கேசியுங் குலவித் திருக்குறட்
செங்கோல் செலுத்துஞ் செந்தமிழ்ச் செல்விக்குக்
கவிக்குல பாற்கரன் கம்பநா டன்தான்
பாவின் சுவைக்கடல் பருகிப் பொழிந்த
இராம காதையால் இதயங் கவரு
மணிமுடி சூட்டினன்; ''மாநில மக்கள்
அறநெறி திறம்பா அருள்வாழ்வு வாழ்க;
ஒழுக்கம் உயிரினும் ஓம்புக'' எனுமிவை
எழில்மணி நடுப்புகும் இழையென அமைந்த
காப்பிய மியற்றிய கம்பன் தமிழைப்
பல்கால் பயின்ற பருணிதர் பேருரை
தமிழகஞ் சிறந்து தழைத்திடச் செய்க!
கம்பன் தமிழைக் காதலிற் பரப்பிக்
களிமகிழ் வூட்டுங் கணேச அன்பன்
பொன்னும் பொருளும் போகமும் பொலிந்து
நல்லறச் செயல்களை நாளும் புரிக!
அண்ணா மலையமர் அண்ணல் திருவருள்
தெய்வ சிகாமணித் தேசிகர் பேரருள்
நானில மக்கட்கு நன்னர்வாய்த் திடுக!
கம்ப னளித்த காவியம் பரவுக!
தெய்வச் செந்தமிழ் செழித்தோங் குகவே!

செய்தற்கு அடுப்பதே ஆகும்

திரு. வரதராஜுலு நாயுடு

கும்பகருணன் இந்திரசித்தன் ஆகிய பெரும் படைத் தலைவர் யாரும் போர்க்களத்தினின்று பெயர்ந்திலர். அறத்தை உண்டு, அருங் கருணையைப் பருகி, வேறு அமைந்த மறத்தைப் பூண்டு, வெம் பாவத்தை மணம் புணர் மனார், கலியினும் கொடியர்-மூல பலம் ஆயிரம் வெள்ளத்தோரும் அடுகளத்து அவிந்து வீழ்ந்தார்.

முதற் போரில் ஆள அமைந்த யாவும் மாருதம் அறைந்த பூளை ஆயின கண்ட இராவணன் இரண்டாம் முறை போருக்கு எழுந்தான். தேவரைத் தொலைத்த வில்லும் வெங்கணைப் புட்டிலும், கொற்றமும் விளங்க, கதிர் மண்டிலத்தோடு மாறுபட்டு இமைக்கும் (ஒளிவீசும்) ஆயிரம் சில்லி (சக்கரம்) கொண்ட தேர்மிசை அவன் சென்றனன்.

மாருதி தோள் எனும் தேர்மிசை இராவணனுக்கு எதிர்புகுந்து இலக்குவன் போரை ஏற்றான். நெய்வோர் ஆடு குழலும் நூலும்போல் அப்படையினூடு அனுமன் அக்குமரனைத் தாங்கிச் சாரி திரிந்தான். இராவணன் ஏயின படைக்கலம் யாவும் பயனற்றுப் போயின: எவ்வாறு? சிறு தொழில் தீயோன் வைத வசவு மா தவம் செய்த ஒருவனைத் தொடாதது போல இராவணன் விட்ட படைக்கலங்கள் இலக்குவனைத் தீண்டாது ஒழிந்தன. ஒவ்வொரு படைக்கும் மாற்று ஈதென இலக்குவனுக்கு உபாயங்கள் கூறிவந்தான் வீடணன். இராவணன் உருமி தம்பியின் உயிரை வாங்க உறுதி பூண்டான்.

இராவணன் மண்டோதரியை மணந்த நாள். மாமன் மயன் மகளோடும் கொடுத்தது; அபன் படைத்தது; ஆழியும் குலிசமும், (சக்கரமும் வச்சிரமும்) அனையது, ஒரு வேல். விட்டபோது ஒருவனை வீட்டியே மீளும்; ஒருவன்மேல் பட்ட போது, அவன் நான்முகன் ஆயினும் படுக்கும். அவ்வேலை வலம் கொடு வாங்கி, வணங்கி, தம்பிமேல் விசைத்து எறிந்தான்.

படைக்கலங்கள் இரு வகைப்படும். ஒன்று அஸ்திரம்-ஓரிடத்தில் நிலைகொள்ளாதது; அம்பு போல்வன. மற்றையது சஸ்திரம்-நிலையாகக் கையில் இருப்பது; வாள், வேல், கதை போல்வன. உண்மை வீரர் சஸ்திரங்களையும் அஸ்திரம் போலவே மறுமுறை தொடுக்கமாட்டார்.

பாரதப்போருக்கு முன் குந்தி கர்ணனிடம் ஒரு வரம் வேண்டுகிறாள்; 'உன்னிடம் உள்ள பாம்புப் படையை விட்டும் அருச்சுனன் பிழைத்தால் அப்படையை மறுமுறை விடாதே' என்பது அவ்வரம். வரம் கேட்ட குந்திக்குக் கர்ணன் கூறுவான்: 'தெறு கணை ஒன்று தொடுக்கவும், முனைந்து செருச் செய்வோன் சென்னியோடு இருந்தால், மறுகணை தொடுப்பது ஆண்மையோ? வலியோ? மானமோ? மன்னவர்க்கு அறமோ? உறுகணை ஒன்றே பார்த்தன் மேல் தொடுப்பன்' வரம் கேட்பதற்கே இடமில்லை. போரில் அப் பாம்பு இலக்குத் தவறி அருச்சுனன் மகுடத்தை மட்டும் இடறிக் கர்ணனிடம் மீண்டுவந்து தன்னை ஏவுமாறு அலற, அங்கர் குலாதிபன் 'மறுகணை ஒன்று தொடேன்'' எனப் புகன்றான். நாகம் நொந்து உயிர் துறந்தது.

இவ் வீரத்தையே இராவணனிடம் முன்பும் கண்டோம். ஒளிகாலும் சந்த்ரஹாஸம் என்னும் குறி பிழையா நெடுவாளை, சங்கரன் கொடுத்த வாளை, உறை தீர்த்து, 'இவன் இன் உயிர் உண்பன்' என்னா இராவணன் சடாயுமேல் எறிந்தான. வாள் சஸ்திரம்; கையில் இருப்பது; வெட்ட உதவுவது. வெட்டியபின் துடைத்து உறையில் போட்டுக் கொள்ள உரியது. ஆனால் அதை மறுகாலும் ஏவுதல் ஆண்மை அன்று என இராவணன் 'எறிந்தான்'; அதை இழந்தான்.

அவ்வாறே இவ்வேலால் தம்பியைக் குத்தி திரும்பப் பெறுமல் அவ்வீரன் 'வல் விசைத்து எறிந்தான்.'

வீடணன் அவ்வேலின் பெருமையை அறிவான். 'ஐயா, ஈது என் உயிர் அழிக்கும். பிறிது செய்யல் இல்லை' என இலக்குவற்கு உரைத்தான். அவ் அலறல் வீரனுக்கு இழுக்கு; வீரன் உரையாமலே செத்திருப்பான். இவ் உரை கேட்டும் இலக்குவன் வீடணனைச் சாக விடுவானு? வீடணன் தன் உயிரைக் குறிப்பால் இரந்தான்;. அவன் இரந்தது இழிவு; ஆனுல் ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்றே? இலக்குவன் செயத்தக்கது ஒன்றே; 'ஏற்பேன், என் மார்பில்' என்று எதிர்ந்து இடையில் புதந்த அங்கதனையும் அநுமனையும் விலக்கி, மின்னும் வேலினைத் தன் மார்பிடை ஏற்றனன். வேல் மார்பை உருவி முதுகிடைப் போயிற்று. புறநானூற்று வீரன்போல மறப் புகழ் நிறைந்த மைந்தினேன் (வலியன்) மழையைத் தடுக்கும் மடல் குடை போல வேலை மறைத்தான்.

வீடணப் பசுவைக் கொன்று இனிப் பயன் இல்லை' என இராவணன் இலங்கை ஊர் புக்கான்.

சாம்பவன் உரைகொண்டு அனுமன் முன் கொணர்ந்து திரும்பச் சென்று வைத்த மருத்து மலையை மறுபடியும் கொணர்ந்து இலக்குவனை உயிர் எழுப்பினுன். யாவரும் இராமன்பால் சென்றனர்.

உற்றது முழுதும் கேட்ட இராமன் முதலில் அனுமனைப் பாராட்டினுன. முன்பே அசோக வனததில் பிராட்டி அனுமனை 'யாண்டெலாம் இன்றென இருத்தி' என மங்களா சாஸனம் செய்துள்ளாள். மருத்து மலை கொணர்ந்தபோது 'ஒன்றும் இன்னல்நோய் உறுகிலாது, நீ என்றும் வாழ்தியால், இனிது' எனப் பெருமாள் மங்களா சாஸனம் செய்துள்ளார். இப்போது மீண்டும் 'இடையூறு செல்லா ஆயுளை ஆதி' என வாழ்த்தினான்.

உயிர் புறத்து ஒழிய நின்ற உடல் அன்ன தம்பியைத் - இராமன் உயிர், இலக்குவன் உடல்-தழுவி இரண்டு வாக்கியங்கள் கூறுவான்.

அ) இரவி தன் குலத்துக்கு ஏற்ற வள வினம் (கொடை வளத்தைச் செல்வமாக உடையோம்); சரண் அடைந்தோர்க்கு ஆகி, உயிர் கொடுத்த வண்ணம் (வள்ளல் தன்மை) செய்தற்கு அடுப்பதே ஆகும்.

ஆ) புறவு ஒன்றின் பொருட்டுத் தன் யாக்கையை அரிந்து பருந்துக்குக் கொடுத்த நம் முன்னேன் சிபியும் உன்னை நிகர்க்கிலன் தமர்க்கு இடர் காண்கில் பேர் அருளாளர் கறவையும் கன்றும் ஒப்பார்.

முதல் கூற்று: நீ செய்தது உன் குலப்பண்புக்கு அடுப்பது: புதிதாக, சிறப்பாக, எதுவும் நீ செய்யவில்லை.

இரண்டாம் கூற்று: கன்றைக் காக்க கறவைமாடு இயற்கையாகவே தான் அத் துன்பத்தை ஏற்றுக் கொள்ளுவதுபோல தம்மை அண்டியவருக்குத் துன்பம் நேரிட்டால் பேர் அருளாளன் ஏற்பான்.

இவைதாம் இலக்குவன் வீரத்துக்கும் உயிர் துறக்க முன்வந்ததற்கும் கிடைத்த பாரட்டு. குலதர்மத்தைக் காப்பதும், அருள் கொண்டிருப்பதும் இருக்க வேண்டுவன. தன் கடமையைச் செய்ததற்கு, பிறர் எதிர்பார்க்கும் செயலையே புரிந்ததற்கு, பாராட்டு ஏன்?

வீடணனுடைய கோழைத்தனத்தைப் பற்றிப் பேச என்ன உளது?

இது கம்ப நாடகம். வால்மீகத்தில் இராவணன் எட்டு மணிகள் கொண்ட வீண்போகாத வேலை (சக்தியை) உத்தேசித்து எறிந்தான்.

''சக்திம் அஷ்ட கண்டாம், மஹாஸ்வனும் மயனே மாயா விஹிதாம், அமோகாம், சத்ரு

காதினீம், லக்ஷ்மணஞய ஸ்முத்திச்ய, ராவண: சிக்ஷேப'' (100:30-1)

இலக்குவன் வீழ்ந்தபிறகு வானரர் அவனை இராமனிடம் எடுத்துச் சென்றனர். இராமன் தான் பட்ட உஷ்டம் எல்லாம் வீணுயிற்றே; செய்தவினை எல்லாப் பயன்தராதொழிந்தனவே எனக் கழிவிரக்கம் கொண்டான்; அனுமன் ஒஷதி பார்வத்தைக் கொண்டுவர. ஸீஷேணன் மருந்தால் இலக்குவனை எழுப்பினன்.

இலக்குவன் உயிர் பிழைத்ததால் இராமன் மகிழ்ச்சியுற்றான். இலக்குவனைப் பாராட்டும் அமைப்பு வால்மீகத்தில் இலது.

குலமுறை காத்ததற்காகக் தம்பியைப் பாராட்டியவன் பரத்துவாசன்; அத்தம்பி பரதன் சித்ரகூடத்திற்குச் செல்லும் பரதனை; 'நீ ரகு குலத்திற்கு உசிதமான செயல் புரிகின்ருய்-மூத்தானைத் தொடர்தல்' (த்வய்யேதத்; புருஷவ் யாக்ர, யுக்தம் ராகவ வம்சஜே. குரு வ்ருத்சி ...அனுயாயிதா அயோத்யா காண்டம் 90:20)

கடோத்கசனிடமிருந்து விடுபட்ட அந்தணன் வாழ்த்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. நீ ஒரு செயலால் இரண்டு பயன் பெற்ருய்; என் குலத்தைக் காத்தது அன்றி உன் குலத்தின் பெருமையையும் மேம்படுத்தினுய்.

'ரக்ஷிதம் அஹ்மத் குலம்; ஸ்வகுலம் உத்த்ருதம்' என்பது மத்யம வ்யாயோகத்தில் பாஸன் வாக்கு.

பின்னுல் வந்த துளஸிதாஸர் வீடாணனைக் காத்திருந்த இராமனே அவ்வேலைத் தன் மார்பில் ஏற்ருன் என்பர். (லங்காகண்டம் சௌபாயீ 94).

இலக்குவனே, இராமனே செய்தது 'செய்தற்கு அடுப்பதே ஆகும்'; இராவணன் வேலை எறிந்ததும் வீரன் 'செய்தற்கு அடுப்பதே ஆகும்.

பாசனும் - கம்பனும்

பண்டிதமணி மு. கதிரேசனர்

மாற்றை உரைத்துப் பார்த்தால் நயம் தெரியும். இரண்டிருக்கும் போது கண்டிப்பாக உரைத்துப் பார்த்தால்தான் நயத்தோடு சுவையையும் அறியலாம். ஒரு கவியின் மகிமை மற்ருெரு கவியை அனுபவிக்கும் போதுதான் தெரியும். கிழக்கு எது என்றல் எப்படித் தெரியும்? எல்லே ஒன்றை வரையறுத்துக் கொண்டால் தானே பிற வற்றைச் சொல்லமுடியும். ஒரு கவிக்கு, இனிமை எளிமை, ஆழமுடைமை இவை லட்சணங்கள். மனதைக்கவரக் கூடியகவிகளுக்கு இவை இருக்க வேண்டும். நவிறெறும் நவிறெறும் நறுஞ்சுவை பயப்பதாயிருக்க வேண்டும். தாழ்ந்த கவி உள்ளீடில்லாதது. வெங்காயம் போன்றது. உரிக்க உரிக்க என்ன வரும்? வெறும் தோல்தான்; அது மட்டுமன்று. துர்நாற்றமும் கூடத் தோன்றி விடும்! தாழ்ந்த கவிகளைத் தொடவே கூடாது.

''ஹா லக்ஷ்மணு!'' எனற சப்தம் கேட்டது சீதை லக்ஷ்மணனை ஏவுகின்ருள். ல மணன் சமாதானம் சொல்கின்ருன். அப்பொழுது சீதை ''போனவன் பெண்டாட்டி இருந்தவனுக் கென்று நினைக்கின்ருயோ'' என்கிருள். இது வால்மீகி ராமாயணம். ஆனல் கம்பர் இப்படிச் சொல்ல வில்லை. தமிழ் நாட்டுப்பெண்மணியின் வாயிலிருந்து இந்த வார்த்தை வரக் கூடாதென்று கருதினார்போலும்! ''அவள் கோபப்பட்டாள்'' என்று மட்டும் தான் கூறுகிருர்.

இன்னெரு சம்பவம்: சீதையை இராவணன் மடிமீது தூக்கிச் சென்றதாக வால்மீகி சொல்கிருர். கம்பர் சீதையிருந்த குடிசையை மண்ணேடு பெயர்த்துச் சென்றதாகக் குறிப்பிடுகிருர். பெண்மையைப்பற்றியும், கற்பைப்பற்றியும் அவர் எவ்வளவு உயர்ந்த மனப்பண்பு கொண்டிருந்தார் என்று தெரிகிறதல்லவா?

பரதன் தன் தமையனும் தம்பியும் அண்ணியாரும் இருந்த இடத்தைப் பார்க்க விரும்புகின்ருன்; குகனைக் கேட்கின்றான்; குகன் சொல்லுகின்ருன்:

அல்லையாண் டமைந்த மேனி
　　அழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
　　வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய்
　　கண்கணீர் சொரியக் கங்கு
லெல்லைகாண் பளவு நின்ரு
　　னிமைப்பில நயன மென்ருன்.

அழகன் என்று கூறினன்; அதற்கடுத்தாற் போல் 'அவள்' என்று சொல்கிருன். ;அழகனுக் கேற்ற அழகி' என்று கூருமற் கூறுகிருனல்லவா? கவியில் இலக்குமணன் கண்களில் நீர் சொரிய, சிறிதும் துயில் கொள்ளாதவனுய் நின்ருன் என்று சொல்லப்படுகிறது. அழுது கொண்டே தூங்க முடியாதல்லவா? மேலே அழுது கொண்டிருந்தான் என்று சொல்லி விட்டுக் கீழே ''இமைப்பிலன் நயனம்'' என்று கூறுவது தேவையில்லை யென்று தோன்றுகிறதல்லவா? இந்த இடத்தில் வால்மீகி குறிப்பிடும் சம்பவமொன்றை நினைவுக்குக் கொண்டு வருவோம்: இளையவனிடம் குகனுக்கு ஐயப்பாடு. ராமனும் சீதையும் தூங்கும்போது ஒரு வேளை இந்தக் குகன் கொன்றுவிடுவானே என்று சந்தேகப்பட்டான். இலக்குவன் அவர்களைச் சுற்றிச் சுற்றிச் வந்தான். இலக்குவன் மீது சந்தேகம் கொண்ட குகனும் சுற்றிச் சுற்றி வந்தான். இந்த அழகிய தேவர்களை குகன் என்ன செய்து விடுவானே என்று அவனுடைய வேடர்கள் ஐயப்பட்டு அவ்விருவரையும் அறியாமல் காவல் காத்தனர்! ஒரிரவு கழிந்ததும் குகனும் அவனைச் சேர்ந்த வேடர்களும் துணிந்தனர். கம்பர் இந்தச் சம்பவத்தை மனத்திலிருத்தியே இக் கவியைச் சொன்னுர் என்றுகூட

நினைக்கலாம். 'இமைப்பிலன் நயனம் என்ருன்' இது தன்னைப்பற்றியே—அதாவது 'இலக்குவன் அழுதுகொண்டேயிருந்தான்; நான் தூங்காமல் இருந்தேன்' என்று குகன் சொன்னதாகக் கொள்ளலாமல்லவா?

காளிதாசரால் பாராட்டப்பட்டவன் பாஸன். அவர் எழுதிய பிரதிமா நாடகம் குறிப்பிடத் தகுந்தது. அவர் எழுதியவற்றிற்குப் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதே ஒரு ரசமானது. மாமன் வீட்டுக்குப் போயிருந்தான் பரதன். சூரிய வம்சத்து அரசர்களின் சித்திரங்கள் வைக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்துச் சென்ருர்கள். அங்கே தயரதன் படமுமிருந்தது. ''இறந்து போனவர்க்குத்தானே படம் வைப்பது என் தந்தையின் படமும் வைக்கப்பட்டிருக்கிறதே ஏன்?'' என்று கேட்டான் பரதன். ''அவருடைய புகழுடம்புதானே இங்கேயிருக்கிறது'' என்று பதில் வந்தது, இக் கதைக்குத்தான் 'பிரதிமா' என்று பெயர் வைத்தான் பாஸன்.

கதாபாத்திரங்களைப்பற்றி வர்ணிக்கும் பொழுது குண குணி என்று சொல்லப்படுகிறது. வர்ணிப்பு நிகர் சொல்ல முடியாதபோது குணத்தைச் சொல்லுகிருர்கள். ஞானசம்பந்தரைப்பற்றி சொல்லும்போது ''ஞானத்திருவுரு'' என்று மட்டும் சொல்லுகிருர். பாசன் சீதையைப் பற்றிச் சொல்லும் போது சத்தியம். சீலம் என்று கூறுகிருன். குணத்தைச் சொல்லி பாத்திரங்களை நிர்மாணிப்பது காவியத்தின் ரசம். கம்பர் அனுமன் வாயிலாக சீதையைப்பற்றிக் கூறுவதைக் கவனியுங்கள்:

'கண்டேன் கற்பினுக் கணியை' என்கிருன் அனுமன்.

லக்ஷ்மணனுடைய கோபத்தைத் தடுக்க எண்ணிய ராமர் கூறுவதாக பாஸன் காட்டுகிருர்: 'உன்னுடைய கோபம் எங்கே போய் முடியும்? சத்யத்தைக்கைக்கொண்ட தந்தையைத் தொலைப்பதற்காகவா நீ வில்லை வளைக்கிருய்? அல்லது தாயைக் கொல்லவா? குற்றத்திற்குப் புறம்பானவனுயிருக்கிருனே பரதன் அவனைக் கொல்லவா? எந்த பாவத்தை நிறைவேற்றினுல் உன் கோபம் தணியும்?

அப்படியே கம்பர் சொல்வதைக் கவனியுங்கள்:

ஆன்ருன் பகர்வான் பினு
மையவிவ் வைய மையற்
ருேன்ரு நெறிவாழ் துணைத்தம்
பியைப்போர் தொலைத்தோ
சான்ருேர் புகழுந் தவத்தாதையை
வாதை கொண்டோ
ஈன்ருளை வென்ருே இனியிக்கதந்
தீர்வ தென்ருன்.

மகாகவிகளுக்குள்ளே எவ்வளவு ஒத்தபண்பு இருக்கிறதென்பதைக் கவனிக்க வேண்டும்

குமார சம்பவம்: மன்மதன் இறந்தான். ரதி அழுகிருள். 'அந்தியச் சடங்கையும் காணக கொடுத்து வைக்காத துர்ப்பாக்கியவதியானேனே' என்று அலறுகிறாள். மன்மதனுடைய சாம்பலும் ரதி விட்ட பெருமூச்சினுலே பறந்து போயிற்றாம். ''உன்மனத்தில் நான்இருப்பதாகச் சொன்னுயே, இப்படியென்றால் நானுமன்றோ இறந்திருக்க வேண்டும்'' என்று ரதி சொல்வதாகக் காளிதாஸர் சொல்கிறார்.

ராமாயணத்தில் வாலி இறந்ததும் அவனுடைய மனைவி அழுகிறாள். அதனைக் கம்பர் சொல்கிறார்.

செருவார் தோளநின் சிந்தையுளேனெனின்
ஒருவார் வெஞ்சர மெனையும் வௌவுமால்
ஒருவே னுள்ளுளை யாகி னுய்தியால்
இருவே முள்ளிருவே மிருந்திலேம்.

''உன் மனத்தில் நான் இருப்பதானுல் நானுமன்றோ இறந்திருக்க வேண்டும். என் மனத்தில் நீ யிருப்பதானுல் நான் உயிருடன் இருக்கும் பொழுது நீயுமன்றோ உயிருடன் இருக்க வேண்டும்''. கம்பர் எவ்வளவு மேலே போயிருக்கிறார் என்பதைப் பார்த்தீர்களா?

இயற்கையை வர்ணிப்பதில் கம்பன் பெரும் புலவன்; உலகியலைக்காட்டுவதில் அதிவல்லவன் பெண்மக்கள் பால் நல்ல கருத்துக்கொண்டவன்.

கூனிக்கும் கேகையன் மகளுக்கும் நடக்கும் தர்க்கத்தில் கூட அவர் பெண்களை எவ்வளவு உயர்த்துகிறார் என்பதைப் பார்க்கவேண்டும்.

பிற பாஷைகளைப் படிப்பதில் தவறு ஒன்றுமில்லை. மற்ற காவியங்களைப் படித்து நம்முடைய காவியங்களோடு இணைத்து உணரும்போது தான் நமது கவியின் மேன்மை நன்கு தெரியும். ரசத்தை அனுபவிக்க முடியும். கம்பன் வால்மீகியை எவ்வளவுதூரம் படித்துப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறான் என்பதை நாம் உணர வேண்டும். கம்பன் ஆரியபாஷையையும் அறிந்திருந்தான் என்பதில் சந்தேகமே யில்லை.

'கம்பனில் விலங்கு'

திரு. ப. ஜனுர்த்தனம்

உலகத்தில் வாழும் உயிரினங்கள் எண்ணிறந்தன. அவற்றுள் 'மாவும் மாக்களும் ஐயறிவினவே; மக்கள் தாமே ஆறறிவுயிரே. விலங்கினங்களுள் நீர்வாழ்வனவும் நிலத்தில் வாழ்வனவுவும் நிலத்தில் வாழ்வனவு முள்ளன. காது வெளிபடையாகத் தெரியும் விலங்கினங்கள் மட்டுமே குட்டிபோட்டு பாலூட்டுவன. விலங்கினங்களிலும் தாவர முண்பவையும், மாமிசமுண்பவையும் உள்ளன. வீட்டில்] வளர்க்கப்படும் எருமை, பசு ஆடு, குதிரை, ஒட்டகம், முதலியன போக்குவரவிற்கும், வயலில் வேலை செய்யவும் பயன்படுகின்றன. சிங்கம், புலி, கரடி முதலியன காட்டில் வாழ்வன

விலங்குகள் கொடியின் சின்னமாகவும், தெய்வங்களின் வாகனமாகவும் பயன்படுத்தப்பட்டன. பசுவை, முற்காலத்தில் 'கோமாதா' என வழிபட்டனர்.

கம்பர் காவியத்துள் காட்டப்படும் விலங்கினங்கள் இருபத்தேழு. விலங்கினத்திற்காணப்படும் அழகு, இளமை என்னும் பண்புகள் அரிய சிறந்த செவ்வி வாய்ந்தவை. கம்பர் காட்டிய விலங்கினங்களுள் யானை முதல் ஆடு ஈருகச் சிலவற்றின் பண்புகளைப் பார்ப்போம். கம்பர் தம் காவியத்தில்,

'தருகை நீண்ட தயரதன் தான்தரும் இரு கை வேழத்து இராகவன் தன்கதை, என முதற்கண் யானையையே சுட்டுகின்ருர். இவர் காவியத்தில் 784 பாடல்களில், யானை பேசப்படுகின்றன.

கார்முகப் படலத்துள் வில்லெடுக்க எழுந்த இராகவனைக் குறிக்குமிடத்து,

தோகைய ரின்னெனக் கூறிடமேலோர்
ஒகை விளம்பிட உம்பர் வியப்ப
மாக மடங்கலும் மால்விடையும் பொன்
நாகமும் நாகமும் நாண நடந்தான்,

என்று குறிப்பிடுகின்ருர். இதில் இரண்டாவது வரும் 'நாகமும்' என்பது யானையைக் குறிக்கும். இராமனேடு காட்டிற்குச் சென்ற சீதாப் பிராட்டி இராமனின் நடையை வியந்து,

'ஆண்டுவந்து நீருண்டு மீளும் போதக நடப்ப
நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாளாம்
சீதை. மேலும் குகனைக் கூறுமிடத்து,
'வெங்கரியின் ஏறனைய' னென்ருர்.

யானை கரிய நிறமுடையது. எனவே மலை, குன்று, கடல், மேகம் இவற்றுடன் உவமித்துள்ளார். தீயவை யாவினும் கொடிய தீயவளாகிய கைகேயி கூறிய மொழிகேட்ட தயரதன் 'அரா வின் வேகமடங்கிய வேழம் என்ன, வீழ்ந்தானும். கங்கையாற்றினில் யானைகள் நீந்திச் செல்லும் தோற்றத்தைக் கப்பல், கொடியோடும், பாய்மரத்தோடும் கடலில் செல்லும் தோற்றத்தோடு உவமிக்கின்ருர். புராணச் செய்தியாக அமைந்துள்ள திசையானைபற்றிய கருத்துக்கள் இக்காவியத்துள் பெருமளவில் வந்துள்ளன:

யானையைப்பற்றி விரிவாகக் கூறிய கம்பர், பூனையைக் குறித்து நான்கு இடங்களிற் பாடியுள்ளார். அவையடக்கமாகச் சொல்லும்போது, 'பாற்கடல் பூசைமுற்றவும் நக்குபு புக்கன' என்ருர். கௌதமர் வரவுகண்ட இந்திரன் ''ஓர் பூசையாய்ப் போகலுற்ருன்' என்ருர். எத்துணைச் சிறப்பாகப் பூனையை வளர்த்தாலும், பிறர் காணுதவர்று களவில் நக்கிக் குடிப்பதையே அதுவிரும்பும். அதுபோலத் தேவலோக போகங்களை அனுபவித்த இந்திரன் முனிபத்தினியை விரும்பி வந்தசெய்கை, பூனையின் செயலுக்கு மிக்கப்பொருத்தமானது. மேலும் இராமன் காடு சென்ற செய்திகேட்டுப் பூனை அழுததாம். விராதனிடம் அகப்பட்ட பிராட்டியைக் குறிப்பிடுமிடத்து, 'வஞ்சகக் கொடிய பூசை நெடுவாயில் மறுகும் பஞ்சரக்கிளி' எனக் குறிப்பிடுகிருர்.

யானைக்கு அடுத்தபடியாக 377 பாடல்களில் குதிரையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். 'பாய்' என்னும் அடைமொழியே அதிகமாக வருதல் காணலாம். குதிரைக்குரிய சிறப்பு ஒற்றைக் குளம்பன்றோ? இதனைக் கம்பர் 'வளை குளம்பு' எனக் குறிப்பிடுகின்றார். குதிரைகள் வேள்விக்கும் பயன்படுத்தப்பட்டன. சூரியனுக்குப் பச்சைக் குதிரைகள் ஏழு. திருப்பாற் கடலைக் கடைந்த போழ்து எழுந்தபொருட்களுள் ஒன்று குதிரை. 'வடவைத்தீ' என்பது பெண் குதிரையின் வடிவிலுள்ள தீ.

வனத்திலுள்ள விலங்குகளுக்கு அரசனாக விளங்குவது சிங்கம். 197 பாடல்களில் சிங்கத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றார் கம்பர். அரி, அரிமா, சீயம், ஆளி, மடங்கல், பஞ்சானனம் எனப்பல்வேறு பெயர்களால் குதிரையைக் குறிப்பிடுகிறார்.

அனுமன் அரக்கரோடு போர்செய்தபோது காட்டில் வாழும் விலங்கு மாக்கள் 'கோளரி சண்ட என்ன ஈட்டமுற்று எதிர்ந்த எல்லாம இருந்தன என்றும், வாலி, சுக்கிரீவனைத் தாக்கியதைத் தம்பியை அரி தொலைத்ததென்ன, கொல்நகங்களின் கரங்களில் குலைந்து உகமலைந் தான, என்றும் கூறினர். கும்பகர்ணனின் கொடி சிங்கக் கொடி சிங்கம் சுமந்தாற் போன்று அமைந்த ஆசனம் சிங்காசனம்,

எலியும், புலியும் :-

49 பாடல்களில் புலியையும், 4 பாடல்களில் எலியையும் பாடியுள்ளார்.

அரக்கர்களோடு காவியத்தில் உவமிக்கப் படாத விலங்குகள் உண்டோ? என ஐயுற வேண்டியதாயுள்ளது. இராவணன் சீதையை அணுகியதனை, 'காய்சின உழுவைத் தின்னிய வந்த கலையிளம் பிணை' எனக்கூறுகின்றார். மேலும் புலி, வீரத்திற்கும் எடுத்துக் காட்டப் படுகின்றது.

பிறரைச் சரண்டி வாழ்தலிலும், அஞ்சி வாழ்தலிலும் நிகரற்றது எலி. பரதன்படை கண்டு சீறியகுகன் 'எலியெலாம் இப்படை அரவம் யானென, ஒலியுலாம் சேனையை உவந்து கூயினன், வலியுலாம் உலகினில் வாழும் வள்ளுகிர் புலியெலாம் ஒருவழி புகுந்த போலவே, என்றார்.

பசு, காளை, எருமை, ஒட்டகம்:-

49 பாடல்களில் பசுவும், 62 பாடல்களில் காளையும், 18 பாடல்களில் எருமையும் 5 பாடல்களில் ஒட்டகமும் பேசப்படுகின்றன.

தயரதன் தன்மை கண்ட அமைச்சர்கள் 'இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ' என இருந்தனராம். காடேகச் சொன்ன கைகேயியின் முன்னால் நின்ற இராமனை, 'அந்தி வந்தடைந்த தாயைக் கண்ட ஆன் கன்றின் அன்னான்' என்றார். இராமனைக் கண்ட தண்டக வனத்து முனிவர் 'தாய்வர நோக்கிய கன்றின் தன்மையராக' நின்றனராம் 'ஏறுபோல பீடு நடை' என்பது மரபு. வீரர்களைக் காளையோடு உவமித்துள்ளார்.

மருதநிலத்தின் வளமை காட்ட எருமை சுட்டப்படுகின்றது. துந்துபி, எருமை வடிவமுடையவன்.

'தள்ளரும் பரம் தாங்கிய ஒட்டகமெனப்' பெரும்பாரம் தாங்கும் ஒட்டகத்தின் செய்தியினைக் குறிப்பிடுகிறார்.

நாய், நரி, கழுதை :

32 பாடல்களில் நாயையும் 13 பாடல்களில் நரியையும், 5 பாடல்களில் கழுதையையும் கூறியுள்ளார்.

நாயும், நரியும், கழுதையும் இழிவான விலங்கினங்கள். தன் இழிதகைமையைக் காட்ட வந்தகுகன் 'நாய்க்குகன் என்றெனை ஏசாரோ' என்றான். இராவணனை நோக்கி சீதை, 'அவியை நாய்வேட்டதென்ன என்சொன்னாய் அரக்க! என்றாள். இராவணனது ஆசைகேட்ட அங்கதனும், நீஅரசு தர யான் கொள்வது நாய் தரக் கொள்ளும் சீயம் நல்லரசு என்று நக்கான்' என்றார். இதுபோலவே நரியும், கழுதையும் இழிவான இடங்களிலேயே காட்டப்படுகின்றன.

இம்மூன்று விலங்குகளும் பால காண்டத்தில் ஓரிடத்திலேனும் வராதது குறிப்பிடத்தக்கது.

'அசுணமா' என்ற இசைவிரும்பும் விலங்கு சித்திரகூட, ஏமகூட மலைகளைப் பாடுமிடத்துக் காணப்படுகின்றது.

கரடி, கவரிமான் முதலியன கொடுமைக்கும், மானத்திற்கும் உவமையாகக் காட்டப் பட்டன. குரங்கினைப் பற்றிக் கூறுங்கால, அனுமன் இலக்குவனை எடுத்துச் செல்லுங் காட்சியினை, 'மகவுகொண்டு போய் மரம் புகும் மந்தியினை நிகர்த்தான், என்றார். குரங்குகள் பற்றிய பாடல்கள் 22 வருகின்றன.

திமிங்கிலம், திமிங்கிலகிலம் என இரு நீர்-விலங்குகளைக் குறிப்பிட்டுள்ளார். மான் பற்றி 88 பாடல்களும், முயல் பற்றி 9 பாடல்களும் வருகின்றன. 'தூமொழி மடமான்' எனக் கைகேயியை குறிப்பிட்டார். சீதையை எப்போதும் மானுடனேயே ஒப்பிடுவார்.

ஆடு, அமைதியின் சின்னம், வெள்ளாடு, செம்மறியாடு, மலையாடு எனப் பலவகையுண்டு. மலையாட்டைக் கம்பர் 'வருடை' எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு யானை முதல் ஆடு ஈறாகக் கம்பர் காட்டிய விலங்கினங்களுள் இயல்பாலும், உவமையாலும் நயம் தரும் பகுதிகள் படித்து இன்புறற்பாலன.

கம்பனது கடவுட் கொள்கை

திரு. அ. அருணகிரி

கோபுர வாயில்

காசில் கொற்றத்து இராமன் கதையை ஆசைபற்றி அறைதலுற்ருன் கவிச்சக்கரவர்த்தி கம்பன். நடையில் நின்று உயர்ந்த நாயகனுகிய இராமனது கதையை நான்கு வேதங்களையும் நன்குணர்ந்த வான்மீகி முனிவரே ''இராமாயணம்'' என்றபெயரில் விரும்பிப் பாடினுரென்ருல், கல்வியில் பெரியவனுகிய கம்பன் ''இராமாவதாரம்'' என்ற பெயரில் இராமகாதையைப் பாட ஆசைப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. ஆகையால், தென்சொற்கடந்து வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்த கம்பன், வடமொழியில் வான்மீகி வடித்த இராமாயணத்தை வாங்கி இராமாவதாரமாகத் தமிழிலே தந்தான்.

ஏற்புடைக் கடவுளும் வழிபடு கடவுளும்

ஒருவனுக்கு ஒருத்தியென்ற உயர்ந்த ஒழுக்கநெறியில் வாழ்ந்து காட்டிய இராமனை, மானிடத் தெய்வமாகக் கண்ட கம்பன், அவனை எடுத்துக் காட்டாகக் கொண்டு மக்கள் நடந்தால் உலகம் உய்யும் என்று கருதினுன். அதனுல்தான் மானுடம் போற்றும் மாக்கதையாக இராமகாதையைப் பாடத்துணிந்தான். இராமகாதையைப் பாடும் பணியே பணியாய்க் கொண்ட கம்பனுக்குத் தான் மேற்கொண்ட பணி, எந்தவித இடையூறுமின்றி இனிது நிறைவேற வேண்டுமென்ற கவலை அதிகரித்தது. ஆகையால், நூற்பொருளுக்கு ஏற்புடைக் கடவுளாகிய இராமனது புகழைப் பாடுதற்குத் தன்னுடைய வழிபடு கடவுளை வணங்கித் தொடங்குகிருன்.

கற்றதன் பயன் கடவுளை வணங்குதல்

கம்பராமாயணத்தின் காப்புப் பாடலாகப் பாலகாண்டத்தின் பாயிரப் பாடலைப் பாடியதோடு, கம்பனுடைய உள்ளம் அமைந்து விடவில்லை. கவிச்சக்கரவர்த்தி கம்பன், புவிச்சக்கரவர்த்தித்திருமகன் கதையைப் பாடிவரும்போது, காண்டங்கள் தோறும் கடவுள் வாழ்த்துப் பாடுகிருன். இராமகாதை நூல் ஒன்றேயாயினும், காண்டங்கள் பொருளால் பலவாதலால், ஆறுகாண்டங்களுக்கும் தனித்தனியே கடவுள் வாழ்த்துப்பாடித் தொடங்குகிருன். மேலும், கற்றதன் பயன் கடவுளை வணங்குதலேயாதலால், கல்வியில் பெரியவனுகிய கம்பன் காண்டங்கள் தோறும் கடவுள்வாழ்த்துப் பாடவில்லையென்ருல் அவன்கற்ற கல்வி பயனற்றதாகிவிடுமல்லவா? எனவே, ஆறு பாடல்களை ஆறு காண்டங்களுக்கும் முதலிலே கடவுள் வாழ்த்தாக நிறுத்துகிருன். கடவுள் வாழ்த்தாகவரும் ஆறுபாடல்களையும் கொண்டு கம்பனுடைய கடவுட்கொள்கையை ஆய்ந்தறிவோம்.

கம்பன் சமயவாதியல்லன்

கம்பனைச் 'சைவன்' என்று சாதிப்பாரும், 'வைணவன்', என்று வாதிப்பாரும் கம்பன் காலத்திலிருந்து இன்றுவரை வாழையடி வாழையாக வந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் 'அரன்அதிகன்'; உலகளந்த அரிஅதிகன்' என்று வாதிடுவார்போல், கம்பனைத் தங்கள் சமயத்திற்கு இழுக்க முயல்கின்றனர். சைவ வைணவப் பெருமக்களின் வாதப்பிரதி வாதங்களைக் காணும் பிற சமயத்தார்களும், தங்கள் தங்கள் சமயக் கண்ணுடியணிந்து கம்பனுடைய கடவுட் கொள்கையைக் காண்கின்றனர். இவர்கள் அனைவரும் இராமாவதாரத்தின் கதைப் போக்கினையும், இராமபிரானை வழிபடும் கதை மாந்தர்களின் கூற்றுக்களையும், சில அடைமொழிகள், உவமைகள், இயற்கை வருணனைகள் முதலியவற்றையும் கொண்டு திறனுய்வு செய்து தீர்ப்புரைக்கின்றனர்.

துதிப் பாடல்களின் துணை வேண்டாம்

கதை மாந்தர்களில், விராதன், கவந்தன், அனுமன், வாலி; சுக்கிரீவன், அங்கதன், பிரகலாதன், இராவணன், கும்பகருணன், வீடணன், கருடன், இந்திரன், பிரமன், சிவன், அமரர் ஆகியோர் வழிபடுவதாக வந்துள்ள பாடல்களோடு ஆழ்வார் பாசுரங்களையும் துணைக்குச் சேர்த்துக் கொண்டு திறனய்வாளர்கள் கம்பனது கடவுட் கொள்கையை ஆராயமுற்படுகின்றனர், இராம கதையில் வரும் வழிபாட்டுப் பாடல்களில், மும்மூர்த்திகளில் பிரமனும் சிவனும் தான் இராமனை வழிபட்டதாக வருகின்றதேயன்றித் திருமால் இராமனை வழிபட்டதாகக் காணப்படவில்லையாதலால். திருமாலே கம்பன் கண்ட கடவுள் என்றும், திருமாலின் அவதாரமாகிய இராமனே கம்பன் கண்ட கடவுள் என்றும் ஆராய்ச்சியாளர் முடிவுக்கு வந்து விடுகின்றனர். இந்த முடிவு கம்பனுடைய உள்ளத்தின் உண்மை நிலையா? என்பதை நாம் காணுதல் வேண்டும்.

கம்பனது உள்ளத்தை உணர்தல் வேண்டும்.

கம்பன் தான் பாடிய காவியத்துள் பாத்திரங்களின் நிகழ்ச்சிகளுக்கேற்ப, அங்கங்கே அவரவர்கள் கூற்றுக்குக் குரல் கொடுக்கிறான். அவனது குரலை மட்டும் கேட்டு, உள்ளத்தின் உண்மை உணர்வை உணர முடியாமல் கண்டபடியெல்லாம் தீர்ப்புரைப்பது திறனய்வுக்கு அழகாகாது. காவியப் பாத்திரங்களின் வாயிலாகக் கம்பன் காட்டும் கடவுளுணர்வில் அவனுக்குப்பங்கில்லை அது பாத்திரங்களுக்கே சொந்தமாகும், ஆனால், காண்டங்கள் தோறும் அவன் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்களில் உறைந்து கிடக்கும் கடவுட் கொள்கை, கம்பனுக்கே சொந்தமாகும்; அவற்றில் பாத்திரங்களுக்குப் பங்கில்லை. மேலும், ''திருமாலின் அவதாரமே இராமன்'' என்பது வான்மீகம்.''வான்மீகத்தின் வழி நூலாக எழுதிய கம்பனும் மூலத்தில் மாறுபடாமல் கதைப் போக்கினை அவ்வாறே எழுதினன். ஆனல், வான்மிகி பார்வையில் இராமன் ஒரு தெய்வம்; கம்பன் பார்வையில் இராமன் ஒரு மானுடன். இராமன் திருமாலின் அவதாரம் என்ற கொள்கைக்கு முழுப்பொறுப்பு வான்மீகியேயன்றிக் கம்பனில்லை. ஆகையால், கம்பனது கடவுட் கொள்கையைக் காண்டங்களின் முதலில் வரும் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் கொண்டே கணக்கிட வேண்டும். அப்போது தான் சரியான விடை கிடைக்கும்.

வள்ளுவர் துணைக்கு இணையில்லை.

இராம காதையின் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் கொண்டு கம்பனுடைய உண்மையான கடவுட் கொள்கையை உணர்தற்குத் தெய்வ வள்ளுவரின் திருக்குறளைத் தேவையுள்ள போது துணைக் கொள்ளுவதில் தவறில்லை. ''தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே இராமகாதையை இயம்பினேன்'' என்று கம்பனே தற்சிறப்புப் பாயிரத்தில் கூறியுள்ளதால், அந்த வள்ளுவன் செய் திருக்குறளை வழிகாட்டியாகக் கொண்டு விடைதேடுவோம்.

எவர் தலைவர்?

> ''உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
> நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகுஇலா விளையாட்டு உடையார்; அவர்
> தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே''

இது, இராமாவதாரத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல். இப்பாடல், பாலகாண்டத்தின் பாயிரப் பாடலாக நின்று கடவுள் வணக்கம் கூறுகின்றது கம்பனுக்கு வழிபடு கடவுள் வாழ்த்து இது. இராமகாதைக்கு ஏற்புடைக்கடவுள் வாழ்த்தாகவும் இதனைக் கொள்ளலாம்.

''உலகம் முழுவதையும் ஆக்கல், காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழில்களையும் விளையாட்டாக- காலத்தால் இடைவிடாது- தொடர்ச்சியாக-அசகாயகர்த்தாவாகி - எங்கும் என்றும் ஆற்றிக் கொண்டிருப்பவர் எவரோ, அவரே உலகிற்குத்தலைவர். அத்தலைவரின் திருவடிகளுக்கே நாங்கள் அடைக்கலம்'' என்பது பாடலின் பொருள்.

படைத்தல், காத்தல், மறைத்தல் ஆகிய முத்தொழில்களையும் முறையே பிரமனும், திருமாலும், சிவனும் ஆற்றிக்கொண்டிருப்பதாக நாம் கருதிக் கொண்டிருக்கிறோம். கம்பனோ, முப்பெருங்கடவுளர்கள் ஆற்றுவதாகக் கருதும் முத்தொழில்களையும் ஒருவரே விளையாட்டாகச்சிரமம் ஏதுமின்றி ஆதிகாலந்தொட்டுச் செய்வதாகப் போற்றுகிறான். அவரையே தலைவர் என்றும் கொண்டாடுகிறான். உலகத்து இயக்கங்கள் அனைத்தும் கடவுளின் திருவிளையாடலுள் அடக்கம் என்று கருதினான் கம்பன். ஆகையால்தான், அவரையே தலைவர் என்றும் கொண்டாடுகிறான். முப்பெருங்கடவுளர்க்கும் முதல்வர் முழுமுதற் கடவுள் - அவரே பரம்பொருள் - மூவர்க்கும் மூர்த்தி மூவர்க்கும் மூர்த்தியென்றால் யாவர்க்கும் மூர்த்திதானே! ஆகையால்தான், அவர் தமக்கு மட்டும் தலைவராகவில்லை, "உலகிற்கே தலைவர்" என்று முத்தாய்ப்பு வைப்பதுபோல், 'உலகம் யாவையும் என்று தொடங்கினான். பரம்பொருளாகிய அந்தத் தலைவருக்குத் தன்னை மட்டும் அடைக்கலமாக்கிக் கொள்ளக் கம்பன் விரும்பவில்லை. உலகத்து உயிர்கள் அனைத்தையும் தன்னைப்போலவே அடைக்கலமாக்கிச் "சரண் நாங்களே" என்று மங்கலக் கூத்தாடுகிறான்,

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார்; நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்ற குறள் நெறிப்படி, அத்தலைவரின் திருவடிகளையே புகலிடமாகக் கொண்டு, புணையாகப் பற்றிப் பிறப்பாகிய பெருங்கடலைக் கடத்தல் வேண்டும் என்கிறான் கம்பன். இராமகாதை கடவுள் வாழ்த்தின் மூலம் கடவுளின் பொது இயல்பினை உயிரினத்துக்கே உரிமையாக்கி மகிழ்கிறான் கவிச்சக்கரவர்த்தி.

ஒரு காண்டத்திற்கு மூன்று கடவுள் வாழ்த்துக்களா?

பாலகாண்டப் பாயிரத்தில்மூன்று பாடல்கள் கடவுள் வணக்கம் கூறுகின்றன. என்றாலும், "உலகம் யாவையும்" என்று தொடங்கும் ஒரு பாடலுக்கு விளக்கமாகவே மற்ற இரு பாடல்களும் அமைந்துள்ளன.

சிற்குணத்தர் தெரிவு அரு நல்நிலை
எற்குணர்த்த அரிது; எண்ணிய மூன்றனுள்
முற்குணத் தவரே முதலோர்; அவர்
நற்குணக் கடல் ஆடுதல் நன்று அரோ.

கம்பன், எவரைத் தலைவர் என்று வணங்குகின்றானோ அந்தத் தலைவரின் இயல்பை அறியாமையுடைய என்னால் உணர்த்த இயலாது' என்று தன்னடக்கத்தோடு கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். அடுத்த பாடல், அந்தத் தலைவரின் அடியடைந்து உயர்வதற்குரிய வழிகாட்டுகிறது.

"ஆதி, அந்தம் அரிஎன யாவையும்
ஓதினர்; அலகுஇல்லன, உள்ளன,
வேதம் என்பன மெய்ந்நெறி நன்மையான்
பாதம் அல்லது பற்றிலர் பற்றிலார்."

இந்தப் பாடல் கடவுளாகிய தலைவரின் சரணங்களின் சிறப்பை விரித்துரைக்கின்றது.

இராம காதையின் முதற் காண்டத்தில், மூன்று பாடல்கள் கடவுள் வணக்கம் கூறுகின்றன என்று கூறுவது முறையன்று. மூன்று பாடல்களில் முதற்பாடலுக்கு மற்ற இரண்டு பாடல்கள் உரை விரிக்கின்றன என்று கொள்ளுதல் உத்தமம். "மூன்று" என்பது மங்கலமான எண், முக்குணக் கடலாகிய கடவுளுக்குக் கம்பன் மூன்று பாடல்களைப் படையலிட்டு வணங்கித் தொடங்குகிறான் போலும்!

பாலகாண்டக் கடவுள் வாழ்த்தில், கம்பன் கடவுளைத் தலைவர் என்று கூறி, அவருடைய திருவிளையாட்டியல்பினைத்தான் அடையாளம் காட்டினானேயன்றி, உருவ அடையாளம் கொடுக்கவில்லை. உருவமற்ற அருவ நிலையிலே விளங்கும் அந்தத் தலைவர் யார்? அவர் எப்படியிருப்பார்? என்பவற்றிற்குரிய விடையைப் பாலகாண்டத்திற்கு அடுத்த அயோத்தியா காண்டத்தில் கூறுகிறான்.

கழல் வேந்தை உள்ளும் புறமும் உளன் என்ப.

"வான்நின்று இழிந்து வரம்பு இகந்த
மாபூதத்தின் வைப்பு எங்கும்

ஊனும் உயிரும் உணர்வும் போல்
உள்ளும் புறமும் உளன் என்ப,
கூனும் சிறிய கோத் தாயும்
கொடுமை இழைப்பக் கோல் துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர்
இடுக்கண் தீர்த்த கழல் வேந்தை''

கூனலயுடைய மந்தரையும், சிற்றன்னை கைகேயியும், கொடுமை புரிய, அதனுல் ஆட்சி செய்தலை விட்டுக் காடும் கடலும் கடந்து சென்று, மாற்றுரை அழித்து அமரர்களின் துன்பத்தைத் தீர்த்தருளிய இராமபிரானை, அங்கு இங்கு எனுதபடி எங்கும் நீக்கமற நிறைந்தவன் என்று சான்ருேர் பெருமக்கள் கூறுவார்கள் என்கிருன் கம்பன்.

உலகமும் உலகத்துள்ள பொருள்கள் அனைத்தும் பஞ்ச பூதங்களின் கலப்பினுல் ஆனவை. பஞ்ச பூதங்களில் முதலில் தோன்றியது வான். வானிலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றின. நிலத்திற்கு முதன்மை நீர். நீருக்கு முதன்மை நெருப்பு. நெருப்புக்கு முதன்மை காற்று காற்றுக்கு முதன்மை வான். வானுக்கு முதன்மையில்லை முதன்மையில்லாத வான் என்ற பூதமே மற்றைய பூதங்களுக்கு மூலம். மூலமே இல்லா முதன்மைப் பூதமாகிய வான் என்ற தத்துவம், பின்னர் தோன்றிய நான்கு பூதங்களிலும், கண்ணுக்குத் தோன்ருமல் கரைந்து கிடப்பதே உண்மை. இந்த உண்மையின் அடிப்படையில் தான் நம்முடைய ஆன்மதத்துவமும் நிகழ்கிறது.

ஆன்ம தத்துவமானது, கண்ணுக்குத் தோன்றும் உடம்பினுள், கண்ணுக்குத் தோன்ருத உயிரும், உயிரில் உறையும், உணர்வும், பெற்று விளங்குகிறது. ஆகாயம் என்ற கண்ணுக்குத் தோன்ருத மிக நுண்ணியபொருளிலிருந்து உருவெடுத்துக் காற்று, தீ, நீர், நிலம் ஆகியவற்றில் கலந்து தொழிற்படுவது எதுவோ, அதுபோல கண்ணுக்குத் தோன்ருத ஆன்மதத்துவமும் உடம்பு, உயிர், உணர்ச்சி ஆகியவற்றில் நிறைந்து தொழிற்படுகிறது. இவைபோன்று கடவுள் தத்துவமும் எல்லா பொருள்களிலும் நிறைந்து தொழிற்படுவதால், இராமன் என்ற அரிய மானிடனிடத்திலும் நின்று தொழிற்படுகிறது. ஆகையால், இராமரின் உயர்பண்புகள் அனைத்தும் கடவுளடையனவாகி விடுகின்றன. இந்தச் சித்தாந்தக்கருத்தை உள்ளத்தில் கொண்ட கம்பன் அறம்தலை நிறுத்தவந்த அயோத்திராமனிடத்திலும் கடவுள் தத்துவத்தைக் காணுகிருன்.

கடவுள் தத்துவமானது, கண்ணுக்குத் தோன்றும் எள்ளுக்குள்ளே கண்ணுக்குத் தோன்ருமல் எண்ணெய் கலந்திருப்பது போலவும், கண்ணுக்கு தோன்றும் மலருக்குள்ளே கண்ணுக்குத் தோன்ருத மணம் பொருந்தியிருப்பது போலவும் மறைந்து நின்று பொன்நகைக்குள்ளே அதனை உருவாக்கிய பொற்கொல்லன் மறைந்து நின்றது போன்று, கண்ணுக்குத் தோன்ருமல் நின்று செயல்படுகிறது. எல்லாவற்றிலும் அடங்கியும், எல்லாவற்றையும் அடக்கியும் இயங்குவதே கடவுள் தத்துவம்.

ஒப்புயர்வற்ற இந்த உண்மையை உணர்ந்த கம்பன், ''இமையோர் இடுக்கண் தீர்த்த கழல் வேந்தை, உள்ளும் புறமும உளன் என்ப'' என்று பாடுகிருன். 'என்ப' 'என்பதற்கு' என்று சொல்லுவார்கள்' என்பது பொருள். இராமனுள்ளிருந்து பரம்பொருள் இயக்குகிறது என்பதை உணராமல் சிலர் இராமனையே பரம்பொருள் என்று சொல்லுவார்கள் என்ற பொருளும் இந்தச் சொற்ருெடரில் தொனிக்கிறது. 'என்ப' என்ற சொல்லைப் பயன படுத்துவதால், இராமனையே பரம்பொருள் எனறு பிறர் சொல்லுவார்களேயன்றி நான் சொல்லவில்லை' என்று சொல்லாமல் சொல்லுகிருன் கம்பன்.

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கணநூல்களில், 'என்ப', 'என்பர்' என்ற சொற்கள் பயினறு வருகின்றன. அந்தச் சொற்கள், 'முன்னைய சானருேர்கள் சொன்ன விதிகளை வழுவாமல் நாமும் கடைப்பிடிக்கவேண்டும், என்ற பொருளைத் தருகினறன. அந்த வகையில் தான, கம்பனும் 'என்ப', 'என்பர்' என்ற சொற்களைக் கையாளுகிருன். வான்மீகி போதாயனர் போன்ற பெரியோர்களைப் போன்று கம்பனும்

இராமனைக் கடவுளாக மதிக்கிறான். எனினும், இராமனையே பரம்பொருளாகக் கொள்ளக் கம்பனுடைய உள்ளம் மறுக்கிறது. ஆகையால், காவியத்தின் கதைக்போக்கில் பற்பல மாற்றங்கள் செய்தது போன்று, கடவுட் கொள்கையிலும் மாற்றம் செய்கிறான். வான்மீகி போன்றோர்கண்ட கடவுட் கொள்கையிலும் கம்பனுடைய புரட்சிப் பார்வை விழுந்ததன் விளைவு இது. முன்னையோர் கொள்கை கற்றவர்களுக்கே பயன் தருவது, கம்பனது கொள்கை, கற்றவருக்கும் கல்லாதவருக்கும் எல்லாருக்கும் பயன்தருவது. இராமனையே கடவுள் என்று முன்னையோர் காட்டும் காட்சியை மாற்றவே 'என்ப' என்ற சொல்லைப் பெய்தான் கம்பன்.

இராமன் உணர்விலுள் இறைவன் உறைகிறான்

''உடம்பினுள்உயிரும், உயிரினுள் உணர்வும் போல் இராமன் இருக்கிறான்' என்று முன்னையோர் சொன்னாலும்; அந்த இராமனுடைய உணர்விலுள்ளும் இறைவன் உறைந்திருப்பதை உணர்ந்தான் கம்பன் இராகவன் மிதிலையில் திருமணக்கோலத்தில் இருந்தபோது,

''கோதறு தவத்துத்தம் குலத்துள்ளோர் தொழும்
ஆதியம் சோதியை அடிவணங் கினான்''.

காடு சென்ற இராமன் கங்கைக்கரை முனிவர்களின் விருந்தினனாகத் தங்கியிருந்த போது,

''துறை நறும்புனல் ஆடிச் சுருதியோர்
உறையுள் எய்தி, உணர்வுடையோர் உணர்
இறைவற் கைதொழுது, ஏந்துஎரி ஓம்பிப்பின்
அறிஞர் காதற்கு அமைவிருந்து ஆயினான்''.

இலக்குவனோடும் சீதையோடும் இராமன் சித்திரகூடத்தில் தங்கியிருந்தபோது, மாலை வழிபாடு நிகழ்த்தியதாக ஒரு பாடல் வருகிறது.

மொய்உறு நறுமலர் முகிழ்த்த வாம்சில;
மைஅறு நறுமலர் மலர்ந்த வாம்சில;
ஐயனொடு, இளவற்கும் அமுதஅனை ளுக்கும்
கைகளும், கண்களும் கமலம் போன்றவே''.

இப்பாடலின் மூலம், இராமன் அந்தியை நோக்கி இருந்து, தாமரைமலர் போன்ற கைகுவித்துக் கண்முகிழ்த்து இறைவனை நோக்கி மாலை வழிபாடு இயற்றினான் என்ற செய்தி தெளிவாகின்றது.

இப்படியே பல இடங்களில் இராமன் தன்னுடைய வழிபடு கடவுளை வணங்கியதாகக் காட்டும் கம்பன், இராமனுக்கும் வழிபடு கடவுள் ஒன்று உண்டு என்று உணர்த்துகிறான். இராமன் எந்தக்கடவுளை வழிபட்டானோ, அந்தக் கடவுளையே கம்பனும் தன்னுடைய வழிபடு கடவுளாகக் கொள்கிறான். தனக்கென்று ஒரு வழிபடு கடவுளைத்தன் உள்ளத்தில் வரையறுத்துக் கொண்ட கம்பன் அக்கடவுளை வணங்கி இராமகாதையைப் பாடத் தொடங்கினான். கடவுள் தத்துவம் உள்ளுறைந்து நிற்கும் இராமனையே கடவுள் என்று நம்பும் மக்களைத் தெளிவுப்பெறச் செய்யவே அயோத்தியாக்காண்டக் கடவுள் வாழ்த்தைப் பயன்படுத்துகிறான் அவன்.

கண்டதைக் கொண்டு காணாததை உணர்த்துதல்

உண்மைக்கு ஒருவனாய் வாழ்ந்த அரிச்சந்திரனை நாம் கண்டதில்லை 'வாய்மையே வெல்லும்' என்று வாழ்ந்து காட்டிய உலக உத்தமர் காந்தியடிகளை நாம் கண்டிருக்கிறோம். கண்கண்ட தெய்வமாகிய காந்தியடிகளின் வழியே அரிச்சந்திரனையும் உண்மையின் உயர்வையும் உணர்கிறோம். கண்ட ஒன்றிலிருந்து காணாத ஒன்றை (From concrete To Abstract) உணர்த்துவது தான் உலக வழக்கு. அது போலவே, கம்பன் தான் கண்ட இராமன் வழியே காணாத கடவுளின் தத்துவத்தைக் கண்டுணர்த்துகிறான்.

காணாததைக் கொண்டு, கண்டதைக் காட்டுதல்

கம்பனுக்கு முன் இராமாயணத்தைப் பாடியவர்களும் பாடப் பக்கம்நின்று கேட்டவர்களும் கண்ணுக்குத்தெரியாத பரம்பொருளைக் கொண்டு கண்கண்ட (From abstract To concrete) இராமனைக் காட்டினார்கள். இந்நிகழ்ச்சி, அண்மைக்காலத்தில் நிகழ்ந்தநிகழ்ச்சியொன்றை நினைவுபடுத்துகிறது.

ஆசியஜோதி பண்டித ஜவஹர்லால்நேரு அவர்கள், பாரதப் பிரதமராக ஒளிவீசிக்கொண்டிருந்த காலத்தில், ஒருநாள் டில்லியில் புயல் வீசிக்கொண்டிருந்தது. இந்தியாவில் வெளிநாட்டின் தூதராக அப்போது பணியாற்றிக் கொண்டிருந்த கிறித்தவ அறிஞர் ஒருவர், நேருபெருமானைப் பேட்டி காண்பதற்காக வந்தாராம். வந்தவர் பண்டிதரைப்பார்த்து, ''ஜெனுசரத்' (Storm of Genazereth) புயலைப் போன்றில்லையா இந்தப் புயல்?'' என்று கேட்டாராம். உடனே பிரதமர் அவர்கள் 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ சொல்லாமல், 'கண்ணுக்குத் தெரிகின்ற இந்தப் புயலைக் கண்ணுக்குத் தெரியாத அந்தப் புயலைக் கொண்டு விளக்க முயல்கின்றீர்களே, இது உங்களுக்கே விந்தையாக இல்லையா?'' என்று எதிர்வினா எழுப்பினர்களாம். பாரதப் பிரதமரின் தெளிந்த மெய்யறிவைக் கண்டு, வெளிநாட்டுத்தூதர் திகைத்து நின்றுவிட்டாராம்.

கண்காணாத ஒன்றை உணர்த்தக் கண் கண்ட ஒன்றைப் பயன்படுத்தும் உலக வழக்கம் இருக்கவும், வெளிநாட்டுத் தூதர் கண்ணுக்கெதிரே வீசும் புயலைக் காட்டச் சமயப் பற்றின் காரணமாகப் பைபிளில் பேசப்பட்ட ஜெனுசரத் புயலை வலிந்து இழுப்பதைக் கண்டு ஆசிய ஜோதி விந்தையாகக் கொண்டதில் வியப்பொன்றுமில்லை. நேரு பெருமகனின் மெய்யறிவினைக் கொண்டு, கவிச் சக்கரவர்த்தியின் உண்மையுணர்வினை நாம் உணர வேண்டும்.

ஆசிரியர்களில் சிலர் இலக்கணப் பாடம் கற்பிக்கும்போது, சூத்திரத்தைச் சொல்லிப் பொருளுணர்த்திப் பின்னர் உதாரணந்தந்து விளக்குவார்கள். இதற்கு 'விதிவிளக்கு முறை' என்று பெயர். வேறு சிலர் உதாரணங்களைச் சொல்லி, உதாரணங்களுக்கேற்ப விதிபடைத்து, இறுதியாகச் சூத்திரம் சொல்லிப் போதிப்பார்கள். இதற்கு 'விதி வருமுறை' என்று பெயர். விதியைக் கொண்டு விளக்கம் தருவதை விட, விளக்கத்தைக் கொண்டு விதிபடைத்துப் போதிப்பதே சிறந்த போதனுமுறை என்று கல்வியாளர்கள் கருதுகிறார்கள். விதிவிளக்கு முறைப்படி, சமய நோக்குடைய சான்றோர் பெருமக்கள், கண்காணாத கடவுளைக் கொண்டு கண்கண்டராமனைக் காட்டினர்கள். கம்பனோ, விதிவருமுறைப்படி கண்கண்ட ராமனைக்காட்டி கண்காணாத கடவுளை உணர்த்துகிறான்.

அறிவினுக்கு அறிவு

பாலகாண்டக் கடவுள் வாழ்த்தில் பரம்பொருளின் செயற்கரிய செயல்திறனைக் காட்டிய கம்பன், அயோத்தியா காண்டக் கடவுள் வாழ்த்தில் அப்பொருள் தரித்த வேடத்தின் அடையாளம் காட்டுகிறான். கம்பன் பாடப் புகுந்த கதைக்குத் தலைவன் இராமன். இராமனோ, திருமாலின் அவதாரம். திருமாலோ, பரம்பொருளின கூறு; ஆகவே, மனித ராமனுக்குள்ளே கடவுள் தத்துவம் இருந்து இயக்குவதைக் கண்டான் கம்பன். கால்நிலம் தோய நின்று கட்புலனுக்கு உற்ற தெய்வமாகக் கண்ட இராமனிடத்தில், ஆதிநாதனை - அறிவினுக்கு அறிவாக விளங்கும் ஆண்டவனை - அவன் தந்த மெய்யறிவினால், கம்பன் அறிந்து கொள்ளுகிறான்.

நாம் ஒரு நூலை எடுத்துப் படிக்கும்போது, எழுத்துகள் தெளிவாகத் தெரியவில்லையென்றால் கண்ணாடியணிந்து படிக்கிறோம். கண்ணாடியணிந்ததும் முன்பு தெளிவாகத் தெரியாத அதே எழுத்துக்கள் அதே கண்களுக்குத் தெளிவாகிவிடுகின்றன. இப்போது, கண்களுக்குக் கண்ணாடி கருவியாகிவிடுகிறது. இதுபோன்று, உலகத்துக் காட்சிகள் அனைத்தையும் கண்களால் கண்டு அறிவினால் அறிகிறோம். இப்போது, கண்கள் அறிவுக்குக்கருவியாகி விடுகின்றன. இதுபோன்று, அறிவினால் அறிந்ததன் உண்மை நிலையை உணரத் தலைப்படும்போது, உண்மையறிவுக்கு அறிவு கருவியாகிவிடுகிறது. கண்ணாடியைக் கருவியாக எப்படி நம்முடைய கண்கள் பயன்படுத்துகின்றனவோ, அப்படியே கண்களைக் கருவியாக நம்முடைய அறிவு பயன்படுத்துகிறது. கண்களைக் கருவியாக எப்படி நம்முடைய அறிவு பயன்படுத்துகிறதோ, அப்படியே அறிவைக் கருவியாக நம்முடைய மெய்யறிவு பயன்படுத்துகிறது.

மெய்யறிவே அறிவு. மற்றையது ஆணவ அறிவு. ஆணவ அறிவு அறிவல்ல. அறிவினுக்கு அறிவே கடவுள். அதுவே, பேரறிவு சராசரி மனிதனுக்குள்ளது ஆணவ அறிவு; ஞானிகளுக்குள்ளது மெய்யறிவு. அதுவே மெய்ஞானம். கண்டு மகிழ உதவுவது அறிவு; உணர்ந்து மகிழ உதவுவது மெய்யறிவு. அந்த மெய்யறிவுதான் கடவுளோடு கலப்பது. கடவுளின் இலக்கமாகிய இராமனைக் கண்ட கம்பன், தன்மெய்யறிவினுல் இராமன் வழியே கடவுளின் உண்மை நிலையை உணர்ந்து கொண்டான்.

ஆதிநாதர், எம் அறிவினுக்கு அறிவு.

கடவுளின் உண்மைத் தன்மையை அறிவது மிகமிகக் கடினம்தான். மரம் என்றும், மனிதன் என்றும், மலை என்றும் எத்தனையோ உருவங்களோடு பல பொருள்களைப் பார்க்கிறேம். பல பொருள்களும் பல்வேறு உணர்ச்சித் தன்மைகளைப் பெற்றிருக்கின்றன. எண்ணுக் கடங்காத பொருள்களெல்லாம் எண்ணிறந்த உணர்ச்சி பேதங்களைக் கொண்டு விளங்குகின்றன. எண்ணிக்கையற்ற எல்லாப் பொருள்களும் பேதமற்ற கடவுளின் அம்சங்களேயாகும். கடலில் எழுகின்ற பேரலைகளும் சிற்றலைகளும் கடலை விட்டுப் பிரிவதில்லை. அதுபோலவே, எண்ணிக்கையற்ற எல்லா உருவங்களும் உணர்ச்சிகளும் கடவுள் தத்துவத்தினின்று பிரிவதில்லை. இப்படிப் பேதித்தும் பேதியாமலும் நிற்கும் கடவுள் தத்துவத்தை அறிவது மிகமிகக் கடினம்தான்.

> பேதியாது நிமிர் பேதஉருவம் பிறழ்கிலா
> ஓதிஓதி உணரும்தொறும்
> உணர்ச்சி உதவும்
> வேதம், வேதியர் விரிஞ்சன்
> முதலோர் தெரிகிலா,
> ஆதிதேவர் அவர்தம்
> அறிவினுக்கு அறிவுஅரோ!

அறிதற்கரிய கடவுள் தத்துவத்தைப் பற்றி வேதங்கள் விவரிக்கின்றன. அந்த விவரிப்பு, விரிவும் ஆழமும் உடையதாய் இருக்கின்றது. அதன் காரணமாக ஆராயும் போதெல்லாம் புதிய புதிய உணர்ச்சிகள் தோன்றுகின்றன. வேதங்களை நாமே ஓதியறிவதைவிட, ஓதுவிக்கும் வேதியர்களைக் கொண்டு அறியமுயன்ருலும் விரிந்துகொண்டே போகிறது. பிரமன் முதலிய தத்துவ ஞானிகளாலும் அறிய முடியாத அந்தப் பரம்பொருளைத் தன் மெய்யறிவினுல் அறிந்து கொண்டான் கம்பன். ஊனக்கண்களால் காண்டற்கரிய ஆதிநாதனை ஞானக்கண்களால் உணர்ந்து கொண்டான் அவன். மற்றவர்களால் அறிதற்கரிய பரம்பொருளாக விளங்கும் ஆதிநாதனை, அவன் தந்த மெய்யறிவினுல் உணர்ந்து கொண்ட கம்பன், 'நான் அறிந்து கொண்டேன்' என்று மார்பு தட்டி மகிழ்ச்சிக் கூத்தாடுகிருன்.

ஆர்க்கிமிடீஸ் என்ற கிரேக்க நாட்டு விஞ்ஞானி, ஒரு பொருளின் அடர்த்தி எண்ணை அறிவதற்குரிய வழியினைத் தன் அறிவினுல் கண்டு பிடித்தபோது ஏற்பட்ட எல்லையில்லா மகிழ்ச்சியினைப் போன்று, கம்பன் தன் ஞானக் கண்ணுல் அறிவக்கு அறிவாக விளங்கும் ஆண்டவனை உணர்ந்து கொண்டபோது மகிழ்ச்சியால் துள்ளுகிருன். அதன் காரணமாக 'ஆதிதேவர் எம் அறிவினுக்கு அறிவு' - "எம் அறிவினுக்கு அறிவு" என்று துள்ளித் துள்ளிக் கூத்தாடுவதைக் காணுகிறேம். சித்த மிசை குடிகொண்ட அறிவான தெய்வத்தை, அத் தெய்வம அருளிய அறிவினுல் கண்டுணர்ந்த கம்பன் நம்முடைய அறிவையும் தூண்டிச் சிந்திக்கச் செய்கிருன். யாம் பெற்றபேறு பெறுக இவ்வையகம் என்று வாழ்ந்த முன்ஞேர்கள் வரிசையிலே வாழையடி வாழையாக வந்தவன் தானே கம்பன்! மும்மூர்த்திகளில் ஒருவனுகிய திருமாலையே முழுமுதற்கடவுள் என்று கொள்ளாத கம்பன், திருமாலின் அவதாரமாகிய இராமனையே முழுமுதற் கடவுள் என்று நம்பும் நம்மைத் தெளிவித்துத் தான் கண்ட கடவுளின் உண்மையினை உணர்த்த, கிட்கிந்தா காண்டத்துக்கு அழைக்கிருன். செல்வோம்.

ஒன்றிலே மூன்று

உலகில் எத்தனையோ அற்புத சக்திகளைக் கண்கூடாகக் காணுகிறேம். மீன் சினையினும்

நுண்ணிய வித்திலிருந்து பெரிய ஆலமரம் உண்டாகிறது. பெரிய ஆலமரம் சின்னஞ்சிறு விதைக்குள்ளே அடங்கியிருப்பது அற்புதந்தான் ஆலமரம் போன்று பல தாவரங்கள் நுண்ணிய விதைக்குள்ளிருந்து வெளிப்பட்டு, தங்களுக்கான உணவை ஆக்கிக்கொண்டு, அவற்றிற்குரிய காலம்வரை உயிர் வாழ்வதும் அதிசயம்தான்· அவ்வாறு உயிர்வாழும் ஓ ர றி வு யி ர் க ள் தங்களுக்குரிய கால எல்லை மு டி ந் த வு ட ன் மடிந்துபோவதும் அற்புதந்தான். குறிஞ்சி போன்ற தாவரங்கள் பன்னிரண்டு ஆண்டுக் கொருமுறை ஒன்ருகத் தோன்றி, ஒன்ருக வாழ்ந்து, ஒத்துப்பேசி ஒன்ருக மடிவது போன்று மடிந்து விடுகின்றன. இது, மிகமிக அதிசயந் தான்!

ஓரறிவுயிரிலிருந்து ஆறறிவுயிர் வரை அத் தனை உயிர்களும் தோன்றுகின்றன; வாழ்கின் றன; மடிகின்றன. இப்படியே மூன்று தத்துவங் களும் இடையருது நிகழ்ந்து கொண்டேயிருக் கின்றன. இவைகளை முத்தொழில்கள் என்று சொல்லலாம். ஒவ்வொரு தொழிலுக்கும் கர்த்தா வாக ஒவ்வொரு தெய்வம் உண்டென்று கருதத் தோன்றுகிறது. படைக்கும் கடவுள்என்றும், 'காக் கும் கடவுள்என்றும்' அழிக்கும் கடவுள் என்றும் முப்பெருங்கடவுளர்கள் உண்டென்று கருது கிறோம். அந்தத் தேவர்கள் மூவருக்கும் அயன், அரி, அரன் என்று பெயர்சூட்டி அழைக்கிறோம். அந்தத்தேவதைகளைவெண்மை, கருமை, செம்மை நிறங்களையுடையனவாக நம்புகிறோம். நிறங்களுக் கேற்ப சாத்துவிகம், தாமசம், இராசசம் என்ற மூன்று குணங்களையும் உருவாக்குகிறோம். மூன் ருகி நின்றதன் பயனுகத் தோன்றும் எல்லாமும் ஒன்றிலிருந்து தோன்றின என்பதே உண்மை.

ஒன்றுமில்லாத சூனியத்திலிருந்து ஒன்றும் உண்டாவதில்லை. ஆதியில் கண்ணுக்குத் தோன் ருத ஒன்றிலிருந்துதான் எல்லாமும் தோன்றி யிருக்க வேண்டும். அந்த ஒன்றே கடவுள். கண் களுக்குத் தோன்ருத கடவுளை நாம் எப்படி உண் டென்று நம்புவது? கண்களுக்குத் தோன்ருத அந்தக் கடவுள் தத்துவத்தினை கண்களுக்குத் தோன்றும் எல்லாப் பொருள்களும் காட்டி நிற் கின்றன. கண்களுக்குத் தோன்ருத ஒரு கடவு ளின் மூன்று தொழில்களுக்கும் கண்களுக்குத் தோன்றுகின்ற அற்புதசக்திகள் அனைத்தும் சாட்சியம் சொல்வது போல் விளங்குகின்றன. சாட்சியங்களைக் கொண்டே உ ண் மை யை உணர்ந்து நம்பவேண்டும். சாட்சியத்துக்கேற்ற உருவம்படைத்தவன்தான் கடவுள். நெருப்பில்லா மல் புகை பிறக்காது. நெருப்பைக் காணுமலேயே புகை நடுவினில் தீ இருப்பதைப் புரிந்து கொள் ளுகிறோமல்லவா? குயவன் வனையாமல் குடம் தோன்ற முடியுமா? குடத்தைகண்டு, வனைந்த குய வன் உள்ளதை நம்புவதுபோல, நம்முடைய அறி வுக்கு அகப்படாதவனாக, உணர்வுக்கு அப்பால் தாண்டி நிற்கும் பரம்பொருளைச் சாட்சியங்க ளைக் கொண்டே உணரவேண்டும்.

''மூன்றுஉரு எனத்தொழில் மும்மை ஆனவும்,
தோன்றுஉரு எவையும்அம் முதலைச் சொல்லு தற்கு
ஏன்றுஉரு அமைந்தவும் இயங்க நின்றவும்
சான்றுஉரு வாயுளன் உணர்வு தாயினுன்''.

மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலம்

கண்ணுக்குத் தோன்றும் எல்லாப் பொருள் களிலும் கலந்து நிற்கும் கண்ணுக்குத் தோன்ருத மூலப்பொருளாகிய முதலை மறந்து, ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று நம்புவது, அவலை நினைத்து உமியை மெல்லுவது போன்ற செயலா கும். ஒன்று பலவாகத் தெரிந்தால், நம்முடைய பார்வையில் பழுதென்று பொருள். அறிவுக் கண் ணுடியணிந்து பார்த்தால், பலவாகக் கலங்கித் தோன்றும் காட்சிகள், ஒன்ருகித் தோன்றி உண் மையை உணர்த்திவிடும். இந்த உண்மையை உணர்த்தவே கிட்கிந்தா காண்டக் கடவுள் வாழ்த்துப்பாடலைப் பயன்படுத்துகிருன் கம்பன். இந்தவாழ்த்துப்பாடலில்:-

''அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு;

என்ற குறட்பாவின்மாட்சியை உணர்ந்து உணர்த் துகிருன். எழுத்துகளெல்லாம் அகரத்தைமுதலாக உடையன. அவைபோன்று உலகத்துக் காட்சி களனைத்தும் முழுமுதற் கடவுளை முதன்மையாக

உடையன. எந்த எழுத்தையும் வாயைத் திறக்காமல் உச்சரிக்க முடியாது. எழுத்துக்களை ஒலிக்க வாயைத் திறந்ததும், நம்மையறியாமலேயே அகரம் பிறந்து விடுகிறது. ''அ ஆ அங்காப்புடைய'' என்பது நன்னூல் சூத்திரம் அதுபோல் உலகத்துச் சாட்சிகள் அனைத்திலும் நமக்குத் தெரியாமலேயே பரம்பொருள் இருக்கிறது இந்த உண்மையை, ஆய்ந்த அறிவின் அறிவால் அறிந்து, ஒன்றாகி மூலத்து உருவம் பலவாகி நின்ற குன்றாத ஞானக்கொழுந்தை -காண்பார்க்கும் காணப்படுபொருட்கும் கண்ணாகி நின்ற கடவுளை-மூவர்க்கும் முதல்வராய மூர்த்தியை - மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலத்தை- மூலமே இல்லாத முதல்வனைக் காட்டுகிறான் கம்பன்,

உலகத்துப்பொருள்கள் அனைத்தையும் உடலாகக் கொண்டவன்தான் பரம்பொருள். பரம்பொருள் என்ற அடித்தளத்திலிருந்து தான் பஞ்சபூதங்களும் அவற்றின கூட்டாய் விளைந்த எல்லாப் பொருள்களும் தோன்றின. உலகப் பொருள்களுக்கு உயிராக நின்று இயக்கும் மூலப் பரம்பொருளை மறந்து, பஞ்சபூதங்களையும் அவற்றின் விளைவாய் விளைந்த பொருள்களையுமே நாம் கடவுளாகக் கொண்டு மயங்குகிறோம், அந்த வகையில் தான் இராமன் என்ற மானிடனையும் கடவுளாகக் கருதுகிறோம்.

சூரியனால் தோன்றிய மேகம் சூரியனை மறைக்கிறது.

இராமனிடம் கடவுள் தத்துவம் இருக்கிறது ஆனால், இராமனையே கடவுளாகக் கண்டால்,பரம்பொருளின் உண்மை நம் ஆணவ அறிவுக்குப் புலப்படுவதில்லை. பரம்பொருளின் உண்மையை நம்முடைய மெய்யறிவினால் உணர்ந்து கொண்டால் தெய்வராமன் மானுடராமனாக மாறிவிடுகிறான் இராமன் தெய்வமா? மனிதனா? என்ற மயக்க நிலை நம்மை மருட்டிக் கொண்டேயிருக்கிறது.

ஒரு சிற்பி மரத்தினால் ஒருயானை உருவை அமைத்தான். அது உண்மையான யானை போன்றிருந்தது. அதனைக்கண்டவர்கள் மரம் என்பதனை மறந்து யானையென்றே கருதினர். அதுமரம் என்பதை உணர்த்திய பிறகு, கண்டவர்கள் கண்களுக்கு யானையென்ற உணர்வு மறைந்து, மரமாக தோற்றமளித்தது. அதுபோன்று, மனிதராமனைக் கண்டால் தெய்வராமனைக் காணோம்; தெய்வராமனைக் கண்டால் மனிதராமனைக் காணோம். இந்த ஒப்புயர்வற்ற உண்மையை முன்னரே திருமூலர் நமக்குச் சொல்லிச் சென்றுள்ளார்.

''மரத்தில் மறைந்தது மாமத யானை
மரத்தை மறைத்தது மாமத யானை
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்''

திருமூலரின் திருமந்திரக் கருத்தை உள்ளத்தில் வாங்கிக் கொண்ட கவிச்சக்கரவர்த்தி சுந்தரகாண்டக் கடவுள் வாழ்த்தில் அதனை பிரதிபலிக்கிறான்.

கடவுள் இராமனா? பரம்பொருளா?

கம்பன், சுந்தரகாண்டம் பாடத்தொடங்கும் போது வழிபடு கடவுளைப்பாடி வணங்க நினைக்கிறான். அப்போது வான்மீகத்தின் வழியே இராமன் வந்து 'என்னைப்பாடு' என்று எதிரே நிற்கிறான். 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாகக் கம்பன், நான்கு மறைகளின தீர்ப்பை மெய்யுணர்வினால் கண்டுணர்கிறான். அவனை மருட்டிய அறிவு மயக்கத்திற்கு அற்புதமான உவமையைக் கையாண்டு பாடலைத் தொடங்குகிறான்.

''அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபாடு உற்ற வீக்கம்.
கலங்குவது எவரைக் கண்டால்
அவரன்றே கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதார் என்பர்
மறைகளுக்கு இறுதி ஆவார்''.

ஒன்றாகக் காண்பதே காட்சி

மேட்டு நிலத்தில் பெய்த மழைநீர் கலங்கலாக ஓடிவந்து பள்ளப்பகுதியில் குட்டையாக நிற்கிறது. கலங்கலாக நின்ற குட்டைநீர், சில

நாட்களில் பளிங்குபோல் தெளிந்து விடுகிறது. தெளிந்த நீருக்கடியில், மண்வண்டல் பல வடிவங்களாகப் படிந்து நிற்கிறது. தண்ணீர் மட்டத்தின் மேல் வேகமான காற்று மாறிமாறி வீசியதால் நீரின் சலனத்திற்கேற்ப பல வடிவங்கள் அமைந்து விடுகின்றன. அத்தனை வடிவங்களும் மிருதுவான மண்குழம்பால் ஆனவையே. சதுரமாகவும் வட்டமாகவும் முக்கோணக்கூம்பாகவும் இயற்கையாகப்படிந்து, பல வடிவங்களாகப் படிந்த எழிலோவியத்தைப் படிகம் போன்று தெளிந்த நீரின் வழியே கண்டு ரசித்துக் கொண்டிருக்கிறோம். அந்த நேரத்தில் மோட்டெருமை ஒன்று ஓடிவந்து, தண்ணீரில் பாய்ந்து விழுந்து குழப்பி விட்டது. இந்தக் காட்சியை உள்ளத்திலிருத்திக் கொண்டு பஞ்சபூதச் செயல்களைச் சிந்திப்போம்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களும் எத்தனையோ வேறுபாடுகளோடு விளங்குகின்றன. சில கண்ணுக்குத் தோன்றுகின்றன; சில கண்ணுக்குத் தோன்றாமல் இருக்கின்றன. சில உருவமுடையவை; சில அருவமானவை. சில மென்மையானவை; சில கடினமானவை இப்படியே பலவேறுபாடுகளோடு விளங்கும் பூதங்களுக்குள் எண்ணிக்கையற்ற பிரிவுகள் உள்ளன. எத்தனை பிரிவுகள் இருந்தாலும் அத்தனையும் எங்குமாய் எல்லாமாயுள்ள பரம்பொருளின் பேத உருவங்கள் தான். பூதங்களின் பிரிவுகளின் விரிவுகளால் எண்ணற்று விளங்கும் எல்லாமும், பரம்பொருளோடு ஒன்றிப் பார்க்கும் ஞானிகளுக்கு ஒன்றாகவே தோன்றும். ஆண்டவன் சன்னதியில் அனைத்து வேறுபாடுகளும். எருமையால் கலங்கி அழிந்த குட்டைநீருள் படிந்த படிவங்கள் போல ஒன்றாகிவிடும்'

ஒன்றாகக் காண்பதே உயர்வு. தண்ணீர்த் தெளிவினால் அடிமட்டத்தில் படிந்து நின்ற பலவகைப் படிவின் வடிவங்கள் அனைத்தும், மீண்டும் தண்ணீரோடு கரைந்து கலந்து விட்டது போல், பரம்பொருளின் பகுதிகளாக உருவெடுத்த எண்ணற்ற தோற்றங்கள் அனைத்தும் மீண்டும் பரம் பொருளோடு கரைந்து விடுகின்றன.

பக்தி மயக்கத்தின் விளைவு

பரம்பொருளின் கூறுகளாக விளைந்த பஞ்சபூதங்களும், பூதங்களின் விரிவாகப் பேதப்பட்டு விளங்கும் எண்ணற்ற பொருள்களும் இறுதியில் பரம்பொருளோடு கலந்து விடுவது உண்மை. இந்த உண்மையை நன்கு உணர்ந்த தத்துவ ஞானிகள்கூட, கடவுள் தத்துவத்தினின்று கிளைத்த திருமாலையும், திருமாலின் அவதாரமாகிய இராமனையும் கடவுள் என்று போற்றுகிறார்கள். இதனைச் சாமானிய மக்கள் சொன்னாலும் தவறில்லை; வேதங்களின் முடிவை நன்கு உணர்ந்த ஞானிகளே பக்தி மயக்கத்தால் இராமனே கடவுள் என்று கூறி விடுகிறார்கள். கடவுள் தத்துவம் எல்லாப் பொருள்களிலும் கலந்திருப்பது போல், இராமனிடத்திலும் அமைந்திருக்கிறது என்ற ஒரேகாரணத்துக்காகக் கடவுளின முழுமையை - பூரணத்தைக் காணத் தவறிவிடுகிறார்கள். ஆகையால், கைவில்லேந்தி இலங்கையில் போர்புரிந்த இராமன்தான் கடவுள் என்றுகூறிவிடுகிறார்கள். இதனை. 'இலங்கையில் பொருதார் என்பர் மறைகளுக்கு இறுதியாவார்' என்ற சொற்றொடரால் குறிக்கிறான் கம்பன். அயோத்தியாகாண்டக் கடவுள் வாழ்த்தில் வந்த ''என்ப'' என்ற சொல்லுக்கும், சுந்தரகாண்டக் கடவுள் வாழ்த்தில் வரும் ''என்பர்'' என்ற சொல்லுக்கும் பொருள் ஒன்றே.

நான்கு மறைகளின் முடிவான பொருளைக் கண்ட ஞானிகளே, பக்தி மயக்கத்தால் யானையைக் கண்ட குருடர்கள் போல், மூலத்தைமறந்து கிளைகளையும் மிலாறுகளையும் மரம் என்று சொல்லுகிறார்களே என்று வேதனைப்படுகிறான் கம்பன். வேதனையின் வெளிப்பாடாக அற்புதமான உவமையைக் கையாண்டு பாடலைத் தொடங்கினான்.

பாலை வேளையில் மாலை மயக்கம்:

மாலை மயங்கி மறைந்த இருட்டு நேரத்தில் ஒருவன் நடந்து வருகிறான். வந்தவன் எதிரே ஒரு பாம்பு கிடப்பதைக் கண்டான். அந்தப் பாம்போ தலையை நீட்டுவதும் வாலை ஆட்டுவதுமாக அப்பால் இப்பால் நகராமல் கிடந்தது. பாம்பைக் கண்டால் படையும் நடுங்குமல்லவா? பாம்புக்குப்

பயந்து, வந்தவன் நின்று விட்டான். அந்தவேளையில் அந்த வழியே வேறொருவன் வந்தான். முன்வந்தவன் பின் வந்தவனுக்குப் பாம்பு கிடப்பதைக் காட்டி நிறுத்தி விட்டான். பாம்பினைக்கண்டு பின்வந்தவனும் நின்றுவிட்டான். சற்று நேரம் திகைத்து நின்றபின், பின்வந்தவன் கையிலிருந்த மின்விளக்கின் வெளிச்சத்தைப் பாம்பின் மேல் பாய்ச்சினான் அங்கே, காய்ந்து கருகிச் சருகாய்ப் போன பூமாலையொன்று அப்படியும் இப்படியும் காற்றில் அசைந்து கொண்டு கிடந்தது. முந்தி வந்தவனுக்கு வியப்பாய்விட்டது. பாம்பு இல்லாமலிருந்தும், காய்ந்துபோன மாலையை எப்படித்தான் பாம்பென்று நம்பினோம் என்று காரணம் சொல்ல முடியவில்லை அவனுக்கு. இப்படித்தான் எல்லாப் பொருள்களையும்ஒன்றை வேறொன்றாகக் கருதி மயங்குகிறோம்.

ஒன்று. பல-அன்று,ஆம்-உண்டு:இல்லை.

தெளிந்த அறிவுடைய மெய்ஞானிகளுக்கே கடவுள் தத்துவத்தை உணரமுடியாத குழப்பநிலை ஏற்படுகிறதென்றால் நம்முடைய நிலை எம்மாத்திரம்? கடவுளைப்பற்றிய தெளிவான கொள்கை கம்பனுக்கிருந்தும், கடவுளின் உண்மைத் தத்துவத்தை உணரமுடியாமல் அலைமோதுகின்ற உலகினருக்கு எப்படி உணர்த்துவது என்று உணர முடியாமல் தடுமாறுகிறான் கம்பன். தெளிவில்லாதவர்களைத் தெளிவிக்க அவன் திண்டாடுகின்ற தன்மை, யுத்த காண்டக் கடவுள் வாழ்த்துப்பாடலில் தெளிவாகத் தெரிகிறது. யுத்த காண்டக் கடவுள் வாழ்த்தின் மூலம், கம்பன் தன்னுடைய இறுதியான கடவுட் கொள்கையைப் பிழிந்து கொட்டி விடுகிறான். இதோ பாடல்,-

ஒன்றே என்னில் ஒன்றே யாம்,
பலஎன்று உரைக்கில் பலவே யாம்,
அன்றே என்றில் அன்றே யாம்,
ஆம்என்று உரைக்கில் ஆமே யாம்,
உண்டே என்னில் உண்டே யாம்,
இலதென்று உரைக்கில் இலதே யாம்,
நன்றே நம்பி குடிவாழ்க்கை!
நமக்கிங்கு என்னே பிழைப்பு அம்மா'';

உலகத்துப் பொருள்கள் அனைத்திலும் ஊடுருவி நின்று எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஒருவனே இறைவன். இதுதான் உண்மை. ஆனால், பலவகைப்பட்ட தனி இயக்கங்கள் போல பலவகை வடிவங்களில் காணப்படுவதால் அந்தப் பரம்பொருளைப் பல என்று சொன்னாலும் பழுதில்லை. ஆகையால், "ஒன்றே என்னில் ஒன்றே யாம்; பல என்று உரைக்கில் பலவேயாம்'' என்றான் கம்பன்.

எந்த ஒரு தனித்த பொருளையும் பார்த்து இது கடவுளா? என்று கேட்டால், 'எந்தப் பொருளையும் போன்றதன்று பரம்பொருள்' என்று சொல்லுவதுதான் பொருத்தம். ஆனாலும்' உலகெங்கும் நிறைந்த பரம்பொருளின் ஒரு கூறு தானே அந்தப்பொருள்!கடவுள தத்துவம் அந்தப் பொருளில் இருக்கிறதில்லையா? என்று வினவினால், 'ஆம் என்று விடைகூற வேண்டிவரும் ஆகையால்தான், 'அன்றே என்னில் அன்றே யாம்; ஆம் என்று உரைக்கில் ஆமேயாம்'', என்றான் கம்பன்.

கடவுள் தத்துவம் எங்கும்-எல்லாவற்றிலும் நிறைந்து அனைத்தையும் இயக்குவதாய் இருப்பதால், கடவுளை உண்டு என்று சொல்வதில் உண்மை உண்டு. இருப்பினும், எண்ணிப்பார்க்க இயலாத ஆநாதி காலத்திலிருந்து இன்றுவரை ஒரே தன்மையாய் இடையறாது இயங்கி வரும் தத்துவத்தைப் புலன்களுக்கு எட்டுகின்ற தனி வடிவமில்லாத காரணத்தால் "இயற்கை" என்று எளிதாகக்கூறி, இயற்கை நிகழ்ச்சிகளில் இறைவன் செயலுக்கும் இடமில்லை; இறைவனும் இல்லை என்று சாதிப்பார் உளர். ஆகையால், "உண்டே என்னில் உண்டேயாம்; இலது என்று உரைக்கில் இலதே யாம்'' என்றான் கம்பன்.

நாம் எவரைத் தலைவர் என்று கருதி அவருடைய திருவடிகளைப் பற்றுகிறோமோ, அந்தத் தலைவரின் நிலையே ஒன்று என்றும், பல என்றும், அன்று என்றும் ஆம் என்றும், உண்டு என்றும் இலது என்றும் பல என்றும், முரண்படக் கருதும் இந்த அழகில் இருக்கிறதென்றால், புல்லறிவினராகிய நாம் எம்மாத்திரம்? ஆண்டவன் பாடு இப்பாடானால், அடியார்பாடு எப்பாடாகும்? ஆகையால்

அவர்திருவடிகளைப் பற்றி அவர் அருளால் வாழ லாமேயன்றி ஆராய்வதில் என்ன பயன்? எல் லாம் அவர் செயலேயாதலால், ''நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கு இங்கு என்னே பிழைப்பு அம்மா!'' என்று முடித்து விடுகிறன் கம்பன். நகைச்சுவையோடு முரண்பாட்டுச் சுவையும் சொட்டச் சொட்டக் கம்பன் பாடும் யுத்தக்காண் டக்கடவுள் வாழ்த்தின் கடைசி அடியில், நகைச் சுவை உச்ச கட்டத்தை அடைந்துவிடுகிறது.

கம்பன் உள்ளத்தில் உண்மை ஒளி.

இராமகாதையின் கடைசிக் காண்டமாகிய யுத்தகாண்டத்தின் கடவுள் வாழ்த்துப்பாடலில் கம்பனுடைய உள்ளத்தின் உண்மை ஒளி தெளி வாகப் பளிச்சிடுகின்றது.

ஒன்றே என்னில் ஒன்றே யாம்
அன்றே என்னில் அன்றே யாம்
உண்டே என்னில் உண்டே யாம்

என்ற சொற்றெடர்களையும்,

பலஎன்று உரைக்கில் பலவேயாம்
ஆம்என்று உரைக்கில் ஆமேயாம்
இலதுஎன்று உரைக்கில் இலதேயாம்

என்ற சொற்றெடர்களையும் சொல்லிப்பார்த்தால் அவனுடைய உள்ளத்தின் உண்மை உணர்வை உணர முடியும். ''என்னில்'' என்ற சொல்லில் உள்ள அழுத்தமும், வேகமும், உறுதியும், சிறப் பும், ''உரைக்கில்'' என்ற சொல்லில் காணமுடி யவில்லை. மேலோட்டமும், வேகமின்மையும், போலித்தன்மையும், சிறப்பின்மையும்தான் ''உரைக்கில்'' என்ற சொல்லில் காணமுடிகிறது கடவுள் ஒன்று என்று சொல்லுவதும், கண்ட கண்ட பொருள்களையெல்லாம் கடவுளன்று என்று சொல்லுவதும், கடவுள் உண்டு என்று சொல்லுவதும்தான் கம்பனுடைய உள்ளக் கிடைக்கை என்பது தெளிவாகத்தெரிகிறது.

எங்கும் கடல்; எங்கும் கடவுள்:

கங்கு கரை காணுத பெருங்கடல் போன்றது பரம்பொருளாகிய கடவுள். பெருங்கடல், கடல் என்றும், விரிகுடா என்றும், வளைகுடா என்றும், ஜலசந்தி என்றும். கால்வாய் என்றும், பிரிந்து பலவகையாகக் காட்சியளிக்கிறது. எத்தனைக் வகையாகக் காட்சி தந்தாலும், அத்தனையும் கட லோடு கலப்பவைதாம். அதே போன்று கடவுள் தத்துவத்தினின்று கிளைத்துப் பிரிந்து சைவம் என்றும், வைணவம் என்றும்; பௌத்தம் என் றும் சமணம் என்றும், இஸ்லாமியம் என்றும், கிறித்தவம் என்றும் பொங்குபல சமயமெனும் நதிகள் காணப்பட்டாலும் அவையனைத்தும் கட வுள் என்ற கங்குகரை காணுத கடலோடு கலப் பனதாம். கடல்நீர் ஆவியாகி வான வீதியிலே மேகமாகச் சென்று உலாவந்து, மண்ணிலே மழையாகப்பெய்து, தண்ணீராகித் தரையிலே ஊறி உயிர்க்குலங்கள் எத்தனையோ அத்தனையி லும் நிறைந்து நிற்கிறது. மண்ணிலும், மண்ணில் முளைத்த புல்லிலும்' ஏன், நம்முடைய உடலிலும் கூட, கடல் பெருகியிருக்கிறது. என்றாலும், ஒவ் வொரு பொருளும் தன்னைத்தானே கடல் என்று கருதிக் கொள்ளுதல் பொருந்தாது. அதுபோன்று கடவுள் தத்துவம் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கிறதென்றுலும், ஒவ்வொரு பொரு ளையும் கடவுள் என்று கணக்கிடுதலும் கூடாது.

அநாதி காலந்தொட்டு இன்றுவரை, எங்கும் எல்லாவற்றிலும் ஊடுருவி நின்று திருவிளையா டல் புரியும் கடவுள் தத்துவத்தின் உண்மை நிலை யைஉணர்த்துவதற்கு, அரிய பெரிய சமயதத்து வங்களோடு கம்பன் எப்படி விளையாடுகிறன் என்பதைக் கடவுள் வாழ்த்துப்பாடல்கள் நமக்கு காட்டுகின்றன. யுத்தகாண்டக்கடவுள். வாழ்த் தில், கடவுள் ஒன்றென்றிரு! கடவள் பலஅன் றன்றிரு; தெய்வம் உண்டு என்றிரு! என்ற உண் மையினை உணர்த்துகிறன் கம்பன். ஒன்றன கடவுளைப் பலவாகப் போற்றுதே! கண்டவற்றை யெல்லாம் கடவுள் என்று கருதாதே! கடவுள் உண்டு என்று உணர்! இல்லை எனறு சொல்லா தே! எனறு அறிவுறுத்துகிறன அவன்.

உண்மையும் போலியும்

போலித் தத்துவங்களை நம்பி உண்மைத் தத் துவத்தை இழக்கும் நிலையிலுள்ள மனித சமுதா யத்தை ''ஒன்று பல;அன்று-ஆம்;உண்டு-இல்லை என்று முரண்பாட்டுச் சுவையோடு சொல்லி நன்னெறிப்படுத்துகிறன் கம்பன். போலிகள்

மலிந்துவிட்ட இந்தப் பொல்லாத உலகத்தில். மக்கள் உண்மையை உணர்ந்து பயன்பெறவேண்டுமெனபதே கம்பனுடைய குறிக்கோள். இந்த உயர்ந்த குறிக்கோளின் காரணமாகக் கம்பன் போலிகளைக்கண்டு ஏமாறாதே! என்று அறிவுறுத்தச் சுந்தரகாண்டக் கடவுள் வாழ்த்தை அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவினைக் காட்டித் தொடங்கினான். பூமாலை உண்மை; அரவுபோலி, அதுபோன்று வேறுபாடற்றக்கடவுள் உண்மை; பூதங்களின் பேதங்கள் போலி. அவைபோல, பரம்பொருள் உண்மை, இலங்கையில் இராமன் போலி. உண்மை முந்தியது; போலி பிந்தியது பின்னர்த் தோன்றிய போலி, முன்னர்த் தோன்றியஉண்மையை மறைக்கிறது; மருட்டியும் விடுகிறது. பாம்பென்று அடிக்கவும் முடியாமல் பழுதையென்று விடவும் முடியாமல் திகைத்து நிற்கவேண்டியநிலை நமக்கு ஏற்பட்டு விடுகிறது

மணமுள்ள ரோஜா மலர்களைக் கொண்டு தொகுத்த மாலையும், வண்ணக் காகிதங்களைக் கத்தரித்துத் தொகுத்த மாலையும் கண்களுக்கு ஒன்றாகவே காட்சியளிக்கின்றன. உண்மை மாலையும் போலி மாலையும் நம்முடைய் மதியை மருட்டும்போது, மாலையில் வீசும் மணம் உண்மை மாலையைக் காட்டி விடுகிறது. காணும் பொருள்களின் வேறுபாடுகளை அவற்றின் பண்புகளைக் கொண்டு கண்டுபிடித்து விடுகிறோம். காணமுடியாத ஒன்றின் உண்மைத் தன்மையை அவற்றின் இயக்கச் சாட்சியங்களைக் கொண்டு அறிய வேண்டும் என்று கிட்கிந்தா காண்டக் கடவுள் வாழ்த்தில் கூறினான் கம்பன்; படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய இயக்கங்களின் வினைவே சாட்சியங்கள். உலகத்துக் காட்சிகளாகக் கொண்டு இயக்குகின்றவனே கடவுள். நம்முடைய உணர்ச்சிகளுக்கப்பால் விளங்கும் அந்த ஒருவனைக் கண்களால் காண முடியாது என்று சொல்லுகிறது. கிட்கிந்தா காண்டக் கடவுள் வாழ்த்து.

காணும் பொருளிலெல்லாம் கடவுள்

வேத வேதியர்களாலும், நான்முகனுக்கு நிகரான தத்துவ ஞானிகளாலும் காணமுடியாத, ஆதியாகிய கடவுள் தத்துவத்தை நம்முடைய ஆணவ அறிவினால் அறிய முடியாது; மெய்யறிவினால்தான் உணர முடியும் என்று உணர்த்துகிறது. ஆரண்ய காண்டக் கடவுள் வாழ்த்து. காணும் பொருள்களிலெல்லாம் கலந்து நிற்கும் பரம்பொருளின் தத்துவத்தை, மெய்ஞ்ஞானத்தால் உணரவேண்டும் என்பதே கம்பன் கணக்கு. இந்தக் கணக்கின்படி விடை கிடைக்க அயோத்தியா காண்டம் வழிகாட்டுகிறது.

அயோத்தியா காண்டக் கடவுள் வாழ்த்து, 'இராமனை எங்கும் நிறைந்த கடவுளாகவே சொல்லுவார்கள்' என்று சொல்லுகிறது ஒரு தலைவரிடம் செல்வாக்குள்ள வேறொருவரை 'இவரேதான் தலைவர் என்று சிறப்பித்துக் கூறுவதுபோலக் கடவுளின் தத்துவங்கள் நிறைந்து விளங்கும் இராமபிரானை 'இராமபிரானே கடவுள் என்று விபரமறிந்தோர் கூறுவார்கள். செல்வாக்குப் பெற்றவரைக் கொண்டு செல்வாக்குள்ள தலைவரை அணுகுவது போன்று கடவுள் தத்துவம் நிறைந்த இராமபிரானைக்கொண்டு கடவுளை அணுகினான் கம்பன். கடவுளின் திருக்கோயிலுக்குள் கம்பனோடு செல்லும் நாம், கருப்பகிருகத்தை அடைந்துவிட்டோம் கருப்பகிருகம் போன்றதுதான் அயோத்தியா காண்டக் கடவுள் வாழ்த்து. அங்கே கடவுளின் கருப்பத்தில் நிலம், நீர், தீ, காற்று ஆகிய நான்கு பூதங்களும், வான் என்ற பூதத்தின் தலைமையில், தங்களைப் படைத்த பரம் பொருளை வாழ்த்தி வணங்குகின்றன. பிறப்பு வரிசையில் நிற்கும் பஞ்ச பூதங்களின் வரிசையில், பரம்பொருளையடுத்து நெருங்கி முன்னே நிற்பது, "வான்" என்ற பூதம்தான். அதனால்தான் கம்பன் அயோத்தியா காண்டக் கடவுள் வாழ்த்தை "வான்நின்று இழிந்து" என்று தொடங்கினான் போலும்!

வள்ளுவன் வழியில் கம்பன்

வான் மறைந்த தெய்வவள்ளுவன், அதிகார முறைப்படி கடவுள் வாழ்த்தையடுத்து வான் சிறப்பைப் பாடியதன் சிறப்பை நன்குணர்ந்த கம்பன்; "உலகம் யாவையும்" என்று பாலகாண்டக் கடவுள் வாழ்த்தைத் தொடங்கி அடுத்து,"வானின்றிழிந்து"என்று அயோத்தியா காண்டக் கடவுள் வாழ்த்தைத் தொடங்கினான்.


தமிழுக்குக் கதியாகிய கம்பனும் திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்தை உலகிற்குப் படைத்து வழங்கினர்கள். திருக்குறளில் கடவுள் வாழ்த்து அதிகாரத்தையடுத்து வந்த இரண்டாவது அதிகாரமாகிய 'வான்சிறப்பு' அதிகாரம் ''வானின் றுலகம்'' என்று தொடங்கும்குறளால் தொடங்குகிறது. அதேபோன்று இராமகாதையின் இரண்டாவது காண்டத்தின் கடவுள் வாழ்த்து ''வானின்றிழிந்து'' என்று தொடங்குகிறது. பரம்பொருளின் முதல் படைப்பு ''வான்'' என்பது வள்ளுவர் கருத்து. கம்பன் கருத்தும் வள்ளுவர் கருத்தே. கடவுட்கொள்கையில் வள்ளுவர் வழியிலேயே கம்பன் செல்கிருன்.

கடவுள் வழிபாடு

சமயம் கடந்து, மதம் கடந்து நிற்கும் உலகப் பொதுக்கடவுளையே வள்ளுவரும் கம்பனும் வழிபடுகின்றனர். வள்ளுவர் தாம் வழங்கிய முப்பாலின் முதற்பாலில் ''கடவுள் வாழ்த்து''என்று ஒர் அதிகாரத்தைப் படைத்துத் தொடங்கினர். கம்பனும். தான் படைத்த காவியத்தை, முதலில் ''கடவுள் வணக்கம்'' பாடித் தொடங்கினன். பாலகாண்டத்தின் முதலில் வந்த பாயிரத்தில் பாடப்பெற்றதே காவியத்தின் கடவுள் வாழ்த்து. மற்றைய ஐந்து காண்டங்களின் முதலில் அமைந்தவையனைத்தும், முதற்காண்டத்தின் முதலில் அமைந்த கடவுள் வாழ்த்துக்குரிய விளக்கமாகவும் விரிவுரையாகவும் விளங்குகிறது. எனவே. கம்பன் காவியத்துக்குக் கடவுள் வாழ்த்தாக வந்த பாடல், ''உலகம் யாவையும்'' என்று தொடங்கும் ஒரே பாடல்தான். மற்றைய கடவுள் வாழ்த்துக்கள், அந்த ஒரு பாடலுக்குரிய வியாக்கியானங்கள் என்று கொள்ளுதல் வேண்டும்.

தனக்குவமையில்லாத தனிப் பரம்பொருளின் தாளினைப் பற்றினல் மனக்கவலையின்றி வாழலாம் என்ருர் வள்ளுவப் பெருமான கம்பனே, சரணகதித் தத்துவத்தின் சிறப்பினை எடுத்தோதவந்த இராமகாதையின் கடவுள் வாழ்த்தில், எம்மதத்திற்கும் சம்மதமாய் விளங்கும் கடவுளின் திருவடிகளையே சிந்தையில் நினைந்து சென்னியால் வணங்குகிருன்; எல்லோரையும் வணங்கச் செய்கிருன். நாமும் அந்தப் பரம்பொருளை நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, வாழ்த்தி வணங்குவோம். அதுவே, சாதி, சமய மதங்களின் வினைவால் விளையும் சஞ்சலங்களைத் தீர்க்கும் மருந்து.

''உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகுஇலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.''



இரணியன் வதை - இன்னொரு பார்வை

த. கி. நீலகண்டன் (சென்னை)

கம்பன் காவியம் முழுவதற்கும் உள்ள சிறப்பை, தனியொரு படலமாகப் பெற்றுப் பொலியும் இரணியன் வதைப்படலம், வான்மீகி எழுதிய மூலநூலில் இல்லாத ஒரு பகுதி. நாடகப் பாங்கு என்கிற கண்ணோட்டத்தில் பார்க்கிறவர்களுக்கு இரணியன் வதைப்படலம் ஒரு குறையாகப் படலாம். விறுவிறுப்பாக கதை நகர வேண்டிய கட்டத்தில், இரணியன் வரலாற்றை நீட்டி முழக்கிச் சொல்லுவது கதை ஓட்டத்தில் தொய்வு ஏற்படுகிறது என்று சொல்லுபவர்கள் உளர் ஆனால் இரணியன் வதைப்படலக் கருத்துகளின் சிறப்பையும் நயத்தையும் யாரும் மறுப்பதில்லை.

'எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி' என்று பாரதி புகழுவானே, அந்தப் பெரும் முயற்சியின் வடிவமைப்பே இரணியன் வதைப்படலம் கவிதைக்குள் அடக்க முடியாத பல கருத்துகளைக் கம்பன் அடக்கிக் காட்டும் போது, அவனது எல்லையில்லாக் கவியாற்றல் புலப்படுகிறது. வேதங்களும் உபநிடதங்களும் பேசும் அரிய செய்திகளைக் கம்பன் பேசும்போது அவனது ஞானம் வெளிப்படுகின்றது.

''தன்னுளே உலகங்கள் எவையும் தந்து அவை
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்'' என்று விரித்துச் சொன்ன கருத்தை ''ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான்'' என்று எளிய உவமையில் விளக்கும் அநாயாசக் கவியாற்றலில் நயம் தெரிகிறது, ஆனால், தன் கவியாற்றல் மட்டுமே வெளிப்படும் படியாகக் கம்பன் இதை எழுதியிருப்பதாக எனக்குப் படவில்லை. வான்மீகி சொல்லாத ஒரு செய்தியைச் சொல்லப்புகும் போது, வான்மீகியில் உள்ளக் குறையைத் தன் நூலில் நிறைவு செய்யவே கம்பன் 'இப்படலத்தை எழுதப் புகுந்தான் என்று தோன்றுகிறது.

காலனே புக அஞ்சும் கடிநகர் இலங்கையில் குரங்கு ஒன்று புகுந்து கலக்கி விட்டது; இராவணனை உலுக்கி விட்டது. இத்தகைய உஷ்ணமான சூழ்நிலையில் தொடங்குகிறது மந்திராலோசனை. சீதையை இராமனிடம் திரும்ப அனுப்பி விடுமாறு கூறும் வீடணன் மேல் இராவணன் கோபம் கொண்டு ''என் முகத்தில் விழிக்காதே! போய்விடு!'' என்று கூறித் துரத்தி விடுகிறான், என்று வான்மீகி எழுதுகிறார். இராவணன் சீதை மேல் வைத்த ஆசை தவறானது என்று பலர் பலமுறை இராவணனிடம் பேசியிருக்கிறார்கள். வீடணனே இதற்குமுன் பலமுறை இந்த அறிவுரையைச் சொல்லியிருக்கிறான். அப்போதெல்லாம் இராவணனுக்கு வராத அளவு இப்போது கோபம் வந்தது ஏன்? இந்த கேள்விக்கு வான்மீகியின் மூலம் விளக்கம் பெற முடியவில்லை. ஆனால், கம்பனின் இரணியன் வதைப்படலம் இராவணன், மனநிலையைத் தெளிவாகக் காட்டிவிடுகிறது.

இராவணன்-வீடணன் உறவு முறிந்து போவதை வலுவான ஒரு காரணம் இல்லாமல் கம்பனால் அனுமதிக்க முடியவில்லை. முன்பு சூர்ப்பணகை அங்கம் அறுபட்டு அலறிக்கொண்டு வந்த போதும் ''நீ செய்த குற்றம் யாது?'' என்று கேட்கும் அளவுக்குக் காரண காரியங்களை ஆராய்பவனாகக் கம்பன் இராவணனைப் படைத்திருக்கிறான். அந்த படைப்பைச் சிதைத்து விட கம்பனுக்கு விருப்பமில்லை. அறத்துக்குக் கட்டுப்பட்ட வீடணன் தானே உறவை அறுத்துக் கொண்டு விலகி விட்டான் என்று எழுதவும் இடமில்லை. எனவே, இராவணன் திருந்த வேண்டும் என்ற எண்ணத்தில் வீடணன் சொன்ன அறிவுரைகளே இராவணன் சினத்தை அதிகப் படுத்தின என்று அமைத்து விடுகிறான்.

'என்னையே நோக்கி யான் இந்நெடும்பகை தேடிக் கொண்டேன்!' என்ற செருக்கோடும், 'யாராலும் வெலப்படாய்' என்ற வரத்தோடும், நினைத்தது முடித்து நின்ற இராவணன் முன் எந்த அறிவுரையும் எடுபடாது. இந்த நிலையில் இராவணனைக் காட்டிலும் வீரமும் வரமும் பெற்ற இரணியன் அடைந்த முடிவை வீடணன் சொல்லத் தொடங்குகிறான்.

இராவணனைக் காட்டிலும் பன்மடங்கு வரமும் வலிமையும் பெற்றவன் இரணியன் என்று வீடணன் சொல்லும் போதே இராவணன் தன் மானம் அடிபடுகிறது. எவ்வுலகங்கட்கும் இறைவன் என்று போற்றப்பட்ட இரணியன், அவன் மகனாலேயே மறுக்கப்பட்டான். தான் பெற்ற வரத்தினால், அழிவு வரக்கூடிய அத்தனை வழிகளையும் அடைத்து விட்டதாக நினைத்தவனுக்கும் அழிவு வந்தது. தூண் பிளந்து உதித்த சிங்கப் பெருமான் முன் இரணியன் பெற்ற வரம் செல்லாததாகி விடுகிறது. இறுதியில் பிரகலாதன்
''கோமன்னவன் ஆகி மூவுலகும்
கைக்கொண்டான்''
என்று முடிக்கிறான் வீடணன்,

வீடணன் தன் உரையைத் தொடங்கிய விதமும், முடித்தவிதமும், இராவணன் மனத்தை மாற்றுவதற்குப் பதிலாக சந்தேகத்திற்கு உள்ளாக்கி விடுகிறது. பிரகலாதன் தந்தையை அழித்து அவனுக்குப்பின் அரசாட்சி பெற்றதுபோல் வீடணன் தன்னை அழித்துவிடப் பார்க்கிறான் என்ற எண்ணம் இராவணனுக்குத் தோன்றி விடுகிறது.

''பாழிசால் இரணியன் புதல்வன் பண்பு என
குழ்வினை முற்றி, யான் அவர்க்குத் தோற்றபின்
ஏழை நீ, என்பெரும் செல்வம் எய்தி பின்
வாழவோ கருத்து?''

என்று இராவணன் மனநிலையைக் கம்பன் காட்டுகிறான். தோல்வி என்பதை இதுவரை நினைத்துக் கூடப் பார்க்காத இராவணன் இப்போது நினைத்துப் பார்க்கிறான். அந்த அளவிற்கு வீடணன் உரை இராவணன் தன்னம்பிக்கையை அசைத்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். இதற்கு மேலும் வீடணனை உடன் வைத்திருப்பது நஞ்சினை உடன் வைத்திருப்பது போலாகி விடும் என்று உணர்ந்து விடுகிறான் இராவணன். ''என் கண் எதிரில் நிற்காதே! போய் விடு!'' என்று கூறிவிடுகிறான்.

''பழியினை உணர்ந்து யான் படுக்கிலேன் உனை
ஒழிசில புகலுதல் - ஒல்லை நீங்குதி
விழிஎதிர் நிற்றியேல், விளிதி'' என்றனன்
அழிவினை எய்துவான் அறிவு நீங்கினான்.

என்னும்போது இராவணன் வீடணனைத் துரத்தி விடுவதற்கு வலுவான காரணத்தைக் கம்பன் கற்பித்து விடுகிறான். தம்பி; தன்னையே அழித்து விடக்கூடும் என்ற எண்ணம் தோன்றிய பிறகும் வீடணனைத் துரத்தாமல் விட்டால் இராவணன் பாத்திரம் குறைபட்டு விடும்; தன் சொல்லைத் தவறாகப்புரிந்து கொண்டு ''கண்முன நிற்காது போய்விடு'' என்று கடிந்து கொண்ட பின்பும் வீடணன விலகாவிட்டால் வீடணன் பாத்திரம் குறைபட்டு விடும். இந்த நிலையில் தான் இராவணன் வீடணன் உறவு முறிந்து போகிறது என்று கம்பன் காட்டுகிறான்,

கம்பனின் இந்த உளவியல் சித்திரத்தில், இராவணன் என்னும் பாத்திரம் மேலும் கூர்மை அடைகிறது. 'வீடணன்' என்னும் பாத்திரம் மேலும் துலங்கி ஒளிபெறுகிறது. அங்கேதான், இருவரது பாத்திரப் படைப்பும் முழுமை பெறுகிறது. பிரிந்த உறவு இனி இணைய வாய்ப்பே இல்லை என்கிற உறுதியான நிலையில் கதைச் சூழல் தெளிவடைந்து அடுத்த கட்டத்தை நோக்கிச் சீராக நகர்கிறது.